விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (23.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின்

# தீர்மானம் நிறைவேறியது

## ஆதரவாக 24, எதிராக 15 நாடுகள் வாக்களித்தன

(ஜெனிவா), இலங்கையில் போர்க் காலச் சம்பவங்களின் போது நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரும் அமெரிக்காவின் தீர்மானம் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருக்கின்ற மொத்தமாக உள்ள 47 உறுப்பினர்களில் அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகள் வாக்களித்திருக்கின்றன. எதிராக 15 நாடுகள் இலங்கையை ஆதரித்திருக்கின்றன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தன. (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாத் தீர்மானத்தால் இலங்கைக்கு புத்துயிர் கிடைக்கும்

### ஹிலாரி கிளின்டன் நம்பிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 27 வருட யுத்தத்திற்கு பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு புத்துயிரளிக்கும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஒன்பது மேலதிக (24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு விபரம் ஒரே பார்வையில்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்துக்கு 24 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. 15 நாடுகள் எதிராகவும், 8 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தும் இருந்தன.

அந்த நாடுகளின் முழுப்பட்டியல் விபரம் (23ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவாக 15 நாடுகள் அதுவே போதுமானது!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(ஜெனிவா)



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 15 நாடுகள் இலங்கைக்கு சார்பாக வாக்களித்தமை பெரும் திருப்தி அளிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்த இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக நேற்று 24 நாடுகளும் எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன.

8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் 15 நாடுகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு பொறுப்புக்கூறுவதற்கு 3 வருட கால அவகாசம் வழங்கப்பட்டது

### ஐ.நாவின் அமெரிக்க தூதுவர் விளக்கமளிப்பு

(ஜெனிவா)

இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்ற பெரும் அவலங்களை ஏற்படுத்திய யுத்தம் முடிவுக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

இந்த மூன்று வருடகாலத்தின்போது நிலைத்திருக்கக் கூடிய தேசிய நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுவதற்கான தனது சொந்த மார்க்கத்தை வகுத்துக் கொள்ள இலங்கைக்கு போதிய கால அவகாசமும் வாய்ப்பும் காணப்பட்டது என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் எய்லின் சம்பர்லின் கூறினார்.



இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் (23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு வரவேற்பு

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை மீதான அமெரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் இப்பிரேரணையின் நிறைவேற்றத்தினை, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முதற்கட்டப் படியாகக் கூட்டமைப்பு கருதுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## இராணுவத்தை மீளப் பெறுங்கள்; ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனிவா)

தமிழர் பகுதியில் உள்ள இராணுவத்தை திரும்பப் பெற வேண்டும் என ஜெனிவாக் கூட்டத் தொடரில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சபையில் இலங்கையின் போர்க் குற்றம் குறித்து விவாதம் நடந்தது. இது குறித்து அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது. இத் தீர்மானத்துக்கு ஆதரவு கோரி நேற்று ஐ.நாவின் மனித உரிமைகள் குழுச்சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

47 நாட்டுப் பிரதிநிதிகள் பங்கெடுத்த இந்த விவாதத்தில் 24 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. இலங்கைக்கு ஆதரவாக 15 நாடுகள் வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தன.

இந்த விவாதத்தின்போது இந்திய பிரதிநிதி பேசியதாவது,

தமிழர் பகுதியில் புனரமைப்புச் செய்ய இலங்கைக்கு கால அவகாசம் (23ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிகளின் போராட்டம் வீணானது!

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் பிரதமர் டி.எம்.ஜயரட்ண தலைமையில் இடம்பெற்றது.

இதுதவிர அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியை சுற்றி வந்த (23ஆம் பக்கம் பார்க்க)

SINGER கிச்சன் சவாரி
சிங்கரில் சமையல் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் உங்களுக்கு
இலவசமாக
3 தினங்கள் மலேசியாவில் தங்கியிருப்பதற்கும் சென்று வருவதற்கும்
5 விமானச் சீட்டுக்கள் அல்லது 42" LCD TV கள் வீதம்
வெற்றிகொள்ளுங்கள்
ஒவ்வொரு ருபா.2500 கொள்வனவிற்கும் சீட்டிழுப்பிற்கான கூப்பன் ஒன்று
மாதம் 100 பரிசுகள் வீதம் 300 பரிசுகள் மே15 வரை மட்டுமே. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சங்கானை 077 2208232
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
கிளிநொச்சி 021 567 5677
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197
சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.புல்லுக்குளம் பகுதியில் போதைப்பொருட்கள் விற்பனை

## இருவரை மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புல்லுக்குளம் பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த தென்னிலங்கையினைச் சேர்ந்த வியாபாரிகள் இருவர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இக் கைது நடவடிக்கை நேற்று மாலை 3.00 மணியளவில் யாழ்.விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.புல்லுக்குளம் பகுதியில் இருவர் போதைப் பொருட்களுடன் உள்ளனர் என்றும், இவர்கள் விற்பனை செய்வதற்கே போதைப் பொருளைக் கொண்டு வந்துள்ளனர் என்றும் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையிலேயே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவில் உடைதரித்திருந்த பொலிஸாரினால் குறித்த இருவரும் கைது செய்யப்பட முன்னர் இருவரும் பொலிஸாரிடமிருந்து தப்பிப்பதற்கு தாம் கொண்டு வந்திருந்த ஹெரோயினை புல்லுக்குளத்திற்குள் எறிந்துவிட்டு தப்பிப் போவதற்கு முயற்சித்துள்ளனர்.

எனினும் பொலிஸாரின் அதிரடிப்படையினர் ஒருவர் புல்லுக்குளத்திற்குள் பாய்ந்து அவர்கள் கொண்டு வந்த கஞ்சாவினை மீட்டதுடன் குறித்த இருவரும் கைது செய்யப் பட்டதோடு அவர்கள் வந்திருந்த 100 சிசி மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன.


இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் 200 கிராம் வரை உள்ளதாகவும் இதன் மதிப்பு 8 லட்சத்துக்கும் மேற்பட்டது என பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களும் பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்ட போது இக்கடத்தல் அண்மைக்காலத்திலிருந்தே நடைபெற்று வருவதாகவும் இதற்கு பின்னணிச் சான்று உள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.

மேலும் புல்லுக்குளப் பகுதியில் புல்லுக்குளம் திருத்தியமைக்கப்பட்டதும் பொலிஸாரின் கண்காணிப்பு இல்லாததால் இவ்வாறான போதை பொருட் பாவனையும் கலாசார சீர்கேடுகளும் அதிகரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கதோடு கடத்தல்காரர்களின் மையமாகவும் புல்லுக்குளம் விளங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஏ-4)

# உரும்பிராய் இந்துவுக்கு புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)



யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரியின் புதிய அதிபராக (இலங்கை அதிபர் சேவை வகுப்பு-1) அ.அருணந்திசிவம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டு இன்று பதவியேற்கவுள்ளார்.

இவர் ஆவரங்கால் நட ராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் அதிபராகக் கடந்த 8 ஆண்டுகள் கடமையாற்றியிருந்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று சென்றதையடுத்தே உரும்பிராய் இந்துவுக்கு இவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-7)

# பெண்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று யாழில் கண்டனப் பேரணி

யாழ்.மாவட்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் நேற்று கண்டனப் பேரணியொன்று இடம்பெற்றது.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தே இந்தக் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணி கோவில் வீதி ஊடாக ஸ்ரான்லி வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் பேரணியில் கலந்து கொண்டவர்களினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் பெண்களுக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்ததோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண் டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தவிர இந்தப் பேரணியுடன் பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்துவோம் என்னும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகமும் நடத்தப்பட்டது.

பேரணியிலும், நாடகத்திலும் பெருமளவிலான பெண்கள் பங்கு கொண்டிருந்தனர்.

அத்தோடு வன்முறைகளுக்கு எதிரான சுலோகங்களையும் தாங்கியவாறு பெண்கள் பேரணியில் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ-6)

# தீர்மானம் நிறைவேறியது...

அமெரிக்காவின் பிரேரணையை எப்படியாவது தோற்கடித்துவிட வேண்டும் என்ற பிரசாரத்திலும் பேச்சு வார்த்தைகளிலும், இலங்கையின் பிரமுகர்கள் கடந்த பல வாரங்களாகவே தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் பிரேரணை நிறைவேறத் தேவையான குறைந்தபட்ச எண்ணிக்கையாக 24 நாடுகள் அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆதரித்திருக்கின்றன.

### யார்? எதற்கு வாக்களித்தனர்?

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்தவரை பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தும், எதிராக வாக்களித்தும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் என அந்நாடுகள் பிரிந்திருந்தன.

ஆனால், ஆசிய நாடுகளைப் பொறுத்த வரை இந்தியா மட்டுமே இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டில் வாக்களித்திருக்கிறது. சீனா, பங்களாதேஷ் உள்ளிட்ட மற்றைய ஆசிய நாடுகள் இலங்கையை ஆதரித்திருக்கின்றன.

லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பொறுத்தவரை கியூபாவும் ஈக்குவடோரும் பிரேரணையை எதிர்க்க மற்ற நாடுகள் எல்லாமே பிரேரணைக்கு ஆதரவாகவே நின்றன.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை ரஷ்யா மட்டும்தான் இலங்கைக்கு ஆதரவளித் திருக்கிறது.

மற்றப்படி மேற்கு ஐரோப்பிய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்துமே போர்க்காலச் சம்பவங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே தெரிவித்திருக்கின்றன.

பொதுவாக முஸ்லிம் நாடுகள் என்று எடுத்துக் கொண்டால் அண்மையில் கடாபிக்குப் பின்னர் ஆட்சி மாறிய லிபியாவைத் தவிர மற்ற நாடுகள் எல்லாமே ஒன்றில் அமெரிக்கப் பிரேரணையை எதிர்த்திருக்கின்றன.

அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் அமெரிக்காவுடன் நெருக்கமாக இருக்கின்ற சவுதி, கட்டார் மற்றும் ஜோர்தான் உள்ளிட்ட நாடுகளும் பிரேரணையை ஆதரிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதிக் கட்டத்தில் முஸ்லிம் நாடுகளை குறிவைத்து இலங்கை தனது பிரசாரங்களை முன்னெடுத்தமை இங்கு நினைவுகூரத்தக்கது.

### பின்னணி

இலங்கையின் இறுதிக்கட்டப் போர்க் காலத்தில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதாகவும் போர்க் குற்றங்கள் நடந்துள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் ஐ.நா.நிபுணர் குழு அவற்றை ஆராயும் விதத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அதற்கு இலங்கைத் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பும் கிளம்பியிருந்தது.

அதன் பின்னர் இலங்கை அரசு தானாகவே அமைத்துக் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் பல விடயங்களை ஆராய்ந்து தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தது.

இந்நிலையிலேயே இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகளை நடைமுறைப் படுத்த இலங்கையிடம் முறையான திட்டங்கள் எதுவும் இல்லையென்று சுட்டிக்காட்டிய அமெரிக்கா, அந்தப் பரிந்துரைகளை நடை முறைப் படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக முன்வைத்திருக்கிறது.

### தீர்மானம் கூறுவது என்ன?

இலங்கையில் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், போர்க் காலச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அந்தச் சம்பவங்களுக்கான பொறுப்பேற்கும் தன்மையையும் உறுதி செய்யப்பட வேண்டும் என அமெரிக்கா தீர்மானத்தில் சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையில் நீண்ட காலம் தொடர்ந்த போர் முடிபுக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப அதற்கு இருந்த கால அவகாசத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது அமெரிக்காவின் வாதம். இதற்காக கடந்த வருடங்களில் இலங்கையுடன் இணைந்து அமெரிக்கா பல முயற்சிகளை முன்னெடுத்ததாக சுட்டிக் காட்டுகிறது.

ஆனால், நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான முறையான அமுலாக்கத் திட்டம் இலங்கை அரசிடம் இல்லை என்ற அடிப்படையிலும் நல்லிணக்க ஆணைக்குழுவில் உள்ளடக்கப்பட்டிருக்காத போர்க் காலச் சம்பவங்களுக்கான பொறுப்பேற்கும் தன்மை குறித்த விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலுமே, தாங்கள் இந்த தீர்மானத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கொண்டு வந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேநேரம், நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான உயர் ஆணையாளரின் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றும்படியும் இந்தத் தீர்மானம் மூலம் அமெரிக்கா இலங்கையை கோரியுள்ளது.

சமத்துவம், சுயமரியாதை, நீதியை வழங்கக்கூடிய நிலையான அமைதியை இலங்கையில் ஏற்படுத்த இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவது அவசியம் என்றும் அமெரிக்க பிரதிநிதி ஜெனிவாவில் சுட்டிக்காட்டினார். (எ-11)


## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம் - 25.03.2012

மேற்படி **தவத்திரு வே. முருகேசு சுவாமி** அவர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் நடைபெற்றுவரும் கும் பாபிஷேக தினம் (25.03.2012) ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீ செல்வச் சந்நிதி வேற் பெருமானுக்கு 1008 சங்காபிஷேக நிகழ்வும், சண்முக அர்ச்சனையும் இடம்பெற்று நண்பகல் சுவாமி வீதியுர்வலத்துடன் நிறைவு பெறும். அன்றைய தினம் விசேட தவில் கச்சேரியும் இடம்பெறும். அத்துடன் எதிர்வரும் 30.03.2012 வெள்ளிக்கிழமை சுவாமி அவர்களின் 15ஆம் ஆண்டு குருபூசை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.



முருகேசு சுவாமி அவர்களின் அன்பர்கள் சார்பில்
ஆ. அருணாசலம்

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு. (7782)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக் கூட்டம் - 2012

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு.ந. இராஜதேவன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு: பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 07.04.2012 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உ. தவபாலன்
செயலாளர்

ந. இராஜதேவன்
தலைவர் (C-6128)

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை.
(சி/6075)

## செல்லா சினிமா-யாழ்ப்பாணம்




பல தடைகளைத் தாண்டி
17.03.2012 முதல்
10.30, 02.30, 06.30, 09.30,
ஆக்ஷன் கிங் அர்ஜுன்,
ரிச்சா, கபாலி நடித்த
மாசி
(C-6099)

## EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வழங்கும் அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

# இன்று ஒரு தகவல்

## கருப்பையின் உள்ளே...

நாம் இந்த உலகத்திற்கு வந்து சேர்வதற்கு முன்னர் ஒரு இடத்திலே சிறிய காலம் தங்கி இருந்தோமே அந்த இடம் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அது தான் கருப்பை என்ற அறை.

பத்து மாதங்கள் அங்கே இருந்து விட்டுத்தான் வந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிறது என்பது பற்றி யாருக்காவது நினைவு இருக்கிறதா? நிச்சயமாக இருக்காது.

ஆனால் இப்போது கேளா ஒலி வரைவுகள் மூலமாக அங்கே என்ன நடக்கிறது என்றெல்லாம் விபரமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

கருப்பையினுள் இருக்கிற குழந்தை கொட்டாவி விடுகிறதாம். விரல்களை சப்புதாம். கைக்கு எட்டுவதை பிடிக்குதாம். சோம்பல் முறிக்குதாம். கொட்ட கொட்ட விழிக்குதாம். முகத்தை கோணிக்குதாம். இவற்றை அனைத்தையும் ஒரு தொலைக்காட்சி திரையிலே பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு மருந்து விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

கருப்பையினுள்ளே சிசு ஒரு திரவத்திற்குள்ளே மிதந்துக் கொண்டிருக்கிறது. கைகளை நீட்டி தொப்புள் கொடியை பிடிக்கிறது. அதனுடன் சிறிது நேரம் விளையாடுகிறது. தாயின் இதயத்துடிப்பு செரிமானப் பாதையிலே ஏற்படும் சப்தங்கள் இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. தாயின் குரல் கேட்டதும் உணர்ந்து அதை கவனிக்கிறது.

தாயின் இதயத்துடிப்பு அங்கே டம்-டம் என்று கேட்டுக் கொண்டு இருக்குமாம். தாய் மூச்சு விடுவது புஸ்,புஸ் என்று கேட்டுக் கொண்டே இருக்கும்.

இதைத் தவிர வெளி உலகத்திலே உள்ள சத்தமும் உள்ளே கேட்கிறதாம்.

அதனால்தான் கருவுற்ற தாய்மார் இருக்கும் அறையிலே வானொலியோ-தொலைக்காட்சியோ அலறும் அளவுக்கு வைக்கக்கூடாது. அதன் சத்தம் கேட்டுக் கதைப்பதும் சரியான விடயமல்ல. சண்டைபிடிப்பது பிழை. சத்தம் கேட்கும் இடங்களில் இவர்கள் இருக்கக் கூடாது.

கருப்பையினுள் இருக்கும் சிசு அமைதியாக இருப்பதில்லை. வெளி உலகத்திற்கு வந்த பின்னர் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளேயே அது தன்னை தயார் படுத்திக் கொள்கிறது.

கருப்பையினுள் இருக்கும் குழந்தை மூச்சு விடுவதில்லை. இருந்தாலும் உதரவிதானம் மூச்சு விடுவது மாதிரி அசைந்து கொண்டே இருக்கும். அங்கே அது எதையும் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் கருப்பையிலே உள்ள திரவத்தை அது குடிக்கிறது. அப்படி அது குடிக்கும் போது ஒரு சில சமயம் அதுக்கு விக்கல் கூட ஏற்படும். அந்தச் சமயம் தாயாருக்கு வயிற்றுக்குள்ளே ஒரு தவளை குதிக்கிறது மாதிரி இருக்கும்.

சாதாரணமாக உள்ளே இருக்கிற குழந்தைக்கு பசியோ தாகமோ ஏற்படாது. ஆனாலும் தாயார் சாப்பிடும் உணவிலே சத்துப் பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துப்பற்றாக்குறை ஏற்படும்.

ஒரு சிசு கருப்பையிலே இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டை பாடிக்கொண்டே இருந்தால் சிசு அந்தப் பாட்டுக்கு ஏற்றால் போல் கை, கால்களை அசைத்துக் கொள்ளும். குழந்தை பிறந்தவுடன் அதே பாட்டைப் பாடினால் அழுகிற குழந்தையை அமைதிப் படுத்தி விடலாம்.

இதுவரைக்கும் சொன்னது மருத்துவர்களின் அறிவுரை. இனி விபரிப்பது நான் சொல்வது.

அதாவது தாலாட்டு யார் பாடுவது?

குழந்தை கருப்பையினுள் இருக்கும்போது தாயார் தாலாட்டுப்பாடுவதுதான் நல்லது. அப்போதுதான் அது சுகமாக காலை ஆட்டும். தந்தையர்கள் தாலாட்டுப் பாடினால் என்ன நடக்கும் தெரியுமா?

கருப்பையினுள் இருக்கும் குழந்தை ஒரு தீர்மானத்திற்குள் வந்து விடும். வெளியே வந்த பின்னர் தாலாட்டுவதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பித்துவிடும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அம்பகாமம் அ.த.க.வில் குரங்குகளால் தொல்லை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலையில் குரங்குகளின் அட்டகாசத்தால் மாணவர்களின் வகுப்பறைகள், ஆசிரியர்களின் கற்றல் செயற்பாட்டு உபகரணங்கள் அசிங்கப்படுத்தப்படுவதுடன் கிழித்து எறியப்படுகின்றதென பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவது,

இடப்பெயர்வின் பின் அம்பகாமம் கிராமத்தில் மக்கள் மீள் குடியேறிய நிலையில் குரங்குகளின் கூட்டமும் பெருகியுள்ளது.

தற்போது மக்கள் மீள்குடியேறிய நிலையில் விவசாயிகளின் பயன்தரு பயிர்களையும் சேதப்படுத்துவதுடன் இக்கிராமத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாலைவேளையில் வரும் குரங்குக் கூட்டம் கதிரை, மேசைகளில் மலசலம் கழிப்பதுடன் ஆசிரியர்களின் வகுப்பறைகளில் காட்சிப்படுத்தப்படும் கற்பித்தல் தொடர்பான ஆக்கங்களை கிழித்தெறிந்து சேதப்படுத்துகின்றன.

இதேவேளை இக்கிராமத்தில் உள்ள வரலாற்று புகழ்மிக்க மம்மில் பிள்ளையார் ஆலயத்தையும் அசுத்தப்படுத்துகின்றது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தங்களுக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு இப்பகுதி கிராமசேவையாளரிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(அ-3-15)

# தேசிய க.கல்லூரியின் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் வீர சங்கிலியன் மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி.டபிள்யூ.பி.ஆர். சில்வா, சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் எஸ்.முரளிதரன், முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் சற்.தாயுடீன், வடமாகாண அபிவிருத்திப் பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எவ்.எம்.ராவி மற்றும் கௌரவ விருந்தினராக லிவர்பூல் நவிகேசன் பிறைவேட் லிமிட்டட் தலைவர் எஸ்.வின்சன்ராஜா (ஜே.பி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# போதையால் விளைந்தது மூன்றுமாத சிறைவாசம்

மதுபோதையில் ஒருவரினை போத்தலால் அடித்து காயப்படுத்திய நபரொருவருக்கு யாழ்.நீதிமன்றம் 3மாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.கடந்த 18 ஆம் திகதியன்று யாழ்.கே.கே.எஸ் வீதியால் சென்றவரினை மறித்து வலுக்கட்டாயமாக சண்டைக்கு இழுத்து தலையில் போத்தலினால் தாக்கியுள்ளார். அருளப்பு தேவசீலன் நான்காம் வட்டாரம் மண்டைதீவினைச் சேர்ந்த குறித்த நபரினை யாழ்.பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்தநபருக்கு 6மாத கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ-2-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 55 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 35 | 25 | 30 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 30 |
| பூசணி | 30 | 30 | 25 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 35 | 20 | 20 |
| சின்ன வெங்காயம் | 60 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 45 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 60 |
| பயற்றங்காய் | 60 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 300 |
| போஞ்சி | 40 | 60 | 60 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 60 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 30 |
| வெங்காயப்பூ | - | 90 | 70 |

# இராசி பலன்

23.03.2012
(பங்குனி 10, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.16 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 12.19 மணிவரை
இராகுகாலம் 10.46-12.16 மணிவரை
சுபநேரம் 6.16-7.46 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** தொழில் நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற் கொள்ளும் சூழ்நிலை அமையலாம், கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக்குறைவுண்டு

**இடபம்** ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேலாக வருமானம் கிடைக்கலாம், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** அரசுவழியில் அனுகூலமுண்டு, எதிர்பார்த்த வருமானங்கள் கிடைத்து மகிழ்வீர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** மங்கையரால் ஏற்பட்ட மனக் கலக்கம் மாறும், உடல் நலம் சீராகும், ஆன்றோர் மூலம் ஆசி கிடைக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் உழைப்பில் ஈடுபர்டு கூடும்.

**சிங்கம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாணங்களில் பொருட்களில் கூடிய கவனமெடுக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** அபூர்வ சந்திப்புண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, பொருளாதார நிலை திருப்திதரும், விலகியவர்கள் விரும்பி வந்து இணைவர்.

**துலாம்** உடல் நலம் சீராகும்,தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், பகைவர்கள் விலகுவர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** செல்லவேண்டிய இடத்திற்கு செல்வதில் இடையூறுகள் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** கல்வியில் ஆர்வம் ஏற்படலாம், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், ரோக பயமுண்டு, வழிபாட்டில் நாட்டம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** இனிய அனுபவங்கள் கிடைத்து மகிழ்வீர்கள், கூட்டு முயற்சி வெற்றியளிக்கும், அந்நியர் சந்திப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, விருந்தினர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், வாக்கு மேன்மையுண்டு, குடும்பக் கவலையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்,தொழில் நன்மையுண்டு.

**மீனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, சயன சுகமுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், பொருளாதார நிலை திருப்திதரும்.

வளவன்







பெண்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று பெண்களுக்கு எதிரான வன்முறையை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி நல்லூர் கந்த சாமி கோவிலுக்கு முன்பாக பேரணியொன்று ஆரம்பமானதோடு விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. இந்தப்பேரணி மாவட்ட செயலகம் வரை சென்ற தோடு யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் இந்தப்பேரணியில் பங்கு கொண்டவர்கள் கையளித்தனர். (படங்கள்:- என்.குமார், அலுவலகச்செய்தியாளர்)

# நெல்சிப் திட்டத்தின் கீழ் 17வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (நெல்சிப்) 400 மில்லியன் ரூபா செலவில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் செப்பனிடப்படவுள்ள தாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள் ளார்.

யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத் தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு கார்பெற் இடுவது தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் வந்தவண்ணமுள்ளன.

மக்களின் நலனில் அக்கறை கொண்டு நாம் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இருப்பினும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக யாழ். மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை சிலர் விமர்சித்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மத்திய கிழக்கு வீதி முதலாம் ஒழுங்கை, இரண்டாம் ஒழுங்கை, குருநகர் மத்திய கிழக்கு, மத்தியூஸ் வீதி, வீரமாமுனிவர் வீதி, மத்தியூஸ் ஒழுங்கை முதலாம், 2 ஆம் ஒழுங்கை, கோவில் வீதி குண்டு குழி நிரவுதல், கச்சேரி நல்லூர் வீதி குண்டு குழி நிரவுதல், மூத்த விநாயகர் வீதி குண்டு குழி நிரவுதல், வைமன் வீதி குண்டு குழி நிரவுதல், பாசையூர் 2 ஆம் குறுக்குத் தெரு, சிறாம்பியடி வீதி குண்டு குழி நிரவுதல், மணல்தறை வீதி, ஓடக்கரை கிழக்கு ஒழு ங்கை, ஓடக்கரை மேற்கு ஒழுங்கை, பாலு டையார் வீதி, குருநகர் 3 ஆம் குறுக்குத் தெரு, ஆசிர்வாதப்பர் லேன் போன்ற 17 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## தாச்சிசுற்றுப்போட்டி

(கைதடி)

கைதடி விநாயகர் சனசமூக நிலை யத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தென் கிழக்கு விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி யின் இறுதி நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தாச்சிச்சங்கத் தலைவர் எஸ். சண்முகலிங்கம், சிறப்பு விருந்தினர் களாக தாச்சிச்சங்கத்தின் செயலாளர் கே. ஜினதாஸ். இதன் பொருளாளர் வி. ஆன ந்த ஜெஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

இன்றைய இறுதிப்போட்டியில் குழு 1 ஐச் சேர்ந்த உதயசூரியன் பி அணியை எதிர்த்து குழு 2 ஐச் சேர்ந்த வளர்மதி டி அணி மோதவுள்ளது என கழகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-2)

## மகளிர்தின விழாவும் கௌரவிப்பும்

(நல்லூர்)

நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத் தின் ஏற்பாட்டில் மகளிர் தின விழாவும் கௌரவிப்பு விழாவும் நாளை சனிக்கி ழமை காலை 10 மணிக்கு அனைத்துலக மகளிர் தின விழா மன்றத்தின் உப தலைவி திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப் பாளர் திருமதி சுமதி தனபாலசிங்கம் கலந்து கொள்வார்.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தா பக உறுப்பினர்களும் தலைவர், இணைப் பதிகாரி பதவிகளை வகித்தவர்களுக்குமான வலி. கிழக்கின் 2012 ஆம் ஆண்டிற்கான முதற்பெண்மணியாகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி ருக்மணி ஆனந்தவேல், மழலை களின் தாய் திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதாக நிர்வாகச் செயலாளர் அறிவித்துள் ளார். (அ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாட சாலையின் அபிவிருத்திச்சங்க வருடாந் தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடை பெறுமென பாடசாலை அதிபர் அறிவித் துள்ளார்.

இக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை நடைபெறவிருந்தமைகுறிப்பிடத் தக்கது. எனவே சகல அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள் ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# மருதங்கேணி கடற்பரப்பிலும் இந்திய மீனவர்கள் அட்டகாசம்

(கரவெட்டி)

மருதங்கேணி கடற்பரப்பில் நேற்றுமுன் தினம் காலை இந்திய மீனவர்களில் ரோலர் படகுகளினால் மீன்பிடி வலைகள் அறுக் கப்பட்டு உள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடற் பரப்பில் சம்பவதினம் அதிகாலை 5.30 மணிக்கு 7 பாக கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய ரோலர் படகுகள் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்து நாசமாக்கி உள்ளனர்.

மருதங்கேணி கடற்பரப்பில் தற்போது நிலவும் காலநிலையில் கீரை, சூடை, கும்பிளா போன்ற மீன்வகைகள் அதிகமாக பிடிக்கப்ப டுவதனால் இவ்வலை அறுக்கப்பட்ட போது இம்மீனவர்கள் பாரிய நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக மருதங்கேணி கடற் தொழிலாளர் சங்கத் தலைவரிடம் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)

## மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமாள் ஜிர்னோத்தரன மகாகும்பாபிஷேக பெரு விழாவின் பூர்த்தி மண்டலாபிஷேக விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பூஜைகள் ஆரம்பமாகி நடைபெறு மென ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருக்களுமான இராஜராஜ ஸ்ரீ நகுலேஸ் வரக்குருக்கள் அறிவித்துள்ளார்.

மண்டலாபிஷேகத்தினை தொடர்ந்து பிற்பகல் 2 மணியளவில் நகுலநாதன் மகா கும்பாபிஷேகம் மலர் வெளியீடும் வசந்த மண்டபப்பூஜை, திருவூஞ்சல் என் பனவும் இடம்பெறவுள்ளன. (அ-7)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணுவில், மருதனார் மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, கோண்டாவில், கோம்பையன் மணல் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்

(கரவெட்டி)

வல்லிபுரக்குறிச்சி தாமரைக்குளத்தடி பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியள வில் குடும்பஸ்தர் மீது இனந்தெரியாத நபர் கள் மேற்கொண்ட வாள்வீச்சு தாக்குதலில் குடும்பஸ்தர் பலத்த வாள் வெட்டு காயங் களுடன் பருத்தித்துறை ஆதாரவைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

தனது வீட்டில் இருந்து தொழிலுக்காக வல்லிபுரக்குறிச்சிக்கு சென்ற வேளை தாமரைக்குளத்தடியில் பின்தொடர்ந்து சென்று வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் குறித்த குடும்பஸ்தர் மீது வாள் வீச்சை மேற்கொண்டுள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான பிரஸ்தாப குடும்பஸ்தர் அப்பகுதி மக்களிடம் தன்னை வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு மன் றாடியும் எவரும் முன்வராதவேளை இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு வந்த பொலி ஸார் அப் பகுதி இளைஞர்களின் உதவியுடன் வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

இச்சம்பவத்தில் அல்வாய் கிழக்கு அத் தாய் பகுதியை சேர்ந்த துரைராசா, மகேந் திரன் (வயது-41) என்ற குடும்பஸ்தரே வாள் வெட்டுக்கு இலக்காகியவராவார்.

இச்சம்பவம் பழைய பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படு கின்றது. (அ-3-24)

# இசைச்சங்கமம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல் கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற் பாடு செய்யப்பட்டுள்ள இசைச்சங்கமம் 2012 நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யில் இடம்பெறவுள்ளதாக வடமாகாண பண் பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் செய லாளர் சி. சத்தியசீலன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தி னராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள் ளார்.

இந்நிகழ்வு இசை ரசிகப் பெருமக்களு க்கும் இசையை பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர் களுக்கும் மிக்க பயனுடையதாகும்.

கர்நாடகம், ஹிந்துஸ்தான், கிராமிய இசை, தமிழிசை என்பன பல்வேறு இசைகளின் சங்கமமாக இந்நிகழ்வு அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)





கிளி/மட்டுவில் நாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தருமரத்தினம் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் விளையாட்டு வீரர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வையும்) படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரிச்செய்தியாளர்

# மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் செல்வி கோசலை மனோகரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். டனிஸ் அகதிகள் பேரவை தலைமை அதிகாரி எம்.பி. தினேசன், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஈ ஞானசோதி , கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந. அ. ஜெயராஜன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# வலி. கிழக்கு பிரதேசசபை மக்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அதிகளவில் கட்டட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அதன் இடிபாடுகள் பெருமளவில் பொது இடங்கள், வீதிகள் போன்ற இடங்களில் பொதுமக்களால் கொட்டப்பட்டு வருகின்றது.

எனவே இவ்வாறு கொட்டுவதனை தவிர்த்து மக்கள் தத்தமது பிரதேச சபை உப அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பிரதேச சபையினால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை வலிகாமம் கிழக்கு தவிசாளர் அறிவித்துள்ளார். (அ)

# நிசாந்தனின் வெற்றிடத்திற்கு ரமணன் பரிந்துரை

யாழ்.மாநகரசபையின் புதிய உறுப்பினராக செல்வராஜா ரமணன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். நிஷாந்தன் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து அவரின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக செல்வராஜா ரமணன் நியமிக்கப்படவுள்ளார் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சபையின் சட்டதிட்டங்களை மீறியதன் காரணமாகவே ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு முன்னாள் உறுப்பினர் எஸ்.நிஷாந்தன் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். அவரது பதவிக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிட்ட செல்வராஜா ரமணன் நியமிக்கப்படவுள்ளார். இதற்கான அறிவித்தல் மிக விரைவில் அரச பத்திரிகையான வர்த்தமானியில் வெளியிடப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# லலித்குமார், குகன் கைது செய்யப்பட்டனரா?

# மார்ச் 30 வரை நீதிமன்றம் அவகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன நாம் இலங்கையர் இயக்கத்தின் தொண்டர்களான வீரராஜா லலித்குமார் மற்றும் கிட்ணன் முருகானந்தன் குகன் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு கடந்த புதன்கிழமை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த இருவரும் கைது செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ள அல்லது மறுக்க இராணுவத் தளபதிக்கும் யாழ்ப்பாண இராணுவத் தளபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் மார்ச் 30 ஆம் திகதி வரை இறுதி அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பேச்சாளரரான கெஹலிய ரம்புக்வெல 2011 டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற பத்தரிகையாளருடனான சந்திப்பின் போது ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில்,

இவர்கள் காணாமல் போகவில்லை. தடுப்பில் உள்ளனர் என கூறினார்.

இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படக் கூடும் எனவும் கூறினார் என மனுதாரர்கள் கூறியுள்ளனர். (ந-8-11)

# உடுத்துறையில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(கரவெட்டி)

உடுத்துறைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனை மிகமோசமான நிலையை அடைந்துள்ளதாகவும் அப்பகுதியில் சண்டை சச்சரவுகளும் பதற்றநிலையும் அடிக்கடி இடம் பெறுவதாகவும் அப்பகுதி வாழ் மக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதி அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடமாகும்.

இயல்பு வாழ்க்கைக்கு இன்னும் திரும்பாத அம்மக்கள் பல கஷ்டங்களையும் துயரங்களையும் சந்தித்து அனுபவிக்கும் வேளையில் கசிப்பு உற்பத்தியாளர்களின் திருவிளையாடல் மிகவும் கவலையளிப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் மாலை நேரங்களில் கசிப்பை அருந்திவிட்டு அப்பகுதியில் அடிதடியில் ஈடுபடுவதுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே இச்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அப்பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் உரிய தரப்பினருக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# றொபேட் ஓ பிளேக் எஸ்.எம்.எஸ்.மூலம் பிரபாகரனை மீட்க முயற்சி செய்தார்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)



அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் போரைத் தடுப்பதற்கு பல்வேறு வழிகளில் முயற்சி செய்தன.

இந்த நிலையில் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபோட் ஓ பிளேக் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு எஸ்.எம்.எஸ். அனுப்பி பிரபாகரனை மீட்க முயற்சி செய்தார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதிக்கு அழுத்தங்களை பிரயோகித்தனர். இந்த எந்தவொரு அழுத்தத்திற்கும் ஜனாதிபதி அடிபணியவில்லை.

நந்திக்கடல் போர் பற்றி மக்கள் அறிந்திருந்த போதும் சமகாலத்தில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச இராஜதந்திர போர் பற்றி பலருக்குத் தெரியாது. சரியான தீர்மானங்களை எடுக்காத காரணத்தினால் இதற்கு முன்னர் ஆட்சி செய்த தலைவர்களினால் போரை வெற்றி கொள்ள முடியவில்லை என அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# ஈரான் அரசின் வணிகக்கப்பல்கள் இலங்கை தேசிய கொடியின்கீழ் பதிவு

(கொழும்பு)

ஈரான் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஈரானுக்குச் சொந்தமான நான்கு வணிகக் கப்பல்கள், இலங்கை தேசியக் கொடியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஈரானுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளிலிருந்து நழுவிச் சென்று பொருட்களை விநியோகித்து கொள்வதற்காகவே இந்த இரகசிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 6 கப்பல்களை இலங்கை தேசியக்கொடியின் கீழ் பதிவு செய்வதற்கு ஜனாதிபதி செயலகம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)


கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

வருடாந்த மஹோற்ஸவ விஞ்ஞாபனம்



கர வருஷம் 2012

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடறிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவோம்.



அம்பிகை அடியவர்களே!

நிகழும் சுபமங்களகரமான கர வருஷம் பங்குனித்திங்கள் 11 ஆம் நாள் (24.03. 2012) சனிக்கிழமை முதல் பங்குனித் திங்கள் 25 ஆம் நாள்(07.04.2012) சனிக்கிழமை வரையான (15) பதினைந்து தினங்கள் மஹோற்ஸவ விழாவும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் சாந்தி, அன்னதானம் என்பனவும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. திருவிழா காலத்தில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வணங்கி அருளைப் பெறு வீர்களாக.

கிரியாகால விபரம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : 24.03.2012 | சனி காலை10.00 மணி |
| தினசரி உற்ஸவம் | : | காலை7.30 மணிக்கு அபிஷேக ஆரம்பம், காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை |
| வேணுகோபாலர் உற்சவம் | : 04.04.2012 | புதன் காலை 6.00 மணி |
| சப்பறம் | :05.04.2012 | வியாழன் காலை 9.30 மணிக்கு கர்ப்பூரச்சட்டி வழிபாடு மாலை 6.00 மணி சப்பறத் திருவிழா |
| தேர் உற்ஸவம் | :06.04.2012 | வெள்ளி காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப்பூஜை, காலை 8.00 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல், காலை 10.30 மணிக்கு தேரால் அவரோகணித்தல், தொடர்ந்து நவசக்தி அர்ச்சனையும் பிராயச்சித்த அபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு திருவிளக்குப் பூசையும் தொடர்ந்து மாலை திருவிழாவும் |
| தீர்த்தோற்ஸவம் | :07.04.2012 | சனி காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப்பூஜை தொடர்ந்து தீர்த்தோற்ஸவம் மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கம் சண்டேஸ்வரி உற்ஸவம் தொடர்ந்து ஆச்சாரிய சம்பாவனை |
| பிராயச்சித்த அபிஷேகம் | :08.04.2012 | ஞாயிறு காலை 10.0 மணி |
| பூங்காவனம் | :08.4.2012 | ஞாயிறு மாலை4.30மணிக்கு அபிஷேகமும் பூஜையும் தொடர்ந்து திருவூஞ்சலும் திருவுலாவும் நடைபெறும் |
| வைரவர் உற்ஸவம் | :10.04.2012 | திங்கள் மாலை 5.00 மணிக்கு வைரவர் உற்ஸவம் |
| அன்னதானம் | : 10.04.2012 | செவ்வாய் நண்பகல் 12.00 மணி |

ஆலய பரிபாலன சபை (சி-6127)

## வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வ்ழங்கும் மாபெரும் படைப்பான *வேள்வித் திருமகன்* திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை மட்டும் இரவு 7.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இந்த நான்கு நாள் காட்சிகளும் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளன. (அ)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இந்து நாகரிகம், கிறிஸ்தவ பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலர்மர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். 12,13 ஆகிய தரங்களுக்கு இந்து நாகரிகம், கிறிஸ்தவ பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச்செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் பாடசாலைகளுக்கு ஏற்கனவே பாடம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் கைநூலையும் கொண்டு வருமாறு அவர் ஆசிரியர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-3-15)

## குவைத் கட்டட பணியில் ஈடுபட்ட இலங்கையர் பலி

குவைத் அஹமதி நகரில் பல்கூட்டு மாடிக் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த போது கால் தவறி கீழே விழுந்து இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பலியாகியுள்ளார்.

கிண்ணியா 4 குட்டிகராச்சியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அலிபுஹான் பஸீர் (வயது 35) என்ற நபரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இவரது ஜனாஸா நல்லடக்கத்தை குவைத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குவைத்தில் இருக்கும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# அரசின் ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராகவே சர்வதேசம் செயற்படுகின்றது

## சுஜீவ எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**புலிகளின் தலைவர் பிரபாகரனை கொலை செய்ததற்காக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்படவில்லை. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத ஆட்சிக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் எதிராகவே சர்வதேசம் செயற்படுகின்றது. அரசாங்கம் ஜெனீவா பிரச்சினையை அரசியலாக்கி மக்களின் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்கக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.**

7 ஆயிரத்து 500 ரூபாவால் மூன்று நாய்க்குட்டிகள் கூட சீவிக்க முடியாது. இந்நிலையில் ஒரு குடும்பத்திற்கு தாராளமாக 7 ஆயிரத்து 500 ரூபா போதும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியமை வேடிக்கையாகும். இது அரசின் முட்டாள்தனத்தையுமே வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் அடுத்த லிபியாவாகவே இலங்கை மாறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே சுஜீவ சேனசிங்க இதனை கூறியுள்ளார். நாட்டில் சட்டம், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவை படுமோசமான முறையில் அழிந்து போயுள்ளன.

அரசியல் நலனுக்காகவும் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காகவும் அரசு ஜெனீவா பிரச்சினையை பயன்படுத்து கிறது.

பிரபாகரனை கொலை செய்ததற்காகவே ஐ.நா. உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றன என அரசு பிரசாரம் செய்கின்றது.


இதில் உண்மையில்லை என்பதை பொது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறே ஐ.நா.கூறுகின்றது. இதனை செய்வதில் அரசிற்கு என்ன பிரச்சினையுள்ளது. ஒன்றுமேஇல்லை.

நாட்டில் இராணுவ ஆட்சி காணப்படுவதையோ வடக்கு மக்கள் தொடர்ந்தும் அச்சத்தில் வாழ்வதையோ அனுமதிக்க முடியாது. அதேபோன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் சிவில் நிர்வாகம், அரசியல் தீர்வு என்பன அத்தியாவசியமான விடயங்களாகும்.

இதனை அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், தனது நிர்வாணத்தை மறைத்துக் கொள்ள ஜெனீவாவை அரசு பயன்படுத்துகின்றது என சேனசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# மேற்கத்தேய நாடுகளின் சூழ்ச்சிகளை எதிர்கொள்ள இலங்கை அரசு தயார்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகள் எம்மீது இவ்வளவு இறுக்கமான நடவடிக்கையை மேற்கொள்ள நாம் செய்த தவறு என்னவென்று புரியவில்லையென பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கண்டி கெட்டம்பேயிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் ,

இதன் பின்னணியில் இரகசியமொன்று இருப்பது தெளிவாகின்றது. எமது தாய்நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அதுவே இக்கட்டான இந்நேரத்தில் நாம் பொறுமை காப்பதாகும். தற்போது சர்வதேச ரீதியாக எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்திற்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும் ஒரே கருத்தை கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளினால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள சூழ்ச்சியை எதிர்கொள்ள நாம் தயாராகியுள்ளோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அர சாங்கம் தற்போது ஆராய்ந்து வருகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மூன்று பிரிவுகளின் அடிப்படையில் தற்போது ஆரா ய்ந்து வருகின்றார்.

அரசியல் ரீதியில் எமக்கிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் நாடு என்ற வகையில் எமக்கு எதிராக ஏதாவது சவால்கள் ஏற்படுமாயின் அதனை எதிர் கொண்டு வெற்றி பெற அனைவரும் ஒரு பொது நோக்கத்தின் கீழ் இணைய வேண்டும். இதனைத் தவிர வேறெந்த வழியும் கிடையாது.

நாட்டில் தலைவர்கள் மாறலாம். கட்சிகள் மாறலாம் . அரசாங்கங்கள் மாறலாம். வெற்றி, தோல்விகள் ஏற்படலாம். ஆனால், எமது இறைமை, சுதந்திரம், தன்னாதிக்கம் என்பவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். (அ-2)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
March 2012 to August 2012
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம். மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.03.2012
(7775)

# பரிகார பூஜைக்காக அரசரின் வாள் கொண்டு செல்லப்பட்டதா?

## திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி

(கொழும்பு)

தேசிய நூதனசாலையில் இருந்து கண்டி இராஜதானி அரசர்கள் பாவித்த பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பாக பரஸ்பர விரோதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதால் சந்தேகம் எழுந்துள்ளது என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரசரின் வாள் ஏதோவொரு பரிகாரப் பூஜைக்கு கொண்டு செல்லப்பட்டதாக சந்தேகம் எழுந்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தேசிய நூதனசாலையில் கண்டி இராஜதானி மன்னர்கள் பாவித்த வாள், மோதிரங்கள் மற்றும் புராதன நாணயங்கள் திருட்டுப் போன சம்பவம் தொடர்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


திருட்டுப்போன பொருட்கள் இலங்கை வரலாற்றுடன் தொடர்புபட்ட மரபுரிமைப் பொருட்களாகும். எனவே, வெறுமனே கண்டும் காணாமல் இருந்து விட முடியாது. நூதனசாலையிலுள்ள பாதுகாப்பு கமராக்கள் நன்றாக இயங்கியதாக அதன் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

ஆனால், மரபுரிமைகள் தொடர்பான அமைச்சர் ஜகத் பாலசூரிய கமராக்கள் இயங்கவில்லையெனக் கூறுவதோடு இரண்டொரு நாட்களில் கண்டுபிடித்து விட முடியும் என்கிறார். அமைச்சர் இவ்வாறு நிச்சயித்து பொருட்களை கண்டு பிடிக்க முடியும் என எதிர்வுகூறலாம்.

பொருட்கள் காணாமல் போனது தொடர்பில் பரஸ்பர முரண்பாடுகளான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அத்தோடு அரசரின் வாள் பரிகாரப் பூஜைக்காக கொண்டு செல்லப்பட்டதாகவும் ஒரு கதை உலாவுகின்றது.

எனவே, உண்மையை கண்டறிந்து பொருட்களை கண்டு பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியாது என்றும் தெரிவித்தார். (அ-7)

# வாழ்வில் எது மதிப்பு மிக்கது?



இரண்டு விதமான ஞானம் தேடுபவர்கள்- சாதகர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையான ஞானம் தேடுபவர்கள் அறிவைக் கிரகித்து, அதை ஜீரணித்து, அதன்படி செயற்படும் திறன் கொண்டவர்கள். மற்றொரு வகையினர் தெரிந்தே தவறுகள் செய்து விட்டுப் பின்னால் அதற்காக வருத்தப்படுபவர்கள். இதுவும்கூட ஒரு விதத்தில் நல்லது தான். அதாவது, இரண்டாவது வகை சாதகர்கள்-தங்கள் தவறை நினைத்து வேதனைப்படுவார்கள். இவர்களும் கூட பக்தி மார்க்கத்தில்தான் இருக்கிறார்கள். ஏனெனில், எதைச் செய்திருக்கவேண்டுமோ, அல்லது செய்துகொண்டிருக்கவேண்டுமோ அதைச் செய்யாததின் வலி அவர்களைத் தங்களுக்குள் ஆழ்ந்து போகச் செய்யும். நீ உன் தவறை மூடி மறைத்து, "இப்போது என்ன நடந்துவிட்டது? நான் நல்லதைத் தான் செய்தேன்!" என்று பேசினால், நீ துளி உறுத்தலைக்கூட உணர மாட்டாய்! நீ அதைத் தவறு என்று புரிந்துகொண்டு உன் இயலாமையை, பலவீனத்தை உணர்ந்தாயானால், அந்த உணர்வு உன்னுள் தேடுதலைக் கொண்டுவரும். உன்னில் வழிபாட்டு உணர்வைக் கொண்டுவரும். உன் இதயம் கதறும் "ஓ... தயவுசெய்து எனக்கு உதவிசெய்" அந்தத் "தயவு செய்து" உன் இதயத்திலிருந்து வருகிறது. அது அந்தப்பாதையில் படிக்கல்லாக மாறும். அப்போது, எது உன்னை உறுத்திக் கொண்டிருந்ததோ, அது உன்னிலிருந்து ஒழிவதை நீ பார்ப்பாய்! அந்த "தயவுசெய்து" உன் இதயத்தின் அழத்தில் எழ வேண்டுமென்பதாகவே காத்துக் கொண்டிருந்தது. ஆகவே, நீ உதவிக்காகக் கதறும்போது, எந்தப்பழக்கம் உனக்கு இருக்கக்கூடாது என்று நீ விரும்பினாயோ அது உன்னிலிருந்து ஒழிவதை நீ உணர்வாய்.

தெய்வீகம்- நீ அதற்காகக் கதறும் போது, உன் இதயம் பாடும்போது, உன்னுள் உதயமாகிறது என்று சொல்லப்படுகிறது. நீ துதி பாடும் போது, நீ தெய்வீக அன்பை மிக விரைவில் மீண்டும் உணர்வாய். அது ஒருவரின் அனுபவத்திற்கு வருகிறது. ஒன்று நிச்சயம். தெய்வீகம், நீ உனக்குள் மேலும் மேலும் ஆழ்ந்து செல்ல வேண்டும் என்று காத்துக்கொண்டிருந்தது- அவ்வளவுதான்- ஏனெனில் அப்போதுதான் கடவுளால் உன்னை அதிக அமிர்தத்தால் நிறைக்கமுடியும். நீ ஆழ்ந்து செல்லச் செல்ல அதிக அளவு நீ அமிர்தத்தால் நீ நிரப்பப் படுவாய். உனக்கு அதிகம் தருவதற்காக தெய்வம் காத்துக்கொண்டிருந்தது. அது உனக்குள் உள்ளத்தின் திறந்த வெளியை உருவாக்க விரும்பியது. ஆன்மாவிலிருந்து, ஆழத்திலிருந்து உதவிக்காக கதறியழு, இது அந்தப் பலவீனமான சாதகர்களுக்கானது. பலமுள்ள சாதகர்களுக்கு அறிவின் பலம் இருக்கிறது- அப்போதுகூட நீ ஆனந்தத்தில் பாடுவாய்- நீ அடைந்துள்ளவற்றிற்காக உன் இதயத்தில் நன்றியுணர்வுடன் பாடு- கடவுளின் புகழைப்பாடும் அந்தக் கணத்தில் உடனே அது உன்னில் உதயமாகும்- உன்னை மீண்டும் நிரப்பும்.

இரண்டு கோணங்கள் இருக்கின்றன. ஒன்று ஞானம் தேடுபவர். அவர், தன் வளர்ச்சிக்கும், பெற்றிருப்பவை அனைத்திற்கும், தன் அறிவிற்கும் நன்றியுணர்வு உடையவர். மற்றவர், தன் பலவீனத்தாலேயே நலிந்தும், உதவியற்ற நிலையிலும் இருப்பவர். இரு சாராரும் தங்கள் இதயத்திலிருந்து இசைக்கும்போது வளரலாம். ஏனெனில், அந்த கீதம் வலிவேதனையுடன் கூடியதாக அல்லது மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் கூடியதாக இருப்பதால்- தெய்வீகம் மலர்ந்து அனுபவங்கள் கிடைக்கப்பெறுகிறார்கள்.

இந்த உலகின் அனைத்து உண்மைகளிலும் அன்புதான் அதிமேன்மையானது. தெய்வீக அன்புதான் உன்னதமானது. ஏனெனில், நீ எதைச் செய்தாலும், எவ்வளவுதான் நேர்மையான செயலாக இருந்தபோதிலும், அதில் அன்பில்லையானால், அது பயனற்றையது. உன்னிடம் நிறைய அறிவு இருப்பதாகக் கொள்வோம். அந்த அறிவு, உன்னுள் அன்பையோ, விழிப்புணர்வையோ, ஏற்படுத்தவில்லையானால், எந்தப் பயனும் இல்லை. உன்னிடம் நேசம் இல்லையென்றால், எப்படி உன்னிடத்து அறிவு இருக்க முடியும்? நீ வானவியலைநேசித்தால் நீ அதற்குள் ஆழ்ந்து செல்வாய்; கிரகங்களைப் பற்றியும், அவை சுற்றி வருவதைப் பற்றியும், வானவியலைப்பற்றியும் விரிவாக அறிந்து கொள்வாய். உனக்கு பௌதீகம் பிடித்தால், நீ பௌதீகவியலில் ஆழ்ந்து போவாய். ஏனெனில், அங்கு நேசமிருக்கிறது. அதனால், உன் அறிவும் வளரும் பௌதீக உண்மைகளை அதிகம் உணர, உணர, உன் இதயத்தில் அன்பு பாய்ந்துவரும்; நேசம் மிகும்; வியப்பு வரும்; "ஓ... என்ன அற்புதமான சிருஷ்டி" நிலையான உண்மைகளில் அன்பு மட்டும் நிலைத்து நிற்கிறது. அதுதான் மிக முக்கியமானதும்கூட.

அன்பு என்றால் என்ன?

அன்பு என்பது வெறும் உணர்ச்சியல்ல. "ஓ... நான் உன்னை அதிகம் விரும்புகிறேன்!" அது அன்பு அல்ல. அன்பு அங்கு வேற்றுமையைக் காணாது. நான் தான் நீ; நீ என்னில் ஒரு பகுதி; நான் உன்னில் ஒரு பகுதி; அந்த ஒருமையை உணர்வது தான் அன்பு... அது

## ஆன்மீகம் 14

வெறும் புத்தி பூர்வமான புரிந்து கொள்ளல் அன்று, ஆனால், அனுபவ நிலைக்கு வந்து, பிறகு அந்நிலையிலேயே வாழ்தல்.

வாழ்க்கையை இலகுவாக மகிழ்ச்சியுடன் வாழ்வது ஆன்மீகம். ஆன்மிகம் சில சடங்குகள் மட்டுமல்ல. எதையாவது பிரத்யேகமாகச்செய்தலும் அல்ல. அது உன்னுடைய இருப்பின் ஆனந்தமானநிலை. உனது இருப்பின் உயர்வானநிலை- இந்த முழு உலகையும் ஒரு மாபெரும் சக்தியாகக் காணும்நிலை.


இவையெல்லாம் மெய்யுணர்வின் (பேருணர்வின்) வெளிப்பாடுகள்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

அனைத்தும் பேருணர்வு. பூக்கள் பூக்கின்றன- அந்த மலர்கள் பேருணர்வு- மரங்கள் பேருணர்வு- மனிதர்கள் பேருணர்வு- மனிதர்கள் அனைவரும் பேருணர்வு- ஒரு மனம்- ஒரு பெரிய மனம் இருப்பதைப் பார்த்தல்- அனைத்து மனிதரிடத்தும், அனைத்து மிருகங்களிடத்தும் ஒருமையைக்காணுதல்- அதுதான் ஆன்மீகம்- அதுதான் அன்பு- அதுவே வாழ்வின் சாரம்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 14




### சனி மேட்டிலுள்ள ரேகை குறிகளின் பலாபலன்கள்

சனி ஆதிக்கமுள்ளவர் அபகீர்த்தி, அபஜெயம் நேரிட்டபோது அதற்கு மனோசாந்தி மரண வாயிலிருப்பதாய் உணர்வார்கள்.

குற்ற இலாகாவில் தொந்தமுள்ளவர்கள் முக்கியமாய் சனி, புதன் அதிக்கமுள்ளவர்களாயிருப்பார்கள். ஜெயில் வாசம் செய்பவர்களும் மேற்குறிப்பிட்ட கிரக ஆதிக்கம் உடையவர்களே. கைதியாயிருக்க விதிவசமில்லாது போயினும் பழக்க வாசனையினால் அத்தொடர்பு உண்டாகிறது.

சனி ஆதிக்கம் நீண்ட யோசனையைக் கொடுக்கும். அவர்கள் தேச நன்மைக்கான வழியில் தங்களைத் தியாகம் செய்து உயிரைச் சற்றும் மதியாது, மக்களின் நன்மைக்கே சதா காலமும் உழைத்து அழியாக் கீர்த்தி பெறுவர்.

### சூரியமேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்.

மோதிர விரலான மூன்றாம் விரலின் அடிப்பாகம் சூரியமேடாகும். ஒருவர் கையில் இது கம்பீரமாயும் உயரமாயும் இருந்தால், அவர் சூரிய ஆதிக்கம் பெற்றவர் என கருதவேண்டும். அவர் கையில் சூரிய மேட்டில்,

1. ஒரு நீண்ட இரேகை இருந்தால், அவருக்குப் புகழ் கீர்த்தி, செல்வம் முதலியவைகள் உண்டாகும் என்பதை அது குறிக்கும்.

2. ஒரே அளவில் இரண்டு இரேகைகள் காணப்பட்டால், அவர் நல்ல அறிவு படைத்திருந்தும், அவருக்குச் சொற்ப வருமானம் வருவதை அவை குறிக்கும். ஒரு ரேகை அழுத்தமாயும் மற்றொன்று மெல்லியதாயும் இருந்தால், நல்ல இலாபம் வருவதை அவை குறிக்கும்.

3. சிக்கலான அநேகம் துண்டு இரேகைகள் நெருக்கமாயிருந்தால், அவை சித்திரம் எழுதுவதில், அவர் புத்தி நாட்டமுடையவர் என்பதை குறிக்கும். சித்திரம் எழுதுவதில் வல்லவராய் இருப்பதற்கு வேண்டியவாறும் கையில் இரேகைகள் சரிவர அமையாதிரிப்பதால், அத்தொழிலிலும் தடைஏற்படும். மற்றும் பணம் சம்பாதிப்பதற்காக அவர் பலவகைப் பிரவிர்த்தியிலும் ஈடுபட்டு உழைத்தாலும், அவருக்கு இலாபம் வராது என்பதையும் அவை குறிக்கும்.

### ரேகைகளும் கிரகங்களும்

4. புள்ளி காணப்பட்டால் அவருடைய செல்வாக்கும் கீர்த்தியும் நீங்கிப்போம் என்பதை அது குறிக்கும்.

5. ஒரு இரேகையும் அதற்கு மேல் ஒரு கிராஷும் இருந்தால், அவருக்கு உண்டாகும் ஜெயப்பிரதாபத்தை அவை குறிக்கும். அவர் மதப் பற்றுடையவர் என்பதையும் அவை குறிக்கும். இரேகை இல்லாது கிராஷ் மட்டும் இருந்தால், அவர் மத சம்பிரதாயச் செய்கைகளில் பிடிவாதம் உள்ளவராய் இருப்பார் என்பதையும் அவை காட்டுவதாகும்.

6. ஒரு இரேகையும் அதற்கு மேல் ஒரு நட்சத்திரக்குறியும் இருந்தால், அவர் சிறந்த புத்திமானாகவும் சிரமப்பட்டு வேலைசெய்பவராகவும் இருப்பார் என்பதையும், அதனால் அவருக்கு பெரும் புகழும் பொதுவாகச் செல்வமும் பெருகும் என்பதையும் அவை குறிக்கும்.

7. ஒரு நட்சத்திரக்குறியின் நீண்ட இரேகையும் சில இரேகைகளும் காணப்பட்டால், அவருக்குப் பரம்பரையான கீர்த்தியும் அளவற்ற செல்வமும் இருக்கும் என்பதை அவை குறிக்கும். பண்டைக்காலத்தில் அவைகள் கீர்த்தி இரேகை எனக் கூறப்பட்டன.

**சக்தி**

8. இரேகையில்லாமல் ஒரு நட்சத்திரக் குறி மட்டும் இருந்தால், பல காலம் கஷ்டப்பட்டு பிறகு அவருக்கு கீர்த்தியுண்டாகும் என்பதையும், ஆயுளின் பிற்காலத்தில் அவருக்கு செல்வம் பெருகும் என்பதையும் அது குறிக்கும்.

9. சதுர இரேகைக் குறியிருந்தால், அவர் போராசையின்றியே பிர விர்த்தி செய்வார் என்பதை அது குறிக்கும். அளவற்ற செல்வம் வசந்தகாலத்திலும், அவர் அதில் மயக்கங் கொள்ளாது அதைக் காப்பாற்றும் தன்மையை உடையவர் என்பதையும் அது குறிக்கும்.

10. வட்டவளையமான இரேகைக் குறிருந்தால். அவருக்குப் பெரும் கீர்த்தி உண்டாவதை அது குறிக்கும்.

11. வளைந்த, சரியாய் அமையாத இரேகைக்குறியுடன் பின்னலான இரேகைக்குறிகள் காணப்பட்டால், அவை அவர் பார்வை மங்கும் என்பதையும், அவருக்குக் கண்நோய் உண்டாகும் என்பதையும் அறிவிக்கும்.

12. முக்கோணக்குறியிருந்தால், அவர் சாஸ்த்திர ஆராட்சியினால் முன்னேற்றம் அடைவார் என்பதை அது குறிக்கும்.

13. வலைக்குறி காணப்பட்டால், அது அவருக்கு இருக்கும் அற்ப புத்தியையும் புத்தியின்மையையும் குறிக்கும்.

14. சூலக்குறி இருந்தால், அவருக்குத் திடீரென செல்வம் உண்டாவதைக் குறிக்கும்.

(தொடரும்)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து நீதியான விசாரணைகள் அவசியம்

## இந்தியா வலியுறுத்து

(கொழும்பு)

**நல்லிணக்க ஆணைக்குழுவினால் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ள மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கால வரையறைக்குட்பட்ட சுதந்திரமான- நம்பகமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி விசாரிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் இலங்கை வேண்டும் என்றும் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு நேற்று முன்தினம் எழுத்து மூலம் அளித்துள்ள பதில் ஒன்றிலேயே இந்தியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பிரனீத் கௌர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தீர்மானம் ஒன்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் விவாதத்துக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் காயங்களை ஆற்றுவது மற்றும் இறுதியான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை இலங்கை அரசுக்கு இந்தியா வலியுறுத்தி வருகிறது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையை இந்தியா கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து நம்பகமான விசாரணைகளை இலங்கை நடத்த வேண்டும் என்று இந்தியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## தமிழ்மொழித்தின போட்டி

(பூநகரி)

பூநகரி கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித் தினப் போட்டிகள் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தருமரத்தினம் தலைமையில் நேற்று ஆரம்பமாகி இன்று வெள்ளிக்கிழமை வரை பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளி.வலய தமிழ்மொழிப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பிறேமா மதுநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய போட்டியில் எழுத்து தேர்வு தவிர்ந்த அனைத்து போட்டிகளும் நடைபெறுமென தமிழ்மொழித்தின போட்டி செயலாளர் திருமதி. த.கனகசபை அறிவித்துள்ளார். (அ-2-84)

# பிக்குகளின் கொலைக்கு தனிப்பட்ட பகைமையே காரணம்

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

கோட்டே ரஜமஹா விகாரையில் பௌத்த பிக்குகள் இருவர் கொலை செய்யப்பட்டமைக்கு தனிப்பட்ட பகைமையே காரணம் என ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விசாரணைகள் நிலை குறித்து பொலிஸார் விபரங்களை வெளியிடவில்லை. 80 வயதான பிக்கு ஒருவரே கொலையாளிகளின் இலக்காக இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரின் அறைக்குள் சத்தம் கேட்டு 60 வயதான பிக்கு ஒருவர் வந்தபோது அப்பிக்குவை கொலை செய்த நபர்கள் பின்னர் 80 வயதான பிக்குவை கொன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கொலைகள் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் பிரதான சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேற்படிவிகாரையிலிருந்து நால்வர்வெளியே ஓடி காரொன்றில் ஏறுவதை விகாரையில் தங்கியிருந்த பாடசாலை மாணவனொருவர் கண்டதன் மூலமே இக்கொலைச் சம்பவம் குறித்த தகவல்கள் தெரியவந்தன.

அம்மாணவன் காரின் இலக்கத்தை (KM- 5376) மணலில் குறித்துக் கொண்டதன் பின்னர் கோட்டே ரஜமஹா விகாரையின் விகாராதிபதிக்கு தகவல் தெரிவித்துள்ளார்.


அதன்பின் பொலிஸாரும் பிரதேச வாசிகளும் மோப்பநாயை பின்தொடர்ந்து சென்றபோது அந்நாய் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த இரு மாடிகளைக் கொண்ட வீடொன்றுக்கு சென்றது. அவ்வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு மதுபானம் அருந்திக் கொண்டிருந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

எனினும் அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுடன் ஏனைய மூவரும் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அதன்பின் தெற்கு அதிவேக நெடுஞ் சாலையின் கஹாதுடுவ நுழைவாயிலில் வைத்து மேற்படி காரிலிருந்த பெண் ஒருவர் உட்பட மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# தமிழர்களுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசு எடுக்க வேண்டும்

## ஆர்.எஸ்.எஸ்.பொதுச் செயலாளர் வேண்டுகோள்



(சென்னை)

சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் பையாஜி ஜோஷி வேண்டுகோள் விடுத்துள் ளார்.

இது குறித்து பையாஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கை இறுதிப் போரின் போது தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகள் மனித உரிமை மீறல்கள் குறித்து ஊடகங்களில் புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து புகைப் படங்கள், வீடியோக்கள் ஆகியவை மிகவும் வேத னையை அளிக்கிறது. இது போன்ற மனித உரிமை மீறல்கள் கடும் கண்டனத்துக்குரியவை.

இலங்கையில் நடைபெறும் போரில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்கக் கூடாது என்பதையும் சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களுக்கு அரசியல் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளும் இருக்க வேண்டும் என்பதையும் ஆர்.எஸ்.எஸ். எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது என்று கூறியுள்ளார்.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் வேதனைகளைப் புரிந்து கொண்டு மறுவாழ்வுப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு பாதுகாப்பும் அரசியல் உரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத வரை இலங்கையில் உண்மையான அமைதி ஏற்படாது. எனவே, சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நிலையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களை வாக்காளர் பதிவேட்டில் உள்வாங்க விசேட செயற்றிட்டம்

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களை வாக்காளர் பதிவேட்டில் உள்வாங்குவதற்கான விசேட செயற்றிட்டமொன்றை தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

முஸ்லிம்களின் எதிர்வரும் புனித ரமழான் மாதத்திற்கு முன்னதாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் கட்சித் தலைவர்களின் சந்திப்பின்போது உறுதியளித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் இதுவரை எந்தவொரு இடத்திலும் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முல்லைதீவிலுள்ள சுமார் 2 ஆயிரம் பேர் மாந்தை மற்றும் மன்னார் பிரிவுகளில் வாக்காளர்களாக தம்மை பதிவு செய்துகொள்வதில்எதிர்நோக்கியசிரமங்கள்குறித்தும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)



யா/கொக்குவில் மேற்கு சீ.சீ. த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி. தயாளநேசன் உரை நிகழ்த்துவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் வெற்றியீட்டிய மாணவனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் க.வன்னியசிங்கம் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்.)

# இரண்டாம் உலக யுத்தம்


## ஒரு மீள்பார்வை 78



ஜேர்மன் தெற்குப்படைத் தளபதி ஜெனரல் மன்ஸ்டைன்

பிரதான தாக்குதல் திசையில் இயங்கிய சோவியத்துருப்புகளை பாசிஸ்டுகளின் பலத்த படைத் திரட்டு எதிர்த்து நின்றது. இதில் சென்ரர் தளபதி பீல்ட் மார்ஷல் ஜெனரல் குளூகே படைத் தொகுதியைச் சேர்ந்த 2-வது பாசிச ஜேமனியப்படை தெற்கு -*தளபதி பீல்ட் மார்ஷல் ஜெனரல் மன்ஷ்டைன்*-படைத் தொகுதியைச் சேர்ந்த 4வது டாங்கி, 8வது, 1வது டாங்கி மற்றும் 6வது படைகள் இருந்தன. இவற்றில் 14 டாங்கி மோட்டர் டிவிஷன்கள் உட்பட மொத்தம் 62 டிவிஷன்கள் அடங்கியிருந்தன. இந்தப் படைத்திரட்டில் மொத்தமாக 12 இலட்சத்து 40 ஆயிரம் ஆட்களிருந்தனர். 12 ஆயிரத்து 600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 2 ஆயிரத்து 100 டாங்கிகள் மற்றும் திடீர்தாக்குதல் பீரங்கிகள் இருந்தன. சோவியத் துருப்புகள் ஆட்களில் 2.1 மடங்கும் பீரங்கிகளில் 4மடங்கும் டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 1.1 மடங்கும் விமானங்களில் 1.4 மடங்கும் எதிரியை விஞ்சிநின்றன.

மத்திய சேனையின் துருப்புகள் தொடுத்த தாக்குதலுடன் 26 ஆம் திகதி தினேப்பருக்கான சமர் ஆரம்பமானது. சேவ்ஸ்க், நோவ் கரத், சேவெர்ஸ்கிப் திசையில் முக்கிய அடி கொடுக்கப்பட்டது. சேவ்ஸ்க் பிரதேசத்தில் பெரும் சக்திகளை வைத்திருந்த எதிரியின் பலத்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நான்கு நாட்கள் நீடித்த கடுமையான சண்டைகளுக்குப் பின் சோவியத் துருப்புகளால் எதிரியை 20-25 கி.மீ. தூரம்



ஜேர்மன் டாங்கியை மறைந்திருந்து தாக்கும் சோவியத் வீரர்கள்

மட்டுமே பின்னுக்குத்தள்ள முடிந்து. கனதோப் திசையில் தாக்குதலைத் தொடர்ந்த இவை 60 கி.மீ. தூரம் முன்னேறிப் பிளந்துசெல்லும் போர் முனையை 100 கி.மீ. தூரம் விரிவு படுத்ததின. பாசிச ஜேர்மனிய துருப்புகள் தெஸ்னா மற்றும் தினேப்பர் ஆறுகளுக்குப்பின்னால், பின் வாங்கத் தொடங்கின. போகிற போக்கில் தெஸ்னா ஆற்றைக்கடந்த மத்திய சேனையின் துருப்புகள் செப்ரெம்பர் 20 ஆம் திகதி வாக்கில் கோமெல்-ஜாஸ்னகரோத்கா பிரதேசத்தில் சோஷ் மற்றும் தினேப்பர் ஆறுகளை அடைந்தன.

வரோனிஷ் மற்றும் ஸடெப்பி சேனைகளின் மண்டலங்களிலும் சோவியத்துருப்புகளின் தாக்குதல் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. பல்தாவா- கிரேமென்சூக் திசையில் தாக்குதல் தொடுத்த வரோனிஷ் சேனையின் பிரதான சக்திகள் எதிரியின் பலத்த எதிர்ப்பை சமாளித்து, இடைவிடாது மேற்கு நோக்கி முன்னேறின. செப்ரெம்பர் 2 ஆம் திகதி சுமி நகரைக்கைப் பற்றிய இவை கீவ் நகரை நோக்கிய திசையில் தாக்குதலைத் தொடர்ந்தன. அதே நேரத்தில் ஸ்டெப்பி சேனையின் துருப்புகள் கிராஸ்ன கிராத், வெர்ஹ்னே, தெனேப்ரோவ்ஸ்க் நோக்கி முன்னேறின.

செப்ரெம்பர் தொடக்கத்தில் வரோனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகளின் முக்கிய சக்திகள் கீவ், கிரேமென்சூக் திசைகளில் ஒருமுனைப் படுத்தப்பட்டிருந்தன. வோர்ஸ்க்லா, ப்ஸோல், ஹோரோல் ஆறுகளில் முன்னரே தயாரிக்கப்பட்ட எல்லைகளில் சோவியத் தாக்குதலைத்தடுத்து நிறுத்த பாசிச ஜேர்மனியத்துருப்புகள் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன. தாக்குதலைத் தொடர்ந்த ஸ்டெப்பி சேனையின் துருப்புகள் செப்ரெம்பர் 23 இல் பல்தாவாவை கைப்பற்றி கிரெமென்சூக்கிற்கு தென்கிழக்கே தினேப்பர் ஆற்றை அடைந்தன. இதற்குமுன் செப்ரெம்பர் 23 வரோனிஷ் சேனையின் துருப்புகள் ப்ரியஸ்லாவ்- ஹமேல்னித்ஸ்திய் பிரதேசத்தில் தினேப்பரை அடைந்தன. செப்ரெம்பர் 28 இல் இவை தார்னித்ஸா பிரதேசத்தில் (கீவின் புறநகர்ப் பகுதி) தினேப்பர் ஆற்றின் கரையை நெருங்கின.

கிழக்குக் கரையோர உக்கேரேனை விடுவித்த அதேநேரத்தில் செஞ்சேனை தன்பாஸில் பரவலான தாக்குதலைத் தொடுத்தது. ஜேர்மனியின் இராணுவப் பொருளதாரத்துக்குத் தேவையான எரிபொருள் கிடைக்கும் பிரதேசம் என்ற வகையில் பாசிசத் தலைமை தன்பாசிற்கு முதல் முக்கியத்துவம் அளித்தது. மியூஸ் ஆற்றில் பல படைவரிசைகளை உடைய தற்காப்பு எல்லை உருவாக்கப்பட்டது. எந்த விலை கொடுத்தாவது இந்த எல்லையைக்காத்து நின்று



ஜேர்மனிக்கு ... ந்திருந்த வேளையில் இராணுவ வீரர்களை கௌரவப் படுத்தும் விதமாக பிரிட்டிஷ் இராணி எலிசெபெத் இராணுவச் சீருடையில் காட்சியளிக்கிறார்

பூகின்) அளித்தது. கூர்ஸ்க் சமரின் போதே இருசேனைகளும் தன்பாஸை எதிரியிடமிருந்து மீட்பதில் இறங்கின. தென்மேற்கு சேனை வடக்கு தனேத்சைக் கடந்து, இதன் மேற்குக் கரையில் இஸ்யூம் பிரதேசத்தில் தாக்கு முனையை விரிவுபடுத்தியது. இது எதிரியின் கணிசமான சக்திகளைக் கட்டிப் போட்டு, மியூஸ் எல்லையில் படைத் திரட்டை வலுப்படுத்த எதிரிக்கு வாய்ப்பளிக்காமல் இருந்தது. அதே நேரத்தில் ஆகஸ்ட் 18 ஆம்திகதி உறுதியான தாக்குதலைத் தொடங்கிய தெற்கு சேனையின் துருப்புகள் குறிகிய காலகட்டத்திலேயே எதிரியின் தற்காப்பைப் பிளந்துகொண்டு மொபைல் யூனிட்டுகளோடுகூட எதிரியின் பின்னணியை நோக்கிப் பாய்ந்தன. செப்ரெம்பர் தொடக்கத்திலிருந்து எதிரி தன் துருப்புகளை தன்பாஸிலிருந்து வெளியேற்றும் கட்டாயத்திற்கு உள்ளானான்.

சோவியத் குழந்தைகள் கையில் இருப்பது ஐஸ் குச்சியல்ல -கரட் போர்ச்சூழலில் அவர்களுக்குக் கிடைத்த குச்சி இதுதான்



## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

கீவ்வை மீட்கும் சமருக்காக நகரும் சோவித் வீரர்கள்



தன்பாஸை ஹிட்லர் ரைஹிற்காக வைத்திருக்குமாறு பாசிச ஜேர்மனிய துருப்புகளுக்கு கட்டளையிடப் பட்டது.

தன்பாஸை விடுவிக்கும் கடமையை சோவியத் உயர்மட்ட பிரதான படைத் தலைமை தென்மேற்கு மற்றும் தெற்கு சேனைகளுக்கு (தளபதிகள் ஜெனரல் மலினோவ்ஸ்கிய், ஜெனரல் தல் ஆகஸ்ட் 30 ஆம்திகதி சோவியத்துருப்புகள் தகன்ரோக்கைக் கைப்பற்றன. செப்ரெம்பர் 8ஆம் திகதி தன்பாஸின் தலைநகரமாகிய ஸ்டாலினோ நகரம் ( இப்போது இது தோனேத்ஸ்க் என்றழைக்கப்படுகிறது) விடுவிக்கப்பட்டது.

(தொடரும்)

# யுத்தத்தை வெற்றி கொண்டதுபோல் பிரேரணையை வெற்றி கொள்வோம்

## ஐ.ம.சு.மு.தலைவர்கள் உறுதியெடுப்பு

(கொழும்பு)

நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராக முன்வைக்கப்படும் எந்த ஒரு சவால்களுக்கும் முகம்கொடுக்க அரசாங்கமும் ஜனாதிபதியும் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்களும் அமைச்சர்களுமான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிறேமஜயந்த, டியூ. குணசேகர, விமல் வீரவன்ச மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் தெரிவித்தனர்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் பிரேரணை மற்றும் அதன் பின்னணி குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு கொழும்பு மகாவலி கேந்திரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிட்டுள்ளபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யுத்தம் வென்றது போன்று தாய் நாட்டை நேசிக்கும் மக்களின் ஆதரவுடனும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உதவிகளுடனும் இந்தப் பாரிய சவால்களையும் வெற்றி கொள்வது உறுதி என்று சுதந்திர முன்னணித் தலைவர்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இலங்கைக்கு எதிராக எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் எக்காரணத்தைக் கொண்டும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அரசாங்கத்தின் கொள்கையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தின்போது இதுபோன்ற பல்வேறு அழுத்தங்களுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுக்க நேர்ந்தது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய, மலைநாடு என்று நாட்டின் சகல பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட ஐ.ம.சு.மு. அரசாங்கம் பொதுமக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றது.

அந்த அடிப்படையில் இதுபோன்ற சகல சவால்களையும் முகம்கொடுக்கும் பாரிய சக்தி ஜனாதிபதி அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் உண்டு. தேசத்திற்கு சவாலாக வரும் எந்த சந்தர்ப்பத்திலும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது என மேலும் குறிப்பிட்டனர். (அ-2)

## வாகரை காட்டுப் பகுதியில் 60 வெடிகுண்டுகள் மீட்பு

(கொழும்பு)

வாகரை பிரதேச காட்டுப் பகுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 60 வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் இந்த வெடிகுண்டுகளை கண்டெடுத்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது.

வெடிகுண்டுகளுடன் சுமார் 200 மின் ஆழிகளும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# பூநகரி கோட்ட பெருவிளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(பூநகரி)

பூநகரி கோட்டமட்ட பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதன் இறுதி முடிவுகளை பூநகரி கோட்ட விளையாட்டுச் செயலாளர் இ.கலைச்செல்வன் அறிவித்துள்ளார்.

இதில் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**உதைபந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

கிளி/ நாச்சிக்குடா அ.மு.க.பா, கிளி/இரணைதீவு றோ.க.க.பா, கிளி/பூநகரி ம.வி.

**17 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/நாச்சிக்குடா அ.மு.க.பா, கிளி/பூநகரி ம.வி.

**19 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/பூநகரி ம.வி., கிளி/வேரவில் ம.வி.

**15-19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/வேரவில் இ.ம.வி., கிளி/ இரணைத்தீவு றோ.க.வி.

**கரப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

கிளி/நாச்சிக்குடா அ.த.க.பா, கிளி/ஜெ.ம.வி, கிளி/பூ.ம.வி

**15 வயதுப்பிரிவு (பெண்கள்)**

கிளி/ நாச்சிக்குடா அ.மு.த.பா, கிளி/பூநகரி மவி

**17 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

கிளி/ வே.இ.ம.வி., கிளி/ஜெ.ம.வி., கிளி/ உ.ம.வி.

**17 வயதுப்பிரிவு (பெண்கள்)**

கிளி/வே.இ.ம.வி., கிளி/ மு.ம.வி., கிளி/ பூ.ம.வி.

**19 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

கிளி/ பூ.ம.வி., கிளி/நாச்சிக்குடா, கிளி/ வே.இ.ம.வி.

**19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

கிளி/வே.இ.ம.வி., கிளி/பூ.ம.வி., கிளி/ முழங்காவில் ம.வி.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு**

கிளி/ முடகொம்பன் அ.த.க.பா., கிளி/ ஜெ.ம.வி., கிளி/நாச்சிக்குடா

**17 வயதுப்பிரிவு**

கிளி/பூ.ம.வி., கிளி/ஜெ.ம.வி.,கிளி/முக.அ.த.க.பா.

**19 வயதுப்பிரிவு**

கிளி/ மு.ம.வி., கிளி/பூநகரி ம.வி., கிளி/ நாச்சிக்குடா

**கிரிக்கெட்**

**ஆண்கள்**

கிளி/ முழங்காவில் ம.வி, கிளி/ஜெயபுரம் ம.வி, கிளி/பூநகரி ம.வி

**பெண்கள்**

கிளி/ முழங்காவில் ம.வி, கிளி/ பூநகரி ம.வி, கிளி/ஜெ.ம.வி

**எல்லே**

**ஆண்கள்**

கிளி/முழங்காவில் ம.வி, கிளி/பூநகரி ம.வி, கிளி/ஜெ.ம.வி

**பெண்கள்**

கிளி/ ஜெ.ம.வி, கிளி/ முழங்காவில் ம.வி, கிளி/பூநகரி ம.வி

**கரம்போட்**

**15 வயதுப்பிரிவு**

**ஆண்கள்**

கிளி/ இரணைதீவு றோ.க.வி., கிளி/குமுழமுனை அ.த.க.பா., கிளி/முழங்காவில் ம.வி.

**பெண்கள்**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/ குமுழமுனை அ.த.க.பா.

**19 வயதுப்பிரிவு**

**ஆண்கள்**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/பூநகரி ம.வி., கிளி/ இரணைதீவு றோ.க.வி.

**பெண்கள்**

கிளி/முழங்காவில் ம.வி., கிளி/ இரணைதீவு றோ.க.வி., கிளி/பூநகரி ம.வி.

**சதுரங்கம்**

**19 வயதுப்பிரிவு**

**பெண்கள்**

கிளி/பூநகரி ம.வி.

**ஆண்கள்**

கிளி/ முழங்காவில் பூ.வி.

**கபடி**

**15 வயதுப்பிரிவு**

**ஆண்கள்**

கிளி/பூ.ம.வி

**பெண்கள்**

கிளி/ பூ.ம.வி

**19 வயதுப்பிரிவு**

**ஆண்கள்**

கிளி/பூ.ம.வி, கிளி/நாச்சிக்குடா அ.மு.க.

**பெண்கள்**

கிளி/பூ.ம.வி, கிளி/ நாச்சிக்குடா (அ-84)



தேசிய சேமிப்பு வங்கி சங்கானைக்கிளையின் 40 ஆவது வருட பூர்த்தி விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முகாமையாளர் பி.வரதராஜா அவுறுது வாசனாவா கணக்கில் வைப்பிலிட்ட சான்றிதழை, வங்கியின் கட்ட உரிமையாளர் பி.கிருஷ்ணதாசனுக்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்:- சங்கானை செய்தியாளர்)

# மாதா தரிசனம் என்று பொய்ப்பிரசாரம்; மன்னாரில் பணம் வசூலிப்பு!

மன்னார் மாவட்டம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் தென்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சென்று தனக்கு மாதா தரிசனம் தினமும் தருகின்றார். தனது இல்லத்தில் மாதா தங்கி இருக்கின்றார் என்று கூறி பணம் வசூலித்து வருகின்றமை மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பு 06 ஐச் சேர்ந்த பெண் ஒருவர் மன்னார் மாவட்டம் உட்பட நாட்டில் உள்ள பல பாகங்களுக்கும் சென்று தனக்கு மாதா தரிசனம் தினமும் தருகின்றார். தனது இல்லத்தில் மாதா தங்கி இருக்கின்றார் என பொய்யான கருத்துக்கள்ள கூறி அதற்கு சார்பாக போலியான புகைப்படங்க்ளையும் காட்டி மக்களிடமிருந்து அதிகளவான பணம் வசூலிப்பு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பணம் வசூலித்து வருவதாகவும் அத்துடன் இவர் ஒரு திருமண தரகர் என்றும் அறிமுகம் செய்து ஒரு குடும்பத்து பிரச்சினையை வேறு குடும்பங்களுக்கு தெரியப்படுத்தி பலரின் திருமணங்களை தடுத்தும் குடும்பங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி மக்களை தன்வசப்படுத்தியும் வருகின்றார்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் செயற்பாடுகள் தொடர்பில் பங்கு குருக்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் போலி செயற்பாட்டின் மூலம் எவரையும் ஏமாந்து விட வேண்டாம் என தெரிவித்துள்ளனர். (அ-7)

# மனித உரிமைகள் பற்றி எவரும் பாடம் நடத்த வேண்டியதில்லை

(கொழும்பு)

மனித உரிமைகள் பற்றி எவரும் எமக்கு பாடம் நடத்த வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பௌத்த மற்றும் ஏனைய மதங்களினால் போஷிக்கப்பட்டு வரும் இலங்கையர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பில் எவரும் தனியாக பாடம் நடத்த வேண்டியதில்லை.


30 ஆண்டு கால போரை முடிவுறுத்தி மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு வெளிநாட்டு சக்திகளின் தலையீடு அவசியமில்லை.

நாட்டுக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். 2500 ஆண்டுகள் பௌத்த மற்றும் ஏனைய மத வரலாற்றைக் கொண்ட இந்த நாட்டு மக்களுக்கு மனித உரிமை குறித்து சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

48



நகரக் காவலரான சங்குப்பிள் ளை ஒரு நாள் மாலையில் ராஜ்ஜியத்தின் தலைநகரை வலம் வந்து கொண்டிருக்கையில் கடைத் தெருவில் ஒரு இளைஞனை நான்கு நபர்கள் சூழ்ந்து கொண்டு அடிப்பதைப் பார்த்தார். உடனே அவர்களை அதட்டி, மிரட்டிய சங்குப்பிள்ளை "இவனை ஏன் அடிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் "இவன் பரமன் கடையிலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடிக் கொண்டு சென்றான்" என்றனர்.

"அவன் திருடியதாகவே இருக்கட்டும்! ஆனால் அவனை தண்டிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. அதனால் திருடனுடன் சேர்த்து உங்களையும் கைது செய்கிறேன்" என்று ஐவரையும் கைது செய்த சங்குப்பிள்ளை அவர்களை மறுநாள் நீதிபதி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினார். கடைக்காரரான பரமனும் வரவழைக்கப்பட்டார்.

முதலில் திருடிய இளைஞனிடம் நீதிபதி "உன் பெயர் என்ன?" என்று கேட்டதற்கு "என் பெயர் வீரன்!" என்றான் அவன்! "பரமன் கடையி லிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடியதாக உன்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அது உண் மையா?" என்று "நீதிபதி கேட்டார். நீதிபதி அவர்களே! நான் செய்தது தவறா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்!

பரமன் கடையில் ஒரு வாரம் கூலி வேலை செய்தால் ஒரு மூட்டை அரிசி தருவதாக கூறினார். அதற்கு ஒப்புக் கொண்ட நானும் ஒரு வாரம் அவரிடம் வேலை செய்தேன். அதற்குப் பின்னர் நான் கூலி கேட்ட போது பரமன் அவர் வீட்டு கிணற்று சுவர்கள் இடித்திருப்பதாகவும் அவற்றை புதிதாக கட்ட வேண்டும் என்றும் கூறினார்.


முதலில் நான் ஒரு வாரமாக செய்த வேலைக்கு ஒரு மூட்டை அரிசி தர வேண்டும்மென்றும் அதற்கு பின்னர் அடுத்த வேலை செய்வதாகவும் நான் சொன்னேன். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதனால் எனக்குச் சேர வேண்டிய ஒரு மூட்டை அரிசியை நானே எடுத்துக் கொண்டேன். உடனே பரமன் "திருடன்! திருடன்!" என்று கூச்சலிட இந்த நால்வரும் என்னைப் பிடித்து அடிக்க ஆரம்பித்தனர் என்றான்.

வீரன் சொன்னதைக் கேட்ட நீதிபதி பரமனிடம் "அவன் சொன்னது உண்மையா?" என்று கேட்டார்.

அவன் என் கடையிலிருந்து அரிசி மூட்டையை திருடியது உண்மை! அதைத்தான் "அவனே ஒப்புக் கொண்டு விட்டானே!" என்றான்.

"அதை விடு! நீ வாக்களித்தபடி அவனுக்கு ஒரு மூட்டை அரிசியை ஏன் கொடுக்க மறுத்தாய்?" என்று நீதிபதி வினவினார்.

நான் கொடுக்கமாட்டேன் என்று



சொல்லவில்லை கிணற்று வேலை முடிந்த பிறகு தருகிறேன் என்று தான் சொன்னேன்" என்றான் பரமன்.

"பரமா!' நீ செய்தது தவறுதான்! அதனால் நீ அவனுக்கு கூடுதலாக பணம் தர வேண்டும்" என்றார் நீதிபதி.

பின்னர் வீரனை நோக்கி "நீ பலவந்தமாக அரிசி மூட்டையை எடுத்தது தவறு! ஆகவே பரமன் கொடுத்த கிணற்று வேலையை முடித்த பின்பு ஒரு மூட்டை அரிசியையும் பரமனிடமிருந்து கூடுதல் பணமாக

## சரியான தீர்ப்பு

பத்து பொற்காசுகளும் பெற்றுக் கொள்!" என்றார் நீதிபதி.


பின்னர் வீரனை பிடித்து அடித்த நால்வரையும் நோக்கி "பரமன் திருடன் திருடன் என்று கூவியவுடன் நீங்கள் ஓடிப்போய் வீரனைப் பிடித்தது தவறில்லை. ஆனால் அவன் உண்மையாக திருடனா என்பது தெரியாமல் அவனை நீங்கள் எப்படி அடிக்கலாம்? சட்டத்தை நிங்களே கையில் எடுத்துக் கொண்டதற்காக உங்களுக்கு ஒருவாரம் சிறைத்தண்டனை அளிக்கிறேன் என்றார்.

நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்கள் தீர்ப்பைக் கேட்டு கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

# அம்புலி மாமா கதைகள்

## துளசி

தனது கணவன் ராமனை இழந்து விதவையான துளசிக்கு வயதான காலத்தில் உழைத்து சம்பாதிக்க நேரிட்டது. தனது கிராமத்தை விட்டு பக்கத்து கிராமமான ராமாபுரத்தை அடைந்த துளசி அங்கு பள்ளிக்கூ



டத்தின் முன்னால் சிறிய கடையை அமைத்துக் கொண்டாள்.

அந்த கிராமத்திற்கு அவள் வந்து மூன்றே மாதங்கள் ஆகியிருந்த போது திடீரென அங்கு கொலரா பரவியது. பள்ளிக் குழந்தைகளின் இடையே மிக அதிகமாக பரவியதால் பள்ளியையே மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரியவர்களும் அந்த நோயால் பீடிக்கப்பட்டனர். இது மாரியம்மனின் கோபத்தினால் நடக்கிறது என்று மக்கள் நம்பினர்.

பள்ளிக்கருகில் முத்தம்மா என்பவளும் ஒரு கடை நடத்தி வந்தாள். துளசியின் கடையில் கிடைக்கும் தின்பண்டங்கள் மிகச் சுவையாக இருந்ததால் பள்ளி மாணவர்கள் முத்தம்மாவின் கடையை விட்டுவிட்டு துளசியின் கடையிலேயே தின்பண்டங்கள் வாங்கத் தொடங்கினர். இதனால் கோபம் அடைந்த முத்தம்மா துளசியை எப்படியாவது ஊரை விட்டு விரட்டி விட எண்ணினாள். அதற்கு ஒரு திட்டமும் தயாரித்தாள்.

கிராமத்தினர் அனைவரும் மாரியம்மனுக்கு விசேஷ பூஜை செய்து பிரார்த்தனை செய்தனர். அப்போது கோயில் பூசாரியின் மீது சாமி வந்து மக்களிடம் "கிராம மக்களே! நான் மாரியாத்தா பேசுகிறேன்!' எனக்கு உங்கள் மீது கோபமில்லை கொலரா நோய் வர நான் காரணமில்லை. இந்தக் கிராமத்தில் பள்ளிக்கருகே புதிதாக வியாபாரம் தொடங்கி இருக்கிறாளே கிழவி! அவள் தான் காரணம்!

அவள் கடையிலுள்ள தின்பண்டங்களை உண்டதால் தான் குழந்தைகளுக்குக் கொலரா ஏற்பட்டு ஊர் முழுதும் பரவியது" என்று கூறினான். உடனே ஆவேசமடைந்த கிராம மக்கள் திரண்டு வந்த துளசியின் கடையை சூறையாடினர். அத்தோடு நில்லாமல் அவள் மீது கல்வீசி எறிந்து அவளை கிராமத்தை விட்டுத் துரத்த முயன்றனர். துளசியின் தலையில் கல்பட்டு இரத்தம் வழியத் தொடங்கியது. இதைக் கண்டு மனம் பொறுக்காத பள்ளி ஆசிரியர் ஒருவர் அவர்களைத் தடுத்து "அட முட்டாள் மக்களே! இந்த கிழவி மீது ஏன் கல் வீசி எறிகிறீர்கள்?" என்றார்.

"குறுக்கே பேசாதே! இவள் தான் கொலரா உண்டாகக் காரணம் என்று கோயில் பூசாரியே சொல்லிவிட்டார்!" என்றனர் அவர்கள். "பூசாரி சொன்னால் அதை உடனே உண்மையென்று நம்புவதா? பூசாரியை அவ்வாறு சொல்லத் தூண்டியவள் முத்தம்மா! பூசாரிக்கு அவள் பணம் கொடுத்துத் தூண்டி



விட்டதை நான் கண்ணால் பார்த் தேன் கொலரா நோய் உண்டாக மக்களாகிய நீங்கள் அனைவரும் தான் காரணம்!

ஊரில் உள்ளது ஒரேயொரு ஏரி! அதிலிருந்து தான் தண்ணீர் எடுத்துக்குடிக்கிறோம். ஆனால் சமீபகாலமாக அதில் மாடுகளைக் குளிப்பாட்டியும் துணிகளைத் துவைத்தும் ஏரியை அசுத்தப்படுத்தி விட்டீர்கள். அசுத்த நீரினால்தான் கொலரா உண்டாகியிருக்கிறது. அதற்கு இந்த கிழவி மீது பழி சுமத்துகிறீர்கள்? கொலராவை குணப்படுத்துவதற்கு நாம் நகரத்திலிருந்து மருந்துகள் வரவழைக்க வேண்டும். எதிர்காலத்தில் அது வராமல் தடுக்க நமது ஏரியை சுத்தப்படுத்துவதுடன் அதை என்றும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்" என்று ஆசிரியர் கூறி முடித்தார். அவர் சொன்னது முற்றிலும் சரியென உணர்ந்த கிராமத்தினர் துளசியிடம் மன்னிப்புக் கேட்டனர். பின்னர் கொலராவை குணமாக்கவும் எதிர்காலத் தில் வராமல் தடுக்கவும் எல்லோரும் முனைந்து செயற்பட்டனர்.

# நாட்டுக்கு எதிரான அச்சுறுத்தலை அனைவரும் இணைந்து எதிர்கொள்ளவேண்டும்-ஜனாதிபதி

(கொழும்பு)

**முப்பது வருட யுத்தத்திற்குப் பின் நாடு அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வரும் இத்தருணத்தில் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இடமளிக்கமுடியாது.**

**அதேவேளை நாட்டுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் வரும்போது அரசியல், கட்சி பேதம் பார்க்காது எதிர்க்கட்சி உட்பட சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியமெனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



புத்தளம் மாவட்ட விசேட அபிவிருத்திக்கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் மாதம்பே கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிற்கும் மக்களுக்குமான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் எவ்வித பேதங்களுக்கும் இடமில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடன் செயற்படுவது அவசியம் எனத் தெரிவித்தார்.

மக்களுக்குப் பொறுப்புக்கூறுபவர்களாகவும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் செயற்படுவது முக்கியமெனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படுவது அவசியம். சில சம்பவங்ள் தொடர்பில் முழு நாட்டினதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் நற்பெயரைக் கெடுக்கும் விதத்தில் எவரும் செயற்படக்கூடாது. புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் குறைபாடுகள் சம்பந்தமாக இது தொடர்பான அமைச்சுக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எமக்குக் கிடைத்த சகல முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் நாம் கவனம் செலுத்தி வருவதோடு மாவட்ட ரீதியில் பார்க்கப்படவேண்டிய பல விடயங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அது பற்றி நான் அறிவித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பேன்.

இத்தகையதொரு கலந்துரையாடலில் அரச தரப்பினர் போன்றே எதிர்க்கட்சியினரும் பங்கேற்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்து அதற்கான அழைப்பினை விடுத்தேன்.மூன்று, நான்கு வருட காலங்களில் நிறைவு செய்யப்படக்கூடிய செயற்றிட்டங்களை இனங்கண்டு உரிய முறையில் அவற்றினை நடைமுறைப்படுத்துவதே எனது நோக்கம்.

கடந்த காலங்களைப்போல இத்தகைய பிரச்சினைகளை தொடரவிடாமல் மக்கள் கருத்துக்களையும் பெற்று நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவை அரசியல் பிரச்சினைகளல்ல.

இன்று பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியினரும் தமது யோசனைகளை முன்வைத்தால் அது விடயத்திலும் கவனம் செலுத்த முடியும்.

பெரும்பாலான நீர்ப்பாசனத்திட்டங்கள் புனரமைப்பு, குடிநீர்த்திட்டங்கள், தெதுறு ஓயா திட்டம் போன்றவை அதிகாரிகளினால் முன் வைக்கப்பட்டன. அவை கவனத்திற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## நூதனசாலையின் பாதுகாப்பு சிவில் பாதுகாப்பு படையிடம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தேசிய நூதனசாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தையடுத்து நூதனசாலையின் சிவில் பாதுகாப்புப் படையிடம் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்தார்.

ரட்ண லங்கா தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆதரவைப் பெறுவதற்கான ஆலோசனையை இத்திருட்டு தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டு விசேட குழு நிராகரித்துள்ளதாக அவர் கூறினார். நூதனசாலையின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு அதிகாரி பதவியொன்று உருவாக்கப்படும் என அவர் கூறினார்.

பாதுகாப்பு எச்சரிக்கை முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கும் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியைப் பெறுவதற்கும் போதிய நிதியில்லை என அமைச்சர் கூறினார். அதே வேளை நூதனசாலையின் கீழ்தளம் இன்று முதல் பொதுமக்களின் பார்வைக்காக மீண்டும் திறக்கப்படும் என அவர் தெரிவித்தார். (அ-2)

## ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் எதிர்வரும் 30 ஆம் திகதி திறப்பு!

தகவல் ஊடகத்துறைக்கு நவீன வசதிகள் வழங்கும் முகமாக அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் திறந்து வைக்கப்படும்.

தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் பதில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோரின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்புதிய கட்டடத்தை எதிர்வரும் 30 ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளார்.

374 மில்லியன் ரூபா செலவில் ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டத்தில் நவீன வசதிகள் கொண்ட கேட்போர் கூடம், ஊடக ஆய்வுக்கான நூலகம், இரு கணனிப் பிரிவுகள், அரசாங்க திரைப்படப்பிரிவின் நூதனசாலை என்பன ஊடகவியலாளர் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ளன. (அ-2)


## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## எம்மில் சமூக உணர்வை வளர்ப்போம்



ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களுடைய வாழ்வுரிமைகளை தூக்கி நிறுத்தும் சமத்துவ சமுதாயத்தின் ஒரு போராட்டம், புதிய சித்தாந்தம் இன்றைய தேவை. எப்போதெல்லாம் அதர்மம் மேலோங்குமோ அப்போதெல்லாம் தர்மத்தை நிலநாட்ட அவதாரம் எடுப்பவர் கடவுள் என்கிறது பகவத்கீதை.

ஒடுக்கப்பட்ட, கைவிடப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வைப் பெற்றுக்கொடுத்து அன்பின் ஆட்சியை இவ்வுலகில் கட்டியெழுப்பவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்கின்றது திருவிவிலியம். ஆனால் இன்று நமது அன்றாட வாழ்வில் நம் கண்முன்னால் மானிட உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. மனித உரிமை மீறல்களுக்கான எதிர்ப்பு என்பது ஒவ்வொரு மனிதரிடமும் இயல்பாக எழ வேண்டிய ஓர் உணர்வு. சமூக உணர்வு கொண்டவர்கள் ஒன்று திரண்டு மனித உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும்.

இன்று நாடு, சமூகம், மொழி, இனம், குலம் யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் பின்னிப்பின் சின்னங்களாக இன்று காட்சியளிக்கின்றன. இறைவன் அவனிளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம், இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்துவிட்டன. மனிதனையும் அவனது உரிமைகளையும் மதித்து வாழும் அடிப்படை பண்பு அறவே அற்றுப் போயிற்று.

அடிமைத்தனம், அறியாமை, கொள்ளை நோய் இவைகளை நாகரிகம் ஒழித்திருக்கலாம். ஆனால் இந்த நாகரிகமும் பண்பாடும் போரை இந்த உலகில் நின்று ஒழிக்கவில்லை. அமைதியை நிலவச் செய்வது எங்கள் ஒவ்வொருவருடைய தார்மீகக் கடமை என்பதனை நாம் மறந்து போகக்கூடாது. அன்று தோன்றிய அமைதியான இரவு இன்றும் எம்மத்தியில் தோன்ற நான் என்னால் முடியுமானவற்றை செய்து கடவுளின் கண்களில் கருணை பெற இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி


## நீரில் மூழ்கி பெண்கள் உயிரிழப்பு

தங்கொடுவை, கல்வக யோகியான பகுதியில் நீர் நிலையொன்றில் குளிக்கச் சென்ற இரண்டு பெண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

60 வய்து மற்றும் 27 வயதான இரண்டு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இவர்களின் சடலங்கள் தங்கொடுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

## பாரிய பிரச்சினையில் சிக்கியுள்ள பால்மா

ரூபாயின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதனால் பால்மா இறக்குமதியாளர்கள் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பால்மாவின் விலையை அதிகரிக்க அனுமதி வழங்குமாறு இறக்குமதியாளர்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் தொடர்ந்தும் கோரிக்கை விடுக்கின்றனர்.

ரூபாயின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில் தற்போதைய விலைக்கு தொடர்ந்தும் பால்மாவினை இறக்குமதி செய்ய முடியாது என அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ-2)

# திருக்கோவிலில் விபத்து; 12 வயது சிறுவன் பலி

(கொழும்பு)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் பைக்கோ வாகனம் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி நேற்று முன்தினம் மாலை வீதி விபத்துக்குள்ளானதில் 12 வயது பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை அக்கரைப்பற்றை நோக்கி பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த பைக்கோ வாகனம் திருக்கோவில் பிரதேச சபைக்கு முன்னால் வீதியை விட்டு விலகி வீதியின் நடைபாதையில் மூன்று மாணவர்கள் நடந்து தனியார் வகுப்பிற்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் வீதி விபத்து சம்பதில் மதன ராஜா இலக்சன் என்ற 12 வயது மாணவனே பரிதாபகரமாக ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் ஏனைய மாணவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். இதனையடுத்து வாகன சாரதி தப்பி ஓடி பொலிஸாரிடம் சர ணடைந்தார். (அ-2)

# வட பிராந்திய மாணவர் சத்துணவு திட்டத்திற்கு ஜப்பான் நிதியுதவி

## 180 மில்லியன் ரூபாவை வழங்குகிறது

(கொழும்பு)

வடபிராந்திய பாடசாலைகளில் அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் சத்துணவுத் திட்டத்துக்கு 180 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்க ஜப்பான் அரசாங்கம் முன்வந்துள்ளது.

வடபகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட சிறுவர்களின் போசாக்கு நிலைமை குறித்து கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுவதாகவும் ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுவர்களின்போசாக்குநிலைமை உயர்ந்த மட்டத்தில் இல்லாவிட்டால் அவர்களின் செயற்பாடுகளில் திறமை காணப்படாது என்றும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜப்பானின் நிதியுதவியுடன் வடபகுதி பாடசாலை மாணவர்களிடையே முன்னெடுக்கப்படவிருக்கும் சத்துணவுத் திட்டம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாகக் கண்காணிக்கப்படும் என்றும் கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக ஜப்பானின் பூமியதிர்ச்சி ஏற்படும் பகுதிகளில் வழங்கப்படும் தகரங்களில் அடைக்கப்பட்ட மீன்கள் வழங்கப்படவிருப்பதாகவும் ஜப்பான் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் சில பொருட்கள் இத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படவிருப்பதாகவும் ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது:

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என்றும் ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது. (அ-2)

# பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து மூன்று மாதங்களில் 75 முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 75 முறைப்பாடுகள் மனித உரிமை இல்லத்தின் யாழ். அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என அந்த அலுவலக பெண்கள் பிரிவு. இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்களும் பெண்களுக்குீ எதிரான வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த மனித உரிமை இல்லம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மேலும் கடந்த வருடம் 105 முறைப்பாடுகள் மனித உரிமை இல்லத்தின் யாழ். அலுவலகத்திற்கு கிடைத்ததோடு இந்த வருடத்தில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 75 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தேன் மீதான ஆசை உயிரைப் பறித்தது

(கொழும்பு)

தேன் எடுப்பதற்காக மரத்தின் மீது ஏறிய நபர் தேனீக்கள் கொட்டியதன் காரணமாக 25 அடி உயரத்திலிருந்து கற்குவியல்களுக்கிடையே விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று கொக்கரெல்ல பகுதியில் இம்பெற்றுள்ளது.

கொக்கரெல்ல பகுதியில் இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

தேன் எடுப்பதற்காக தேன் கூட்டை கலைக்க முற்பட்ட மேற்படி நபரை தேனீக்கள் கொட்டத் தொடங்கியதையடுத்து வேதன்ன தாங்க முடியாத நிலையில் அவர் 25 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்துள்ளார்.

கற்குவியல்களுக்கு மத்தியில் விழுந்ததனால் அவரது தலை பாரிய கல்லொன்றின் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (அ-2)




★ 1752-கனடாவின் முதலாவது பத்திரிகை த ஹலிஃபாக்ஸ் கசெட் வெளியிடப்பட்டது.

★ 1801-ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னன் வாள் ஒன்றினால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டான்.

★ 1816-அமெரிக்க மதப் பிரசாரகர்கள் கொழும்பு வந்தடைந்தனர்.

★ 1848-நியூசிலாந்தின் டுனெடின் நகரில் முதலாவது தொகுதி ஸ்கொட்டிஷ் குடியேறிகள் தரையிறங்கினர்.

★ 1857-எலிஷா ஒட்டிஸ் முதலாவது உயர்த்தியை நியூயோர்க் நகரில் அமைத்தார்.

★ 1868-கலிபோர்னியா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

★ 1903-ரைட் சகோதரர்கள் தமது வெற்றிகரமான முதலாவது வானூர்திக்கான காப்புரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்தனர்.

★ 1919-இத்தாலியின் மிலான் நகரில் முசோலின் தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.

★ 1931- இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1933-ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானது ரெய்க்ஸ் டாக்கினால் சட்டபூர்வமாக்கப்பட்டது.

★ 1940-முஸ்லிம் லீக் இந்தியாவை மத அடிப்படையில் பிரிக்கும் கோரிக்கையை வெளியிட்டது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: இந்தியப் பெருங்கடலில் அந்தமான் தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றினர்.

★ 1956-பாகிஸ்தான் உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசாகியது.

★ 1965-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது இரு விண்வெளி வீரர்களைக் கொண்ட நாசாவின் ஜெமினி 3 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1966-தனது முதல் கரந்தடி தாக்குதலில் சேகுவேராவின் அணி வெற்றிகரமாக பொலிவிய இராணுவப் பிரிவை தோற்கடித்தது.

★ 1982-குவாத்தமாலாவின் பெர்னாண்டோ கார்சியா தலைமையிலான அரசு இராணுவப் புரட்சி ஒன்றில் கவிழ்ந்தது.

★ 1994-சைபீரியாவில் ரஷ்ய ஏரோபுலொட் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 75 பேர் உயிரிழந்தனர்.

★ 1996-தாய்வானில் முதற்தடவையாக நேரடித் தேர்தல் இடம்பெற்று லீ டெங் ஹூய் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ 1998-டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை வென்றது.

★ 2001-ரஷ்யாவில் மீர் விண்வெளி நிலையம் வளிமண்டலத்தில் வெடித்து பீஜியின் அருகில் தெற்கு பசுபிக் பெருங்கடலில் வீழ்ந்தது.

**பிறப்புக்கள்**

★ 1858-லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1941)

★ 1881-றொஜர் டு கார்ட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ.1958)

★ 1881-ஹேர்மன் ஸ்டீடிஞ்சர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1965)

★ 1893-ஜி.டி.நாயுடு, தமிழக விவசாய அறிவியலாளர்

★ 1907-டானியல் போவெட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1992)

★ 1910-அகிரா குரேசாவா, ஜப்பானியத் திரைப்பட இயக்குநர் (இ.1998)

★ 1916-ஹர்கிஷன் சிங் சுர்ஜீத், இந்திய மாக்சிய கம்யூனிசத் தலைவர் (இ.2008)

★ 1973-ஜேசன் கிட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்


**இறப்புக்கள்**

★ 1931-பகத்சிங், இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் (பி.1907)

★ 1992-பிரீடெரிக், ஹயெக் நோபல் பரிசு பெற்றவர் (பி.1899)

**சிறப்பு நாள்**

★ உலக வானிலை தினம்



★ 1964-யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்தர் யோகர் சுவாமிகளின் நினைவு தினம் (பி.1872)

# அதிசய உலகம்...

## 200அடி உயரத்தில் கயிற்றின் மீது நடக்கும் அதிசய இளைஞன்



23 வயதுடைய ஜூன்கி மிச் என்ற இளைஞர் தரை மட்டத்திலிருந்து 200 அடிகள் உயரத்தில் உள்ள கயிற்றின் மீது நடந்து சாதித்துள்ளார். இந்த அதிசய சம்பவமானது மொனாகோ எனும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

இதற்காக உலகின் மிகவும் ஆபத்தான பகுதியை தேர்ந்தெடுத்த இந்த இளைஞர் 50 மீற்றர்கள் நீளமான கயிற்றின் மீது இரண்டு தடவைகள் நடந்துள்ளான்.

இந்நிகழ்வு பற்றி கருத்து தெரிவித்த இளைஞர், தான் உடல் ரீதியாகவும்,உள ரீதியாகவும் திடமாக இருந்ததனால் பயமின்றி சாதிக்க முடிந்தது என்று தெரிவித்துள்ளார்.

## 76 கிலோ நிறையுடைய திருமண ஆடை அணிந்து வியப்பில் ஆழ்த்திய பெண்




லண்டனில் யிம் அலின் என்ற பெண்மணி பாரிய திருமண ஆடையுடன் தோன்றி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

இளம் சிவப்பு நிறத்தாலான இவர் அணிந்து வந்த திருமண ஆடையின் எடை 76 கிலோ ஆகும். இவர் தன்மீது மற்றவர்களின் கவனத்தை ஏற்படுத்துவதற்காகவே இப்படி செய்ததாக குறிப்பிடப்பட்டது. மேலும் இச்சம்பவம் லண்டனின் பிரபல தொலைக்காட்சி சேவையான சனல்4 இலும் ஒளிபரப்பப்பட்டது குறிப்பிடித்தக்கதாகும். லண்டனில் அழகிகள் போட்டிக்காக வடிவமைக்கப்பட்ட இந்த ஆடை அதிக எடையுள்ள திருமண ஆடையாக இடம் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செயற்கையாக எலும்பு தயாரிப்பில் கேம்பிரிச் பல்கலை ஆராச்சியாளர்கள்






மனித உடலின் பாகங்களை தாங்குவதில் பிரதான பங்கு வகிப்பது எலும்பு ஆகும். இவ் எலும்புகள் விபத்துக்களின் போது சிதைவடைவதனால் அவற்றை சரி செய்வது இதுவரை காலமும் சற்று கடினமானதாகவே கருதப்பட்டு வந்தது.

தற்பொது கேம்பிரிச் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு கூடத்தில் எலும்பை செயற்கையாக தயாரிப்பதில் வெற்றி கண்டுள்ளனர்.

இதன்மூலம் சிகிச்சையின் போது பாதிக்கப்பட்ட எலும்புகளை சீர் செய்ய முடிவதுடன் எலும்பை முழுமையாக மாற்றக்கூடியவாறும் காணப்படுகின்றது.


இந்தச் செயற்கை எலும்பு உற்பத்தியானது ஆராய்ச்சியாளர்களின் கட்டளைக்கு அமைய விசேடமாக வடிவமைக்கப்பட்ட றோபோக்களே உற்பத்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவினை உட்கொள்ள திணறும் இருதலை பாம்பு



பொதுவாக பாம்புகள் தம்மை விட உருவத்தில் பெரிய உயிரினங்களை உணவாக உட்கொள்ளும் வலிமையை கொண்டுள்ளவை. அதிக அளவில் விரிவடையக்கூடிய தாடைகளை கொண்டிருப்பதே இதற்கு காரணம் ஆகும். எனினும் இங்கு காணப்படும் இருதலைப்பாம்பு ஒன்று சாதாரண ஒரு சிறிய உணவை உட்கொள்ள முடியாமல் திணறும் காட்சி படத்தில்.

## ஒற்றைக்கையுடன் பலே நடனமாடி சாதித்த பெண்



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டெபோரா றோச் என்ற பெண் பலே நடனத்தில் சிறந்தவராவார் .ஒருகையை இழந்த இவர் அண்மையில் கொங்கொங்கில் இடம்பெற்ற சர்வதேச பலே நடனப் போட்டியில் கலந்து கொண்டு சம்பியன் பட்டத்தை பெற்று சாதித்துள்ளார். இது குறித்து கருத்து தெரிவித்த அவர், தனது இளமைப் பருவத்தில் இருள் வாழ்க்கை வாழ்ந்ததாகவும், சமூகத்திற்கு முகம் கொடுக்கும் தகுதி இருந்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் நடனத்தை உயிருக்கு உயிராக நேசிப்பதாகவும் அதனால் தான் என்னால் சாதிக்க முடிந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

## 2 உலகப்போர்களை சந்தித்த 105 வயது பாட்டி தற்கொலை



வாழ்ந்து கழித்த 105 வயதான பாட்டி ஒருவர் தூக்கு மாட்டி இறந்துள்ளார். Anastasia Khoreva என்ற இந்த பாட்டி நுரையீரல் அழற்சி நோயினால் சமீப காலமாக கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததாக இவரது நண்பர்கள் கூறுகின்றார்கள். ரஷ்யாவில் Darasun பிராந்தியத்தைச் சேர்ந்த இந்தப் பாட்டி ரஷ்யப் புரட்சி மற்றும் இரண்டு உலப்போர்களையும் சந்தித்த அனுபவம் கொண் டவர் என்பது கூடுதல் சிறப்பு.

குறித்த பாட்டியின் மரணம் தொடர்பாக அயலவர் ஒருவர் கருத்துதெரிவிக்கையில், நிறைவான வாழ்க்கை வாழ்ந்த அந்த பாட்டி தூக்கு மாட்டி இறந்தமை அதிர்ச்சியாக உள்ளது. அத்துடன் தான் மரணத்துக்கு காத்திருப்பதாகவும் அடிக்கடி தனது நண்பர்களிடம் கூறுவாராம் இந்த பாட்டி.

# வானிலை, காலநிலை மற்றும் நீருடன் எமது எதிர்காலத்தை வலுவூட்டுதல்

வானிலையில் ஒவ்வொரு மூலக்கூறுகளும் மனிதனின் அன்றாட வாழ்க்கையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டுள்ளன. உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் இவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு காணப்படுகின்றது. ஒவ்வொரு பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கும் அப்பிரதேசத்தின் வானிலை, காலநிலையுடன் நெருங்கிய தொடர்பு காணப்படும்.

உலகம் முழுவதிலும் ஒரு சாதாரண மனிதனின் அன்றாட நடவடிக்கைகள் தொடங்கி ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் வரை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்ற புவியியல் காரணிகளில் வானிலை, காலநிலை அம்சங்கள் முக்கியமானவை.

இந்த வகையில் உலகில் 189 நாடுகளுக்கிடையே வானிலை மாற்றம், காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துகின்ற உலக வளிமண்டலவியல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டே அதாவது 1951 ஆம் ஆண்டே உலக வளிமண்டவியல் தினத்தினை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.

இவ்வாண்டு உலக வளிமண்டலவியல் தினத்திற்கான கருப்பொருளாக உலக வளிமண்டலவியல் திணைக்களம் (World Meteorólogical Organi zation -WMO) நீர், காலநிலை, வானிலையுடன் எமது எதிர்காலத்தை வலுவூட்டல் (powering our Future with weather Climate and water) என்ற தொனிப் பொருளில் உலக

## இன்று உலக வளிமண்டலவியல் தினம்



வளிமண்டலவி யல் தினைத்தை கொண்டாட முன்வந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகம் வானிலை, காலநிலை தொடர்பான விடயங்களில் குறைவான அக்கறையே காட்டியது.

அதாவது 1974 ஆம் ஆண்டு Dr.Rowland மற்றும் Dr.Molina ஆகியோர் குளோரின் (Chlorine) அணுக்கள் ஓசோன் படையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன எனக் கருதிய பின்பாக உலகம் வானிலை, காலநிலை தொடர்பாக அதிக அக்கறை காட்டத்தொடங்கியது.

உலகம் காட்டிய அக்கறையின் வெளிப்பாடாகவே 2008 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஐ.பி.சி.சி (IPCC) க்கும் அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதி டேவிட் அல் கோர்ருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மனிதனின் அன்றாட நடவடிக்கைகள் தொடக்கம் அவனது தொழில், சௌகரியம், (Comfort) என அனைத்துச் செயற்பாடுகளிலும் வானிலை, காலநிலை அதிகளவு முக்கியத்துவம் பெற்ற விடயங்களாக உள்ளன. சில துறைசார்ந்த அதாவது விவசாயம், மீன்பிடித்துறை சார்ந்த மக்களின் வாழ்வும் வளமும் சீரான வானிலை மூலக்கூறுகளின் போக்கிலேயே தங்கியுள்ளது.

ஆரம்பத்தில் உலகம் ஓசோன் தேய்வு (Ozone Hole) என்றும் பச்சைவீட்டு விளைவு (Green House Effect) என்றும் பயன்படுத்திய வளிமண்டலப் பிரச்சினைகள் யாவற்றையும் ஒன்றிணைத்து தற்போது காலநிலை மாற்றம் (Climate Change) எனும் மிகப்பெரும் இயற்கை அச்சுறுத்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இந்தக் காலநிலை மாற்றம் என்ற சொல் பூமியின் வரலாற்றுக்கு ஒரு புதிய விடயமல்ல.

புவிச்சரித கால அட்டவணையின்படி எமது பூமி பல்வேறு வகையான காலநிலை மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

உதாரணமாக பூமியில் சமுத்திரங்களின் உருவாக்கம் கூட ஒருவகைக் காலநிலை மாற்றச் செயற்பாடே. ஆனால் இத்தகைய காலநிலை மாற்றச் செயற்பாடுகள் மிக மெதுவாகவே அதாவது படிப்படியாகவே நிகழ்ந்தன.

ஆனால் தற்போது உலகம் முழுவதும் குறிப்பிடப்படுகின்ற காலநிலை மாற்றம் என்பது வழமையைவிட மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. இந்த வேக மான காலநிலை மாற்றத்துக்கான ஆதாரங்களை IPCC (Intergovernmantal Panel on Climate Change) வெளியிட்டுள்ளது.

நடைமுறை வாழ்விலும் இவற்றின் தாக்கங்களை அறிய முடிகின்றது. உலகின் பல்வேறு நாடுகள் இந்த காலநிலை மாற்றத்தின் விளைவுகளை அதாவது கடும் வெயிலை, கடும் குளிரை எதிர்பாராத காலங்களில் எதிர்பாராத இடங்களில் காலநிலையுடன் தொடர்பான அனர்த்தங்களை அனுபவித்து வருகின்றன. இதனால் பல்வேறு நாடுகள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

எமது நாட்டை பொறுத்தவரை வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களை அடிக்கடி அனுபவித்து வருகின்றது.

நாடளாவிய ரீதியில் அடிக்கடி இடம்பெறும் வெள்ளப்பெருக்கு, வரட்சி மற்றும் வானிலையுடன் தொடர்புடைய அதீத நிகழ்வுகள் என்பன இவற்றின் வெளிப்பாடாகும். இதனால் இலங்கையின் விவசாயம், மீன்பிடி போன்ற பொருளாதாரம் சார்ந்த துறைகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. இதனால் இலங்கை காலநிலை மாற்றச் செயலகம் ஒன்றை நிறுவியுள்ளதுடன் இலங்கையின் காலநிலை மாற்றம் தொடர்பான தேசியக் கொள்கையினையும் வகுத்துள்ளது.

எமது வடபிராந்தியத்தினைப் பொறுத்தவரையில் காலநிலை மாற்றம் தொடர்பாக அறிந்து கொள்வதற்குப் போதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு வளிமண்டல நிலைமைகள் தொடர்பான தரவுகளின் பற்றாக் குறையும் ஒரு காரணம். எனினும் கிடைக்கின்ற தரவுகளின் அடிப்படையில் சில ஆதாரங்களை வைத்து உலகளவில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற காலநிலை மாற்றம் எமது பிராந்தியத்திலும் பாதிப்பனை ஏற்படுத்தி வருகின்றது என்பதனை அறிய முடிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆண்டு சராசரி வெப்பநிலை 1930-1960 வரை 26.2 ஆக இருந்தது. எனினும் தற்போது 27.70-



28.7°C என்ற அடிப்படையில் உயர்வடைந்துள்ளது.

(1980-2010) இதனை விட ஜூன், ஜூலை, ஒகஸ்ட், நவம்பர் மாத சராசரி வெப்பநிலையும் அதிகரித்துள்ளது. இதுபோல் மழைக்கால நாட்கள் (Rainy Days) உம் 74 இலிருந்து 51 ஆக குறைவடைந்துள்ளது.

(N.Piratheeparajah, Increasing Temperature in the Jaffna District, National Geography Conference, University of Ruhunu-2010)

இந்நிலையில் உலக வளிமண்டலவியல் திணைக்களம் இவ்வாண்டுக்கான தனது தினத்தின் தொனிப்பொருளாக வானிலை, காலநிலை மற்றும் நீருடன் எதிர்காலத்தை வலுவூட்டுதல் என்பதனை பிரகடனப்படுத்தியுள்ளது.

மனித்ன் தன்னுடைய அபிவிருத்திக்கான சில நடவடிக்கைகளை எடுத்தேயாக வேண்டும். பொதுவாகவே பலரின் கருத்துப்படி அபிவிருத்தியும் சூழலும் இணைய முடியாத புகையிரத பாதையின் இரண்டு தண்டவாளங்கள் போன்றவை. அபிவிருத்தியை மட்டும் கருத்தில் கொண்டால் சூழல் தொடர்பான விடயங்களில் குறைவான அக்கறையே காட்ட முடியும். சூழலைக் கருத்தில் கொண்டால் அபிவிருத்தியை எண்ணிப் பார்க்கவே முடியாது. இவ்வாறான

நா.பிரதீபராஜா
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

அபிவிருத்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயனுடையதாக இருக்கும். அதனால் தான் சூழல் மீது அதிக கவனமும் அக்கறையும் கொண்ட நிலைத்து நிற்கும் அபிவிருத்தியே (Sustainable Development) அவசியம் என்பதே இக்கருப்பொருளின் வெளிப்பாடாகும்.

மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள், பல தரப்பினாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் எத்தனை திட்டங்கள் எமது பிரதேச வானிலை, காலநிலையை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டன என்பது கேள்விக்குறி. ஆனால் வானிலை, காலநிலையுடன் இணையாது அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வது எதிர்காலத்தில் அத்திட்டங்களின் நிலைக்கும் தன்மையை பாதிக்கலாம்.

உலக அளவிலும் பிராந்திய அளவிலும் ஏற்படுகின்ற காலநிலை மாற்றத்தினால் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய புவியியல் இடவமைவைக் கொண்ட எமது பிரதேசத்தில் நீர், வானிலை மற்றும் காலநிலையுடன் இணைந்து எமது எதிர்காலத்தினை வலுப்படுத்த வேண்டும். இன்றேல் எதிர்கால மேம்பாட்டுக்காக நாம் செய்யும் எத்தகைய திட்டமும் உரிய பலனைத் தராது

# மக்களின் துயரங்களும் மரணங்களும்... பதவி நாற்காலிக்கு உறுதி சேர்த்ததே உண்மை!

இலங்கையின் இனப்படுகொலையின் எதிர்வினைகள் ஜெனீவாவில் கருக்கொண்டுள்ளன. இது இலங்கை அரசியலை சுழற்றியடிக்கும் சூறாவளியாகுமா? அல்லது சூப்பர் ஸ்டார் படத்தின் பரபரப்புப்போலாகுமா?

வாக்களிப்பின் முடிவு பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பலம் தரும் என்பதிலும் பார்க்க, பாவிகள் கோரும் பாவமன்னிப்புப்போல அமையும் என்பதுவே கடந்த கால வரலாறுகள் வெளிப்படுத்தி நிற்கும் அனுபவ உண்மைகள்.

இந்த விவகாரத்தில் தொடர்ந்து காலங்காலமாக இலங்கைத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வருவது வெளிப்படை. அது போலவே அங்குள்ள சிங்கள மக்களும் அரசியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றபட்டு வருவதும், அது தொடர்பான உண்மைநிலை குறித்து இன்னமும் சிங்கள மக்கள் விழிப்புணர்வு பெறாதிருப்பதும் இந்த நிலைகளின் நீட்சியும் ஆகும்.

இலங்கை அரச படைகளின் தமிழினப்படுகொலை, இன்று. உலக அரங்கில் வெளிப்படுத்தப்படும்போது, மனிதநாகரிகம் மதிக்கத்தக்க அனைத்து மக்களும் நாணித்தலை குனிய வேண்டியுள்ள நிலையில், அந்த வெட்கத்தின் தொடக்க புள்ளியாக இருக்கவேண்டியவர்கள் சிங்கள மக்கள். ஆனால், அவர்களில் எத்தனை பேர் அதனை உணர்ந்துள்ளார்கள்...?

இலங்கை விவகாரத்தில் ஐ.நா.வின் செயற்பாட்டு மந்தநிலை குறித்து எழும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கையில் ஐ. நா. சபையின் மனிதநேய விவகார முன்னாள் துணைத் தலைமைச் செயலர் ஜோன்கோம்ஸ் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இந்த இடத்தில் முக்கிய மானவையாக உள்ளன.

ஐ.நா.சபை இந்த விவ காரத்தில் ஏதாவது செய்ய வேண்டுமாயின் அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு தேவை. தற்போது உள்ள ஆட்சியாளர்களிடம்



இருந்து அது கிடைக்கப்போவதில்லை என்பதே இப்போதுள்ள பிரச்சினை. நடந்துமுடிந்த தவறுகளின்மீதான விசாரணை என்ற நோக்கில் கருதாது, தம்மீதான விசாரணை என இலங்கை அரசு கருதுவதனாலேயே இந்நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு உடன்பாட்டுக்கு வரமுடியாதுள்ளது.

ஆதலால் இந்த அரசு மாற்றம் காணும்வரை விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவாக உள்ளது. அதற்கப்பால் ஆட்சி மாற்றம் ஏற்பட் டாலும்கூட, புதிய ஆட்சியாளர்கள் நீதியான சர்வதேச விசாரணைக்கு உதவினால் மட்டுமே அது சாத்திய மாகும் எனும் ஜோன் கோம்ஸின் இந்தக் கூற்றினை இந்த விவகாரத்திலிருந்து ஐ.நா. வினை தப்பவைக்கும் ஒரு காரக்கருத்தாக ஒதுக்கிவிட முடியாது.

இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டால்கூட, இத்தகைய விசாரணைகள் நடைபெறுவதற்கு புதிய ஆட்சியாளர்கள் சம்மதிப்பார்



களா...? என்பதும் முக்கியமானதும் சந்தேகத்திற்கும் உரியதான கேள்வி. இந்தக் கேள்வி எழக்காரணம் என்ன...?

இலங்கைத் தீவில் பேசப்படும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் தமிழ்மொழி இலங்கைத் தமிழர்களாலும், இந்தியாவின் தமிழ் நாட்டிலும், மலேசியர், சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் உள்ள மக்களில் கணிசமான தமிழர்களாலும் பேசப்படுகின்றன. இந்த நாடுகளில் பெரும் பாலும் அரசகரும மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது தவிர உலகெங்கும் சிதறி வாழும் புலம்பெய்ர்ந்த

## ஜெனீவா தீர்மானம் நிறைவேறினாலும் ...!

இலங்கைத் தமிழர்களாலும் பேசப்படுகிறது. சிங்கள மொழி, இலங்கையின் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் பேசும் மொழியாக மட்டுமே இருக்கிறது.


சிங்கள மொழியை சிங்களவர்களுக்கு அடுத்து உலகின் எந்தப் பாகத்திலும் அதிகம் பேசக்கூடிய மக்களாக இருப்பவர்கள் இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமே. ஆனால் அந்த தமிழ் மக்களிடத்தில் ஒரு பகைமை மொழியாக சிங்கள மொழியும், சிங்கள மக்களும் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இந்த வரலாற்றுத் துரோகத்தின் சூத்திர தாரிகள் யார்? தீராப் பகையை இனங்களிடையே மூட்டி வைத்தது யார்? இந்தத் தருணங்களிலாவது இது எடுத்து நோக்கப்படாவிட்டால், வல்லரசுகளினதும், பிராந்திய வல்லாதிக்க சக்திகளினதும், சூழ்ச்சிகளுக்குள் சிக்கத் தவிக்கும் அந்தத் தீவும், தீவின் மக்கள் அனைவரும் தமது சுதந்திரத்தை தாமே தாரைவார்த்துக் கொடுத்தவர்களாக ஆகிவிடப் போகும் அபாயம் சூழ்ந்துள்ளது.

உலக அரங்கில் நான் ஒரு இலங்கையர் என சிங்கள மக்களோ அல்லது தமிழ் மக்களோ தலை நிமிர்ந்து சொல்ல முடியாதவாறான சூழ் நிலையைத் தோற்றுவித்தவர்கள் யார்? என்ற கேள்வி எழும்போது இரண்டு பக்கத்திலும் வாதங்களுக்கான சாட்சியங்கள் உண்டு. ஆனால், இதன் தொடக்கப்புள்ளி குறித்து ஆராய் கையில், இலங்கை சுதந்திரம் பெற்ற தன்பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியற் தலைவர்கள் முன்னிலைபெறுவது தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறு ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியற் தலைவர்களும் அவர்களுக்கு உடந்தையாகவிருந்த தமிழ் அரசியற் தலைமைகளும் தமிழினத்துக்குச் செய்தது துரோகம் என்றால், சிங்கள மக்களுக்குச் செய்திருப்பது மாபெரும் துரோகம். ஆனால், தங்கள் துரோகத்தின் வடுத்தெரியாதவாறு, இனவாதப் போதையூட்டி வைத்திருக்கிறார்கள் இந்த அரசியல் வாதிகள்.

சனல் 4 தொலைக்காட்சியில் **இலங்கையின் கொலைக்களம்** ஆவணப் படத்தில் பிரித்தானியத் தொலைக்காட்சியில் பார்த்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் புதல்வர் தன் தாயிடம், தான் ஒரு சிங்களவர் என சொல்ல வெட்கப்படுவதாகக் குறிப்பிட்ட உரையாடல் பொது வெளியில் வைத்து கவலை கொண்டார் சந்திரிக்கா. அந்தக்கவலையை உண்மையான கவலையாக எடுத்துக்கொள்ளலாமா...? என்றால், அது கேள்விக்குரியது. அதனை ஒரு அரசியல் வாதியின் அரசியற் கவலையாக மட்டுமே கருதமுடிகிறது ஏன்..? சந்திரிக்காவின் புதல்வரது கவலை உண்மையானது என்றால், அந்தக் கவலைக்கான காரணத்தின் தொடக்கமாக இருக்கக்கூடிய முக்கியமான காலம் சந்திரிக்காவின் தந்தையாராகிய பண்டார நாயக் காவின் ஆட்சிக்காலத்லேயே உருவானது.

இன்று பயங்கரவாதியாக



சிங்கள மக்களுக்கும் உலகத்துக்கும் சிங்கள ஆட்சியாளர்களாலும் அவரது நண்பர்களாலும் அடையாளப்படுத்தப்படும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், தமிழ் மக்கள்மீதான சிங்களப்பபேரினவாத அடக்குமுறை குறித்து முதலில் தான் உணர்ந்துகொண்ட தருணமென அடையாளப் படுத்துவது பண்டாரநாயக்காவின் காலத்தில் இடம்பெற்ற தமிழர்மீதான இனப்படுகொலையே. தமிழ் மக்கள் மீதான வன்முறையாக அக்கலவரம் நிகழ்வதற்குரிய நடவடிக்கைகள் அவரது அன்றைய செயற்பாடுகளில் நிறைந்திருந்ததாகவே குறிப்பிடப்படுகிறது. அன்று அவர் தொடங்கி வைத்த பேரினவாத அரசியலை அவருக்குப் பின் வந்த தல்லவர்கள் அனைவரும் ஊதிப்பெருக்க வைத்தார் களேயன்றி தணிந்து போகச்செய்யும் முயற்சிகள்

**நன்றி: இணையம்**

எதனையும் மேற்கொள்ளவில்லை. அது பண்டாரநாயக்காவின் ஆட்சிக்குப்பின் வந்த அவரது துணை வியார் சிறிமாவின் காலத்திலோ, அதற்குப்பின் வந்த சந்திரிக்காவின் காலத்திலோ, அல்லது மாற்றுக் கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஜெயவர்த்தன காலத்திலோ, அவருக்குப்பின் வந்த ரணிலின் காலத்திலோ, இனவாத அரசியல் கடந்து உண்மையாகச் செயற்படவில்லை.

காலங்கள் கடந்தபோதும் கடும் விளைவுகளைக் கண்டபோதும் நாட்டு மக்களின் துயர்களையும் மரணங்களையும் தங்கள் பதவி நாற்காலியின் புலம்மிக்கக் கால்களாகக் கருதிச் செயற்பட்டார்களேயன்றி உண்மை அரசியலை ஒருபோதும் மக்கள்முன் வைத்ததில்லை. அவ்வாறான அரசியல் வாதிகள் அனைவரது துரோக அரசியல் வழிநடத்தல்களின் அறுவடைதான் இன்று இலங்கையர் என சொல்தவதற்கு வெட்கப்படும் நிலை.

# சர்வதேச சமூகத்தால் கைவிடப்பட்ட தமிழினம் அழிவைச் சந்தித்துள்ளது

## ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை முன்னுதாரணம் என்கிறார் கரன் பார்கர் அம்மையார்



(கொழும்பு)

**உலக அரங்கில் இனவாத அரசுக்கான வரைவிலக்கணமாக இலங்கையை முன்னுதாரணமாக கொள்ளலாம் என IED அமைப்பின் பிரதிநிதி கரன் பார்கர் அம்மையார் தெரிவித்துள்ளார்.**

**ஐ.நா.மனித உரிமைச் சபையில் இனவாதம், இனத்துவேசம் தொடர்பில் இடம்பெற்ற விவாத அமர்வில் கரன் பார்கர் அம்மையார் உரையாற்றியிருந்தார்.**

உலகில் எங்கு இனநெருக்கடி இருக்கின்றதோ அங்கு இனவழிப்பு ஏற்படுத்துவதற்கான வழி நிலையுள்ளது என்ற ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானின் கூற்றினை மூலதாரணமாக கொண்டு தனது உரையை வழங்கிய கரன் பார்கர் அம்மையார் இனவாத மேலாதிக்க நிலையில் இனவழிப்பு ஏற்படுவதாக சுட்டிக் காட்டினார்.

ஜெனீவா ஐ.நா.உரிமைகள் சாசனத்தில் இனவாத அரசுக்கான வரைவிலக்கணம் இல்லை என்பதனைச் சுட்டிக்காட்டிய கரன் பார்கர் அம்மையார் இன்றைய உலகில் இலங்கையை ஒரு இனவாத அரசுக்குரிய முன்னுதாரணமாக கொள்ளலாம் என வலியுறுத்தினார்.

இலங்கைத் தீவின் பெரும்பான்மை இனவாத அரசானது தமிழ்த்தேசிய இனத்தின் மீது கட்டவிழ்த்துவரும் இனவழிப்பை அடுக்கிப் பேசிய அம்மையார் 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசானது தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை பறித்தெடுத்து வருகின்றமையை குறித்து கோட்டிட்டுக்காட்டினார்.

தமிழர்களின் மீது பயங்கரவாத முலாம் பூசி, சர்வதேச மனிதச் சட்டங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் அரசானது தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர் மீதும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாத முத்திரையை குத்தி வருவதனைக் கோடிட்டு தன்மீதும் இத்தகைய முத்திரையை இலங்கை அரசு குத்தியுள்ளதாக இடித்துரைத்தார்.

மானிடத்துக்கான உரிமைகளும் பாதுகாப்பும் எனும் ஐ.நாவின் உயரிய சாசனக் கோட்பாட்டுக்கு முன்னால் சர்வதேச சமூகத்தால் கைவிடப்பட்ட இனமான தமிழினம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளமையை ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையே தெளிவாக எடுத்துரைத்துள்ள நிலையில் இனவாத அரசுக்குரிய வரைவிலக்கணத்தை ஐ.நா. விரைந்து வரையவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். (அ-7)

# உலக வெப்பமயமாதலால் கடல் நீர் மட்டம் உயரும் அபாயம்!

(கொழும்பு)

உலக வெப்பமயமாதல் காரணமாக கடலின் நீர் மட்டம் 22 மீற்றர் வரை அதிகரிக்கும் என புதிய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஆய்வின் முடிவு குறித்து விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது இருக்கும் வெப்ப நிலையை விட எதிர்வரும் காலங்களில் 2 டிகிரி அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் உலக வெப்பமயமாதலின் அளவு வேறுபடும் போது கடல் மட்டத்தின் அளவு 5 முதல் 40 மீற்றர் வரை உயரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சுயாதீன விசாரணைக்கு வலியுறுத்தி போராட்டம்

## நோர்வேயில் மக்கள் திரண்டனர்

(கொழும்பு)

சுயாதீன சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசாங்கத்திடம் மேற்கொள்ள வலியுறுத்தியும் ஐ.நா.சபை அனைத்துலக போர் குற்றம் மற்றும் திட்டமிடப்பட்ட இனசுத்திகரிப்புக்கு எதிராகவும் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி வடக்கு நோர்வேயில் புலம்பெயர்ந்த தமிழர்களினால் அகிம்சை வழியில் ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழ் மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிராகவும் அப்படுகொலைகள் மற்றும் மானிட தர்மத்திற்கு விரோதமாகவும் மேற் கொள்ளப்பட்ட வன்முறை நடவடிக்கைகளை சர்வதேச சட்ட விதிகளுக்கு ஏற்ப சுயாதீன சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசாங்கத்திடம் மேற்கொள்ள வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பல்நாட்டு மக்கள் கலந்து கொண்டதுடன் நோர்வே நாட்டின் **Lobour pary** ஐ சேர்ந்த நகர பிதா திரு. சவின் திராக்னேஸ் **(Mayor Svein Drages)** மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் உரையாற்றினர்.

மேலும் சர்வதேச மன்னிப்பு சபைக்கு அனுப்புவதற்கு என மகஜரில் நகரபிதா அவர்கள் கையொப்பம் இட்டு ஆரம்பித்து வைத்தார். (அ-2)

# பாடசாலை சீருடைகளை உடன் விநியோகியுங்கள்

## சபையில் புத்திக்க எம்.பி.கோரிக்கை

பாடசாலை சீருடைகளை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வருடத்திற்கான பாடசாலை சீருடைகளை கடந்த வருட இறுதித் தவணையின் போது வழங்குவதாக கூறப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவை வழங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமனத்தின் போது கடமை முழுமையாக உள்ளடக்கப்படும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

மாணவர்களுக்கான உதவித் தொகை மேலும் அதிகரிக்கப்படுமா என இதன்போது புத்திக்க பத்திரன வினவினார்.

கல்வி பிரதி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா இதற்குப் பதிலளித்தார். இந்த விடயத்தில் மாணவர்களின் உயர்கல்வி மேம்பாட்டிற்கான ஊக்குவிப்புக்கள் குறித்தே கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதனை ஊக்குவிப்பு கொடுப்பனவாகவே கருத வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். இந்த விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜனசேகரவும் இணைந்து கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் குடும்ப சுகாதார சேவை பிரிவுகளில் சுகாதார நலன் நிலையங்களின் பற்றாக்குறை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். சுகாதார பிரதி அமைச்சர் லலித் திசாநாயக்க இதற்குப் பதிலளித்தார்.

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறி 2002 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் வடமத்திய மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மேல் மாகாணத்தின் நிரந்தர வதிவிட ஆசிரியர்களுக்கு தத்தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் வழங்குமாறும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி பிரதி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கூறினார். (அ-7)





வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 15, 19 வயது பிரிவுகளில் வட இந்து மகளிர் கல்லூரி அணியைத் தோற்கடித்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகியது. இவ்வணியினரை படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்கினால் பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படும்

## அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்தாவிட்டால் அந்நாடுகள் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. இச்செயலுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் அமைதிப்பணிகளுக்கானவை என அந்நாடு கூறிவந்தாலும் அதை அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

அதனால் ஈரானை தங்கள் வசப்படுத்த அந்நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதிக்குள் படிப்படியாக தங்கள் இறக்குமதியைக் கணிசமான அளவுக்குக் குறைக்க வேண்டும் என்றும் அதைச் செய்யத்தவறும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப்போவதாகவும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

அந்த எச்சரிக்கையை உறுதி செய்யும் விதத்தில் நேற்று முன்தினம் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் 11 நாடுகள் அடங்கிய பட்டியலை வெளியிட்டார்.

இந்நாடுகள் ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதியை கணிசமான அளவில் குறைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2012 இன் படி இந்த நாடுகளின் மீது அமெரிக்கா எவ்வித பொருளாதாரத் தடையையும் விதிக்காது என உறுதியளித்தார். பிற நாடுகள் இந்நாடுகளை தங்கள் வழிகாட்டிகளாகக் கருதி இவற்றின் வழி நடக்க வேண்டும் எனவும் அறிவுரை கூறியுள்ளார்.


அவர் வெளியிட்ட பட்டியலில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ், செக் குடிய ரசு, பெல்ஜியம், நெதர்லாந்து, போலந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளும் ஒரேயொரு ஆசிய நாடான ஜப்பானும் இடம்பெற்றுள்ளன.

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் முற்றிலுமாக எண்ணெய் இறக்குமதியை தடைசெய்து விட்டது. இப்போது இந்தியா, சீனா உட்பட மேலும் 12 நாடுகள் ஈரானிடம் இருந்து தொடர்ந்து எண்ணெய் இறக்குமதி செய்துவருகின்றன. இவை தங்கள் இறக்குமதியைக் குறைக்கத் தயாராக இருந்தால் அவற்றுடன் பேச அமெரிக்கா தயார் என ஹிலாரி தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஈரான் எண்ணெய் இறக்குமதி என்பது மூன்றாவது ஒருநாட்டை அல்லது சர்வதேசத்தை பாதிக்கும் அளவில் இல்லை. அது ஐக்கிய நாடுகள் விதிமுறைகளுக்கு மாறானதுமில்லை என்று தெரிவித்தார். (அ-2)

## பிரான்சில்

# இந்தோ. தூதரகம் அருகே குண்டுவெடிப்பு; கட்டடங்களுக்கு கடுமையான சேதம்



பிரான்சின் தலைநகர் பாரிஸ் அருகே உள்ள இந்தோனேசிய தூதரகம் அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் மிகுந்த சேதம் அடைந்தன.

நேற்றுமுன்தினம் காலை இந்த பயங்கரகுண்டு வெடித்ததில் இரண்டு கார்கள் தீப்பற்றி எரிந்தன. மேலும் 50 மீற்றர் சுற்றுவட்டாரத்தில் உள்ள கட்டடங்கள் கடுமையாக சேதமடைந்தன.

தூதரகத்தில் ஜன்னல் அருகே ஒரு பை கிடந்ததை தூதரக ஊழியர் ஒருவர் பார்த்துள்ளார். இதனையடுத்து அந்தப்பையில் இருந்த பார்சலை பார்த்தபோது அதில் வயர்கள் இருந்ததாகவும் உடனே அதை கீழே போட்டு விட்டு அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதிலிருந்த பார்சல் வெடிகுண்டு வெடித்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மிக அதிகஅளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இந்த வெடிகுண்டு அதிக எடையிலான வெடிபொருட்களை கொண்டு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று வெடிகுண்டு நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்த பகுதிக்கு தீயணைப்பு வண்டிகளுடன் விரைந்த பொலிஸார் அப்பகுதி முழுவதையும் யாரும் நுழைய முடியாதவாறு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (அ-2)

# அமெரிக்க விசா பெறுவதற்கு இனி நேர்முகத்தேர்வு கிடையாது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வசிக்கும் வெளிநாட்டினர் சிலர் அந்நாட்டு விசா எடுத்து அங்கு பணி செய்தோ அல்லது வசிக்கவோ செய்கின்றனர். அவர்கள் தங்களின் விசா முடிவுறும் காலத்தைப் பொறுத்து புதுப்பித்து வருகின்றனர்.

அதன்படி பி1 பி2 சி மற்றும் டி பிரிவு விசாவில் சென்றுள்ளவர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்களது விசாவினை புதுப்பித்து வருகின்றனர். அவர்கள் விசாவை புதுப்பிக்கும்போது நேர்முகத்தேர்வு இருக்கும். அதில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே விசா புதுப்பிக்கப்படும்.

ஆனால் இந்தமுறை தற்போது மாற்றப்பட்டுள்ளதாக துணைத் தூதரக விவகாரங்கள் துறையின் உதவி செயலாளர் ஜானிஸ் ஜேக்கப் கூறியுள்ளார். மேலும் இந்த புதிய முறை வர்த்தகர்கள், மாணவர்கள், சுற்றுலா பயணிகள் ஆகியோருக்கு பொருந்தும்.

இந்த புதிய முறை இந்தியாவில் தொடங்கப்பட உள்ளது. ஆனால் பாதுகாப்பு கருதி இவர்கள் எப்போது வேண்டுமானாலும் நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் கூறினார். (அ-2)

# டைட்டானிக் கப்பல் நினைவுநாளையொட்டி ஏப்ரல் மாதத்தில் தபால் தலைகள் வெளியீடு




(ஒன்டாரியோ)

டைட்டானிக் கப்பல் மூழ்கி நூற்றாண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி கனடாவில் புதிய தபால் தலைகள் வெளியிடப்படுகின்றது. கடந்த 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி அன்று வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் பனிப்பாறை ஒன்றில் மோதி டைட்டானிக் சொகுசுக் கப்பல் மூழ்கியது. இந்த விபத்தில் கப்பலில் பயணம் செய்த ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் டைட்டானிக் நினைவு நாள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வரவுள்ளது. இதற்காக டைட்டானிக் கப்பல் பொறிக்கப்பட்ட 5 தபால் தலைகள் கனடாவில் உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி அன்று ஐந்து தபால் தலைகள் வெளியிடப்படும். இவற்றை டெனிஸ் பேஜ், ஆலிவர் ஹில் ஆகியோர் வடிவமைத்துள்ளனர். (அ-2)




# எங்கள் அணுஆயுதங்கள் குறித்து விமர்சித்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்

## வடகொரியா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**தென்கொரியத் தலைநகர் சியோலில் அடுத்த வாரம் நடக்க உள்ள சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் வடகொரியாவின் அணு ஆயுதங்கள் பற்றி ஏதாவது விமர்சனம் செய்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என வடகொரியா எச்சரித்துள்ளது.**

சியோலில் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் சர்வதேச அணு சக்தி பாதுகாப்பு மாநாடு இடம்பெறவுள்ளது. இதில் அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல நாடுகள், சர்வதேச அமைப்புக்கள் கலந்து கொள்கின்றன.

இந்த மாநாட்டில் அணு ஆயுத பரவல் குறித்தும் பயங்கரவாதிகளிடம் இருந்து அணு ஆயுதங்களை பாதுகாப்பது குறித்தும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்துவார். குறிப்பாக ஈரான் மற்றும் வடகொரியா நாடுகள் அணு ஆயுதங்களை மேம்படுத்துவதை தடை செய்வதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்வார் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் பென்ரோடஸ் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதப் பரவலை வலியுறுத்தும் விதத்தில் அவுஸ்திரேலியா பாராளுமன்றில் அந்நாட்டு அரசு ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளது. அதன்படி அணு ஆயுத நாடுகள் தங்கள் அணு ஆயுத இருப்பை குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த முடிவுக்கு சர்வதேச அணு சக்தி பரவல் தடைச்சட்டத்திற்கு வெளியே உள்ள நாடுகள் ஆதரவளிக்க வேண்டும். இதன்மூலம் அணு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்க வழி ஏற்படும்.

இத்தீர்மான விடயத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லாட்டும் எதிர்க்கட்சித் தலைவர் டோனி அபோட்டும் கைகோர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ், சீன ஜனாதிபதி ஹூஜிண்டாவோ ஆகியோரை சந்தித்துப் பேச ஒபாமா திட்டமிட்டுள்ளார். இந்நிலையில் சியோல் மாநாடு குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள வடகொரியா.

அம்மாநாட்டில் வடகொரியாவின் அணு ஆயுதங்கள் குறித்து ஏதாவதுவிமர்சனம்செய்தால் அதுவே போருக்கான அழைப்பாகக் கொள்ளப்படும்.

அதனால் ஏற்படும் மோசமான விளைவுகள், கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதக்குறைப்பு நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கும் என எச்சரித்துள்ளது. தனது அணு ஆயுதக் குறைப்பு குறித்து பேச ஆறு நாடுகள் கூட்டத்திற்கு வடகொரியா ஏற்கனவே சம்மதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜப்பான் போர்க்கப்பல்கள்**

இந்நிலையில் வடகொரியாவில் இருந்து தனது கடல் மற்றும் வான்வெளிக்குள் எந்த ரொக்கெட்டாவது நுழையுமானால் அதைச் சுட்டுத்தள்ளும்படி ஜப்பான் உத்தரவிட்டுள்ளது.

இதற்காக தென்சீனக் கடற் பகுதியில் ஜப்பான் தனது போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளது. இக்கப்பலில் தரையில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் பி.ஏ.சி- 3 பேட்ரியாட் ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# தென்கொரியாவிற்கு மன்மோகன் சுற்றுப் பயணம் பேச்சுவார்த்தையிலும் கலந்துகொள்ள ஏற்பாடு

பிரதமர் மன்மோகன்சிங் நாளைய தினம் டில்லியில் இருந்து தென்கொரியா நாட்டின் தலைநகர் சியோல் நகரத்துக்கு பயணமாகிறார். அந்த நாட்டின் ஜனாதிபதி லீ மையுங் பாக் அழைப்பின் பேரில் அவர் அங்கு செல்கிறார்.

அன்றைய தினம் அந் நகரில் உள்ள தியாகிகள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத் துகிறார். அதைத் தொடர்ந்து அவருக்கு ஜனாதிபதியின் நீலமாளிகையில் அதிகார பூர்வ வரவேற்பு அளிக்கப் படுகிறது. பின்னர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை அவர் பார்வையிடுகிறார்.

அதனை தொடர்ந்து அவர் ஜனாதிபதியுடன் முதலில் தனியான பேச்சுவார்த்தை நடத்துகிறார். அதைத் தொடர்ந்து பிரதமருடன் செல்லும் உயர்மட்ட குழுவினரும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறார்கள்.

அப்போது இரு நாடுகளுக்கும்செல்வோருக்கு அளிக்கப்படும் விசாவை எளிமைப் படுத்துவது குறித்து ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. இது தவிர மேலும் பல ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகின்றன. பின்னர் பிர தமர் மன்மோகன் சிங்குக்கும் ஜனாதிபதி லீ மையுங் பாக் கும் இணைந்துகூட்டறிக்கைவெளியிடுகின்றனர்.

மறுநாள் திங்கட்கிழமை தென்கொரியா நாட்டு தொழில் அதிபர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங்கும் அவருடன் செல்லும் தூதுக்குழுவினரும் பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள். அப்போது இந்தியாவில் வந்து தொழில் தொடங்கும் படியும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பிற துறைகளில் முதலீடு செய்யும் படியும் தென்கொரியா தொழில் அதிபர்களுக்கு மன்மோகன் சிங் அழைப்பு விடுப்பார்.

பின்னர் சியோல் நகரில் நடக்கும் அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் 26,27 ஆகிய திகதிகளில் மன்மோகன்சிங் கலந்து கொள்கிறார்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் இந்த சுற்றுப் பயணம் இரு நாடுகளிடையே நட்புறவை மேலும் ஆழமாகவும்




அர்த்தமுள்ளதாகவும் வளர்க்கும். இரு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பு, பொருளாதார வளர்ச்சி மேலும் வலுப்படும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் வளர்ச்சியடையும். மண்டல மற்றும் சர்வதேச பாதுகாப்பு குறித்தும் இருவரும் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்று வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் தெரிவித்துள்ளார்.

1993 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் தென்கொரிய நாட்டுக்கு சென்றார். அதன் பின்னர் தென்கொரியா செல்லும் 2 ஆவது பிரதமர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

பாரதச் செய்தி

## அமெரிக்க வர்த்தக அமைச்சர் இந்தியா வருகை வர்த்தக தலைவர்களையும் அழைத்துவர முடிவு



அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஜான்பிரிசன் விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்ய இருப்பதாக தெரிவித்துள்ளார். அப்போது தன்னுடன் அமெரிக்க வர்த்தக தலைவர்களையும் அழைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் ஜான் பிரிசன் வோஷிங்டனில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில், தான் விரைவில் இந்தியா செல்ல இருப்பதாகவும் புதுடில்லி, ஜெய்ப்பூர், மும்பை ஆகிய நகரங்களில் நடக்கும் வர்த்தக கூட்டங்களில் பங்கேற்க இருப்பதாகவும் தெரிவித்தார். தன்னுடன் அமெரிக்க வர்த்தக தலைவர்கள் பலரையும் இந்தியாவுக்கு அழைத்து வர இருப் பதாகவும் கூறினார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் அப்போது இந்திய பாராளுமன்றத்தில் பேசுகையில், இந்த 21 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க -இந்திய உறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டிருந்தார். ஒபாமாவின் இந்த பேச்சை நிரூபிக்கும் வகையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தக உறவுகள் அதிகரித்து வருகின்றன. உலகில் வேகமாக பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அங்கு உள்கட்டமைப்பு துறைகளில் புதிய வர்த்தக வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எனவே, இந்தியாவில் அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு ஏற்ற தருணம் கிடைத்துள்ளது. எனவே, தானும் தனது வர்த்தக குழுவினரும் விரைவில் இந்தியாவுக்கு வர இருப்பதாக பிரிசன் தெரிவித்தார்.

இதேபோல அமெரிக்காவில் இந்திய வர்த்தக கம்பனிகள் மற்றும் தனி நபர்கள் முதலீடு செய்வதற்கு அமெரிக்கா ஊக்கம் கொடுக்கும் என்றும் அவர் கூறினார். ஆனால், இந்தி யாவுக்கு அவர் எப்போது வருவார் என்பது குறித்து எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தெலுங்கானா வருடப் பிறப்பிற்கு முதலமைச்சர் ஜெயா வாழ்த்து

தெலுங்கான வருடப் பிறப்பை முன்னிட்டு முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு,

தமிழகத்தில் வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் யுகாதி திருநாளில் என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் தாங்கள் பேசும் மொழி வேறுபட்டிருந்தாலும் வாழும் இடம் ஒன்று என்ற உணர்வுடன் தமிழகத்தில் பல நூறு ஆண்டுகளாய் ஒருமித்து வாழ்ந்து வருவதும் ஒருவரோடு ஒருவர் நல்லுறவைப் பேணி ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் செயல் தமிழ் மண்ணுக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களோடு இணைந்து சகோதார சகோதரிகளாய் தூய சொந்தங்களாய் இனிதே வாழ்ந்து வரும் தெலுங்கு மக்களுக்கும் கன்னட மக்களுக்கும் புத்தாண்டுத் திருநாளாம் இந்த யுகாதி திருநாளில் வருங்காலம் யாவும் வளம் பெறுக வாழ்க்கையில் என்றும் வசந்தம் வீசுக என்று கூறி என் இனிய நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன் என அதில் கூறியுள்ளார். (அ-2)

## அணு மின் உற்பத்தி மைய கூடங்குளம் உலகுக்கு அடையாளமாக காட்டப்படும்

### அப்துல் கலாம் தெரிவிப்பு

(சென்னை)

அடுத்த பத்தாண்டுகளில் மிகப் பெரிய அணுமின் உற்பத்தி மையமாக கூடங்குளம் உலகின் அடையாளம் காட்டப்படும் என முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மின் தேவையில் இந்தியா தன்னிறைவடைவதற்கு அணு மின் உற்பத்தி தேவை என்று உணர கூடங்குளம் அனுபவம் ஒரு வாய்ப்பாக அமைந்தது. அணு மின் உற்பத்தி செய்யப்படும் முறை அணு மின் நிலையங்களின் நம்பகத்தன்மை அவற்றின் பாதுகாப்பு மட்டுமின்றி 2030 இற்குள் மின் உற்பத்தியில் தன்னிறைவடைய அணு மின் சக்தி எவ்வளவு அவசியம் என்பதையும் உணர்ந்து கொள்ள இந்த அனுபவம் உதவியுள்ளது.

இது தொடர்பாக எழுந்த விவாதங்கள் பொது மக்களின் மனதைத் தூண்டிவிட்டு அணு மின் சக்தியின் மூன்று கட்டச் செயற்பாடுகளையும் நிலையான எதிர்காலத்துக்கு அது தேவை என்பதையும் புரிந்து கொள்ள வைத்துள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் கூடங்குளத்தை மிகப் பெரிய அணுமின் உற்பத்தி மையமாக உலகுக்கு அடையாளம் காட்ட இந்த அணு மின் திட்டம் பயன்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## இலங்கையின் அத்துமீறல்களை எதிர்த்து குரலெழுப்ப வேண்டும்

### கனிமொழி தெரிவிப்பு

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மான வாக்கெடுப்பிற்கு அமைய போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை விரைவில் மீள்குடியேற்றம் செய்ய இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று தி.மு.க. எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக இந்தியா குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகின்றார். இதுகுறித்து பேசிய அவர், இலங்கையில் போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களை எதிர்க்கும் வகையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு இந்தியா பத்தில் பதினொன்றாக ஆதரவு தெரிவித்தால் மட்டும் போதாது. இலங்கையின் அத்துமீறல்களை எதிர்த்து இந்தியா குரலெழுப்ப வேண்டும் என்று கூறினார்.

மேலும் இந்த தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவிப்பதன் மூலம் இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதால் அங்கிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழர்களை மீள்குடியேற்றம் செய்ய இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

## லோக்பால் மசோதா குறித்து விவாதிக்க அழைப்பு விடுப்பு

(புதுடில்லி)

லோக்பால் மசோதா தொடர்பாக விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்திறகு பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த கூட்டம் இன்று மதியம் பிரதமரின் இல்லத்தில் நடைபெறும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை அகற்றுவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது.

இந்த மசோதாவில் 97 திருத்தங்களை மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளதாக கூறப்படுகின்றது. இந்த மசோதா விரைவில் நிறைவேற்றப்படாவிட்டால் நாளை மறுதினம் முதல் மீண்டும் உண்ணாவிரதம் இரு க்கப் போவதாக சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே அறிவித்துள்ளார். பட்ஜெட் கூட்டத் தொடரில் லோக்பால் மசோதா குறித்து விவாதிக்கப்படும் என ஏற்ககனவே மத்திய அரசு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கொல்கத்தாவில் பயங்கர தீ விபத்து; பொருட்கள் எரிந்து நாசம்



(கொல்கத்தா)

கொல்கத்தாவின் வடக்குப் பகுதி நகரில் ஹதிபங் கான் சந்தை பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. நேற்று அதிகாலை இந்த விபத்து நேரிட்டதாக தகவல் வெளியாகியு ள்ளது.

கடை ஒன்றில் ஏற்பட்ட தீ அடுத்தடுத்த கடைகளுக்கு வேகமாக பரவி விபத்து ஏற்பட்டுள்ளது. 30 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகன்ங்கள் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. கடைகளில் சிக்கியவர்கள் உட்னடியாக மீட்கப்பட்டதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. பயங்கர தீ விபத்து ஏற்பட்டதில் பல இலட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

இதனையடுத்து அப்பகுதி முழுவதும் புகை சூழ்ந்து காணப்படுகின்றது. தீயணைப்புத் துறை அமைச்சர் ஜாவித் கான் விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றார். கொல்கத்தாவில் உள்ள முக்கிய சந்தைப் பகுதியில் இந்த பயங்கர தீ விபத்து ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. (அ-2)

## பழம் பெரும் நடிகை மனோரமா மருத்துவமனையில் அனுமதி

(சென்னை)




பழம்பெரும் நடிகை மனோரமா மைலாப்பூரில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் குளியலறையில் வழுக்கி விழுந்ததால் தலையில் அடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அறுவை சிகிச்சைக்கு பின் வீடு திரும்பினர். ஆனால் தொடர்ந்து தலைவலியினால் அவதிப்பட்டு வந்தார். மைலாப்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் தலைவலிக்காக அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிறுநீரகத்தில் கல் உள்ளதாக கண்டறியப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார். (அ-2)



டில்லியில் நேற்று முன்தினம் நடந்த சிறந்த ஊராட்சிகளுக்கான நிர்மல் கிராம புரஷ்கர் 2011 விருது வழங்கும் விழாவில் கேரளாவைச் சேர்ந்த குண்ணப்பிள்ளையிடம் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் விருதை வழங்கியதைப் படத்தில் காணலாம்.

# மின்சாரமின்றி சூரியசக்தியில் இயங்கும் மடிக்கணனிகள்



கணனி என்பது அத்தியாவசிய பொருளாகிவிட்ட இன்றைய சூழலில் மின்சாரம் மட்டும் அரிதாகிக் கொண்டே செல்கிறது. அதிலும் குறிப்பாக மடிக்கணனி Laptop பாவிப்பவர்கள் குறிப்பிட்டளவு நேரத்திற்கே அதனை பயன்படுத்த முடிவதால் அடிக்கடி மின்சார இணைப்பை தேடிச் செல்ல நேரிடுகிறது. இதனை நிவர்த்திக்கும் வகையில் சூரிய சக்தியில் இயங்கும் மடிக்கணனிகளை சம்சுங் Sumsung நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

Sumsung NC 215 S என்னும் புதியவகை மடிக்கண்னிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் சந்தைக்கு வரவிருக்கிறது. 2 மணித்தியாலங்கள் சூரிய ஒளியில் இந்த மடிக்கணனிகளை வைத்திருந்திருந்தார். ஒன்றரை மணித்தியாலத்திற்கு இக்கணனிகள் இயங்கும் என கருதுகிறார்கள். இதனடிப்படையில் இந்த சூரியசக்தியில் இயங்கும் மடிக்கணனிகள் நாளொன்றுக்கு சராசரியாக 14 மணித்தியாலங்கள் இயங்கக்கூடியது என கண்டுபிடிப்பாளர்கள் அறிவித்திருந்தார்கள்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இந்த சூரியசக்தி மடிக்கணனிகள் விற்பனைக்கு வரவிருக்கின்றன. ரஷ்யாவில் 500 அமெரிக்க டொலருக்கும் (சுமார் 58,000 ரூபாய்) அமெரிக்காவில் 300 அமெரிக்க டொலர்களுக்கும்(சுமார் 48,000 ரூபாய்) விற்பனை செய்யப்படவுள்ளதாக சம்சுங் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த மடிக்கணனிகளை காரியாலய பாவனைகளுக்காக நாங்கள் தயாரிக்கவில்லை. கல்லூரி மாணவர்களின் மத்தியில் மடிக்கணனி பாவனையினை அதிகரிக்கும் நோக்கிலேயே இதனை கண்டுபிடித்திருக்கிறோம். கல்லூரி மாணவர்கள் அதிகமாக வெளியிடங்களிலேயே இருப்பார்கள். அவர்களின் தேவைக்கு இந்த 14 மணித்தியாலங்கள் தாராளமாக போதுமென நாங்கள் கருதுகிறோம். எதிர்காலத்தில் சூரியசக்தியில் இயங்கும் இதுபோன்ற அதிகளவான மடிக்கணனிகளை உலகளாவிய ரீதியில் விற்பனைக்கு விடவும் சம்சுங் நிறுவனம் தயாராகி வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

# பெற்றோர்கள் குழந்தைகளின் கணனி செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான மென்பொருள்



உங்களது கணனியை வேறு நபர்கள் உபயோகித்தால் அவர்களின் செயற்பாடுகள் குறித்து எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இதற்குKey logger என்ற மென்பொருள் பயன்படுகிறது. கணனியில் ஒருவர் என்னென்ன செய்கிறாரோ என அனைத்தையும் அறிந்து கொள்ளலாம்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கண்காணிப்பதற்கு இந்த மென்பொருளை உபயோகிக்கலாம். இந்த மென்பொருள் குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு ஒருமுறை கணனியின் செயற்பாடுகளை ஸ்கிறீன்ஷொட் எடுத்து வைத்திருக்கும். அத்துடன்Chat History Log File என்பவற்றையும் சேமித்து வைத்திருக்கும்.

**இதன் சிறப்பம்சங்கள்**

Record Each Keystroke கீபோர்டில் அழுத்தப்படும் அத்தனை எழுத்துக்களையும் பதிவு செய்து வைக்கிறது. Instant Chat Messages Recording பேஸ்புக்Google Talk , Yahoo Messenger போன்றவற்றில் நீங்கள் சாட் பண்ணுபவற்றை அப்படியே பதிவு செய்கிறது.

Track E-mails கணனியில் இருந்து அனுப்பப்படும். பெறப்படும் மின்னஞ்சல்களை கண்காணிக்கிறது. monitor Web Sites கணனியில் இருந்து உலவும் இணையத்தளங்களை கண்காணித்து பதிவு செய்து வைக்கிறது. Review every Downloded File தரவிறக்கம் செய்யும் ஒவ்வொரு File பற்றிய தகவல்களையும் பதிவு செய்கிறது.

# பேஸ்புக்கின் புத்தம் புதிய வசதி

உலகம் முழுவதும் 800 மில்லியனுக்கும் அதிகமான வாசகர்களைக் கொண்ட ஒரே சமூக இணையத்தளம் பேஸ்புக் ஆகும். எனவே, பேஸ்புக் புதுப்புது வசதி களை அறிமுகப்படுத்திக் கொண்டே உள்ளது. தற்போது பேஸ்புக்கில் interest வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து ஒரு pop-up விண்டோ ஓபன் ஆகும். அதில் நீங்கள் பின்தொடரும் பக்கங்கள் நண்பர்கள் subscribe செய்யும் பட்டியல் இருக்கும் காணப்படும். அதில் உங்களுக்கு பிடித்த நபர்களை மட்டும் தெரிவு செய்து கொள்ளவும். உங்களுக்கு பிடித்த நபர்களை மட்டும் தெரிவு செய்த




இந்த வசதியின் மூலம் உங்களுக்கு மிகவும் விருப்பமான நபர்களின் பகிர்வுகளை மட்டும் பார்க்கலாம். இதற்கு முதலில் உங்கள் பேஸ்புக் தளத்தை ஓபன் செய்து கொள்ளுங்கள். அதில் இடது பக்கத்தில் கீழ் பகுதியில் interest என்ற புதிய வசதி இருக்கும். அதன் மீது கிளிக் செய்யவும்.

அடுத்ததாக ஓபன் ஆகும் விண்டோவில் CREATE LIST என்ற பட்டனை அழுத்தவும்.

வுடன் கீழே உள்ள Next என்ற பட்டனை அழுத்தவும்.

அடுத்து ஓப்பனாகும் விண்டோவில் உங்களுக்கு பிடித்த தலைப்பை கொடுத்து உங்கள் பட்டியல் யாருக்கு தெரிய வேண்டும் என்பதை தெரிவுசெய்து கொள்ளவும். அடுத்து கீழே உள்ள Doneஎன்பதைகிளிக்செய்தால்போதும் தெரிவு செய்தவர் களின் பதிவுகளை மட்டும் இனி தனியாக பார்த்துக் கொள்ளலாம்.

# எக்ஸெலில் COMBIN பற்றி அறிந்து கொள்ள ஓர் புதிய வழி

கணனியில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் எக்ஸெல் தொகுப்பு COMBIN என்று ஒரு செயற்பாடு உள்ளது. இதனைப் பலர் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டோம். இதனை பயன் படுத்துவதற்கான தேவை நம்மில் அநேகருக்கு இருந்திருக்காது. அவ்வாறு தேவை ஏற்படும் போது நாம் தேடி அறிந்து கொள்ள இதனைப் பயன்படுத்தலாம்.

இந்த செயற்பாடு ஒரு செட் எண்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது இரண்டையும் கலந்தவற்றைக் கொண்டு எத்தனை வகையாக இணைக்கலாம் என்பதனை உடனே காட்டும். எடுத்துக்காட்டாக 26 எழுத்துக்கள் ஆங்கிலத்தில் உள்ளன.

10 எண்கள் உள்ளன.(0முதல் 9 வரை) இவற்றைப் பயன்படுத்தி நான்கு கேரக்டர்கள் உள்ள இணைப்புகள் எத்தனை உருவாக்க முடியும். நாம் பேப்பர், பேனா எடுத்துக் கொண்டால் இன்று மட்டுமல்ல ஒரு வாரத்திற்கு மேல் ஆகலாம். எக்ஸெல் கண் சிமிட்டும் நேரத்தில் சொல்லிவிடும். அதற்கு இந்த பங்சன் உதவுகிறது.

இந்தச் செயற்பாட்டை செயற்படுத்த பார்முலா பார்மட் கீழ்க்கண்டவாறு அமைகிறது =COMBIN (universe, sets) இதில் universe என்பது புதிதாக அமைக்கப்படுவதற்கான டேட்டா. இங்கே 26 எழுத்துக்களும் பத்து எண்களுமாகும்.

sets என்பது ஒவ்வொரு இணைப்பிலும் எத்தனை கேரக்டர் இருக்க வேண்டும் என்பதனைக் குறிக்கிறது. எனவே,நாம் மேலே சொன்ன டேட்டாவிற்கு பார்முலா கீழ்க்கண்டவாறு அமைகிறது.=COMBIN (26+10,4) இதில் 58,905 இணைப்பு கேரக்டர்களை உருவாக்கலாம்.




# பேஸ்புக் பாவனையாளர்களுக்கு மின்னஞ்சலுக்கு கடவுச்சொற்கள் தேவையில்லை

பேஸ்புக் பாவனையாளர்களின் கடவுச் சொற்களை Passwords தருமாறு மின்னஞ்சல் மூலம் ஒருபோதும் பேஸ்புக் கோராது எனவும் அவ்வாறான மின்னஞ்சல்கள் கிடைக்கப்பெறின் அவற்றை நம்பத் தேவையில்லை எனவும் பேஸ்புக் அறிவித்துள்ளது. அத்தோடு பேஸ்புக் கணக்கிற்கு உள்நுழையும் சந்தர்ப்பம் தவிர இரண்டே இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் உங்கள் கடவுச் சொற்களை பதியுமாறு பேஸ்புக் கோரும் எனவும் ஏனைய எச்சந்தர்ப்பங்களிலும் உங்கள் கடவுச் சொற்களை எங்கும் தட்டச்சு செய்ய வேண்டாம் எனவும் பேஸ்புக் அறிவித்துள்ளது.

உங்கள் கணக்கு விபரங்களை மாற்ற முற்படும் போதும் உங்கள் புறொபைல் விபரங்களை மாற்ற முற்பட்டு 20 நிமிடங்கள் கடந்தால் அதன்போதும் மாத்திரமே பேஸ்புக் உங்கள் கடவுச் சொற்களைக் கோரும் எனவும் பேஸ்புக் அறிவித்துள்ளது.

20 நிமிடங்கள் ஏன் என்ற விபரத்தையும் பேஸ்புக் விபரமாக அறிவித்துள்ளது. இதன்படி உங்கள் புறொபைலில் காணப்படும் மின்னஞ்சல், தொலைபேசி இலக்கம், உங்கள் பேஸ்புக் பக்கங்களின் நிர்வாகிகள் ஆகியோரை மாற்ற முற்பட்டு அப்பக்கங்களுக்குச் சென்று 20 நிமிடங்கள் கடந்தால் பேஸ்புக் உங்கள்கடவுச்சொல்லைதட்டச்சுமாறு கோரும். உங்கள் கணக்கின் அணுக்கம்(கணக்கின் அக்ஸஸ்) உங்களிடம் இன்னமும் உள்ளது என்பதை உறுதிப்படுத்தவே உங்கள் கடவுச் சொல் இங்கு கேட்கப்படும். காரணம் அப்பக்கங்களுக்கு நீங்கள் சென்ற பின்னர் நீங்கள் மறந்து உங்கள் கணனியை விட்டு வேறெங்காவது சென்றுவிடின் வேறு நபர்கள் உங்கள் விபரங்களை மாற்றுவதைத் தடுக்க பேஸ்புக் விரும்புவதாக பேஸ்புக் அறிவித்துள்ளது.

ஆகவே அதைத் தவிர பேஸ்புக் உங்கள் கணக்கு விபரங்களையோ, கணக்கின் கடவுச் சொல்லையோ ஒருபோதும் மின்னஞ்சல் ஊடாக கோராது எனவும் உங்கள் கடவுச் சொல்லையோ அல்லது கணக்கின் அணுக்கத்தையோ நீங்கள் இழந்திருந்தால் உடனடியாக பேஸ்புக்கிற்கு சென்று உங்கள் கணக்கை மீளப்பெறுமாறும் பேஸ்புக் தெரிவித்துள்ளது. உங்களது மின்னஞ்சலும் ஹக்கர்களினால் களவாடப்பட்டிருப்பின் உங்கள் அடையாளஅட்டை, கடவுச்சீட்டு, வாகன ஓட்டுநர் அட்டை போன்வற்றில் ஏதாவதொன்றைச் சமர்ப்பித்து கணக்கை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதனின் செயல்களில் அவன் கவலைப் படத்தகுதியானது எதுவுமே கிடையாது. - பிளாட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தென்பகுதி மக்களே! நல்லது நடந்துள்ளது

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறியுள்ளது. இவ்வாறு நிறைவேறிய தீர்மானம் எத்தரப்புக்கு வெற்றியென்று யாரேனும் கேட்பார்களாயின் அது அறியாமையின் பாற்பட்டதாகும்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நேற்றுவாக்கெடுப்பில் நிறைவேறி உள்ளது என்ற செய்தியால், சிங்கள மக்கள் கவலை கொள்வதோ அல்லது அரசாங்கம் வேதனைப்படுவதோ அர்த்தமற்றவை.

உண்மையில் தீர்மானம் நிறைவேறியதையிட்டு இலங்கை மக்கள் அனைவரும் ஆனந்தமடையவேண்டும்.

ஏனெனில் இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சர்வதேசம் ஒரு முடிவைக் கட்டப்போகின்றது.

இத்தகையதொரு சர்வதேசத் தலையீடு இல்லாமல் இலங்கை அரசுகளால் ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட முடியாது. அதே நேரம் இனப்பிரச்சினை இந்த நாட்டில் தொடருமாயின் அதனால் யாருமே நிம்மதியாகவும் வாழ முடியாது.

இதனையே கடந்தகால அனுபவங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை இலங்கை அரசு வெற்றிகொண்டிருக்கலாம்.

ஆனால் விடுதலைப்புலிகளை தோற்கடித்தமைதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு என அரசாங்கம் நினைத்துக்கொண்டதுதான் இங்கு நடந்த மகா தவறு. இந்த நினைப்பை சிங்கள மக்களும் கொண்டிருக்கலாம்.

ஆனால் யதார்த்தம் அதுவன்று. இப்போது இருக்கக் கூடிய சூழமைவில் உலகளாவிய ரீதியில் உரிமைப் போராட்டங்களை தயார்படுத்தக் கூடிய வசதிகள் உண்டு.

அத்தகையதொரு வசதிநிலையில் இலங்கையில் மீண்டுமொரு உரிமைப்போராட்டம் ஏற்படமாட்டாது என எவரும் உத்தரவாதம் அளிக்க முடியாது.

எனவே ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியதன் மூலம் இலங்கையில் எல்லா மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சூழமைவு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத்தீவு தனித்து பௌத்த சிங்கள நாடு என்ற நினைப்புக்கு முடிவு கட்டுவதாக இருந்தால், அதற்கான ஒரேவழி ஐ.நா.தீர்மானம் மட்டுமே ஆகும்.

அதேசமயம் அப்பாவி மக்களின் உயிர்ப்பறிப்பில் யார் பங்கெடுத்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

இதில் அரசு – புலி என்ற பேதங்கள் இருத்தலாகாது. கொடூரமான மனிதப்படுகொலைகளை நிகழ்த்திவிட்டு அதனை வெற்றிக் களிப்பாக்கிக் கொள்வதை அனுமதித்தால், உலகமெங்கும் இத்தகைய கொடூரங்கள் நடக்க ஏதுவாகும்.

எனவே ஐ.நா. தீர்மானத்தை பௌவியமாக ஏற்று அதற்கு இசைந்து இனப்பாகுபாடு களைந்து சுதந்திர மனிதர்களாக–மகிழ்வாக இந்த நாட்டில் வாழ்வோம். வாருங்கள் தென்பகுதி மக்களே!

# 30 பரப்புக் காணியில் கைதடியில் படைமுகாம்

## மக்கள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கில் 30 பரப்புக் காணியில் இலங்கை இராணுவம் பெரியதொரு இராணுவமுகாம் ஒன்றினை புதிதாக அமைத்து வருவதாக பிரதேசவாசிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் முகாம் அமைப்பதற்கு பிரதேசவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளபோதும் முகாம் அமைக்கப்படும் காணி அரசினுடையதென்று இராணுவத்தினரால் கூறப்பட்டே இவ் முகாம் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இக் காணியில் கிட்டத்தட்ட 5 பரப்பிற்கு மேற்பட்ட அளவு காணி தனியார்களுக்கு சொந்தமானது எனக் கூறப்பட்டது.

கைதடி வடக்கில் உள்ள அன்னம்மா கோவிலுக்குஅருகிலுள்ளகாணியிலேயே இவ்வாறான படைமுகாம் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படை முகாம் அமைக்கப்படும் நடவடிக்கைகள் 3 மாத காலத்திற்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்டு தற்போது படைமுகாமின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் காணப்படுகின்றது.

காணிகளைச் சுற்றி முட்கம்பிகள் கொண்ட தூண்களால் அடைக்கப்பட்டு மிகவும் இரகசியமாகவே இப்படை முகாம் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்படை முகாம் அமைக்கப்பட்டு வரும் இடம் ஜே / 288 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டு உள்ளதாகும்.

கைதடிப் பகுதியில் உள்ள பல இடங்களில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளை விட இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாகவே காணப்படுகின்றது.

கைதடியிலுள்ள சில சனசமூக நிலையங்களினை இராணுவத்தினர் தமது முகாம்களாக பயன்படுத்துவதனால் சனசமூக நிலையங்கள் இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அவ்வாறு சனசமூக நிலையங்கள் இயங்கினாலும் இராணுவத்தினரின் பிரசன்னத்தால் பொதுமக்கள் உரிய முறையில் பயன்பெற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து சாவகச்சேரி பிரதேச செயலரிடம் கேட்ட போது அவர் தமக்கு எதுவும் தெரியாது என்றும் அவ்வாறு தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அறியத்தருவதாகவும் தெரிவித்தார். (எ-4)

## பிச்சை எடுக்க யாழ்.வந்த மூன்று சிறுமிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் இருந்து பிச்சை எடுப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த 3 சிறுமிகள் மற்றும் இரு தாய்மார்கள் யாழ்.நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலநறுவையில் இருந்து தனியார் பேருந்து ஒன்றின் மூலம் யாழ்.பஸ் நிலையத்திற்கு மூன்று சிறுமிகள் இரு தாய்மார்களின் வழிகாட்டல் களுடன் பிச்சை எடுப்பதற்காக வந்துள்ளனர்.

இவ் ஐவரையும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினரும் யாழ்.பிரதேச செயலக நன்னடத்தை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இணைந்து கைது செய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கு விசாரணையின் போது, குறித்த ஐவரும் பிச்சை எடுப்பதையே தொழிலாக கொண்டு உள்ளதாகவும், குறித்த 3 சிறுமிகளும் 13 வயதிற்குட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது. குறித்த ஐவரையும் யாழ்.நீதவான் கடுமையான எச்சரிக்கையுடன் விடுதலை செய்தார். (எ-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோவில் கர வருட மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என ஆலய ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிக்கு கைலாசவாகனமும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 7.30 மணிக்கு குதிரை வாகனமும் இடம்பெறும்,

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை 6.30 மணிக்கு வசந்தமண்டபப்பூசையைத் தொடர்ந்து பூங்காவனமும் நடைபெறவுள்ளது. இம்மஹோற்சவம் பிரதம குரு வேத சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்களினால் ஆற்றப்படவுள்ளது. (அ-7)



## வெள்ளி நற்சிந்தனை

64

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

நமக்கு உதவிசெய்ய யாருமில்லையே என வருந்துகின்ற வேளையில் எம்மை நாமே ஆறுதல்படுத்த ஒரு வழியுண்டு. சுற்றமும் நட்பும் உறவும் எம்மைச் சூழ்ந்திருந்தாலும் சில வேளைகளில் அவர்களாலும் எம்முடைய விருப்பை நிறைவேற்ற முடியாது. எனவே எம்மை நாமே ஆறுதல்படுத்த இறைவழிபாடு தான் சிறந்தது. இறைவனிடம் எமது நிலையை எடுத்துரைப்பதே நல்லது. பூரண அடைக்கலமாக இறைவனை நினைந்து வழிபாடு செய்யவேண்டும்.

இறைவன் கோல அழகு பல்வேறுபட்டது. ஆனால் இறைவியோடு வீற்றிருக்கும் கோல அழகு தனித்துவமானது. உலக வாழ்வியல் இன்பங்களை வெறுத்து அதற்குக் காரணமான உடலை வெறுக்கும் மணிவாசகர் இறைவன் இறைவியோடு இருக்கும் கோல அழகையே வழிபடுகிறார். அவருடைய மனதிலே இடப்பாகத்திலே உமையம்மையை ஒரு கூறாகவுடைய அர்த்தநாரீஸ்வர வடிவமே தோன்றுகிறது. அதிலும் உமையம்மையுடைய கோல அழகு துல்லியமாய்த் தெரிகிறது.

சீற்றங்கொண்ட பாம்பின் படம் போன்ற அவ்குவினையும் செய்ய வாயினையும் வெண்மையான நகையினையும் கரியவாள் போன்ற கண்ணினையுமுடைய உமையம்மையைக் காண்கிறார். பெண்மையின் அழகில் இந்த அழகு வேறுபட்டது. ஆண்மையை ஒரு கூறாக உடையது. இந்த அற்புதமான கோலம் மணிவாசகருக்கு ஒன்றை உணர்த்துகிறது. அம்மையப்பனாய் விளங்கும் நிலையில் தனது விண்ணப்பம் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கை வலுப்படுகிறது.

இறைவன் பெரிய விடையை வாகனமாகக் கொண்டு வருங்கோலமும் மணிவாசகர் நினைவில் வருகிறது. சம்பந்தக்குழந்தைக்கு அன்று விடையேறி வந்து அருள்செய்தமையையும் எண்ணிப்பார்க்கிறார். இறைவன் விடையேறி இறைவியோடு தோன்றி ஆளுடையபிள்ளையாருக்கு அருள்செய்த வரலாறு மணிவாசகர் அறிந்த வரலாறு. அதனால் மால்விடையூர்தி என அழைத்து வழிபடுகிறார். எல் லோருக்கும் தலைவனான இறைவன் என்பதைக் குறிக்க எம்பிரானே என அழைக்கிறார். இந்த உலக வாழ்க்கையில் எனக்கு எதுவித ஈடுபாடும் கிடையாது. இந்த வாழ்க்கையை என்னால் இனிமேல் பொறுக்கவும் முடியாது. இதனை இப்போது. மிகவும் வெறுக்கிறேன். என் உடலை நீ நீக்கியருள வேண்டும். இதுவே அவர் இரந்து கேட்பது.

மணிவாசகரது மனதில் இதுவரை காலமும் உலக வாழ்க்கை பற்றியிருந்த எண்ணம் மாறிவிட்டது. அதனால் இறைவனிடம் நேரில் பேசித் தன் துன்பத்தைத்தீர்க்க எண்ணுகிறார். ஆற்றகில்லேன் என அவர் கூறும்போது தனது உண்மைநிலையைவெளிப்படுத்துகிறார். மற்றோர் சரணிலேன் என்ற தொடர் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வேறொரு புகலிடம் இல்லையென்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார். இப்பாடலில் மால்விடை என்பதற்கு இறைவன் தடமதில்களைத் தழலால் எரித்தநாளில் திருமால் இடபமாகத் தாங்கி நின்றமையால் திருமாலாகிய விடை எனவும் பொருள் உண்டு. எனினும் மணிவாசகரது மனதிலே இறைவன் மீது கொண்ட பக்தி மேலோங்கி நின்றமையால் கோல அழகை வழிபடுகிறார்.

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன்
போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரியவாட்கண்
மங்கையோர் பங்கபோற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ் வாழ் வாற்றகில்லேன்
எம்பிரான் இழித்திட்டேனே

# எரிவாயுவின் விலை விரைவில் எகிறும்?

எரிவாயு விலை விரைவில் அதிகரிக்குமென நுகர்வோர் விவகார அதிகாரசபை கூறியுள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூர், விலையுயர்வு தொடர்பான பேச்சுக்கள் இன்னும் தொடர்வதாகவும் ஆனால், எரிவாயுவின் விலையை எவ்வளவில் அதிகரிப்பது என்னும் விடயத்தில் முடிவு எட்டப்படவில்லை என கூறினார்.

எரிவாயு விரைவில் மீளாய்வு செய்யப்ப டும். தீர்மானம் எடுத்த பின் நாம் இதுபற்றி அறிவிப்போம். புதிய விலை பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட பின் வர்த்தமானியூடாக அறிவிக்கப்படும் என மர்சூர் தெரிவித்தார்.

எரிபொருட்களின் விலைகள் கடந்த மாதம் அதிகரிக்கப்பட்ட பின் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எரிவாயுவின் விலைகளை அதிகரிக்க அனுமதிக்கப்படமாட்டாது என கூறியிருந்தார்.

இருப்பினும் பிரதான எரிவாயு கம்பனியான லாஃப், லிற்றோ நிறுவனங்கள், 12.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை முறையே ரூபா 209 மற்றும் 175 ஆல் அதிகரிக்க அனுமதி கோரியுள்ளன. தற்போது ஒரு எரிவாயு சிலிண்டரின் விலை 2 ஆயிரத்து 46 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் இவ்வருடம் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலய அணியினரை படத்தில் காணலாம்.

# இந்தியாவின் தேவைக்கேற்பவே ஈழத்தில் யுத்தம் நடத்தப்பட்டது

## விக்ரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை வாக்கெடுப்பிற்கு விடாது தடுப்பதற்கான நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டு வருவதாக இடதுசாரி முன்னணி தெரிவித்தது.

இந்தியாவின் தேவைக்காகவே பிரபாகரனுக்கு எதிராகவும் தமிழ்மக்களுக்கு எதிராகவும் யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. எனவே, இந்த பாவக்கறையை இந்தியா கழுவ வேண்டிய அவசியம் உள்ளது.

இது தொடர்பாக இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை, கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடு இந்தியாவுக்குண்டு. ஏனெனில் இந்தியாவின் தேவைக்கிணங்கவே தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, அந்தப் பாவக்கறையை போக்கும் தேவை இந்தியாவிற்கு உள்ளது. எனினும் ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை வாக்கெடுப்பிற்கு விடாது மஹிந்தவை பாதுகாக்கவும் அதே வேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை பொறுப்பேற்கவும் இந்தியா காய் நகர்த்தல்களை மேற்கொள்கிறது.

ஏற்கனவே இலங்கை அரசாங்கம் பல உறுதி மொழிகளை வழங்கி ஏமாற்றியதால் இம்முறை இந்தியா கடும் போக்கினை கடைப்பிடிக்கவுள்ளது எனவும் தெரிவித்தார். (அ-7)

# பயங்கரவாத அச்சுறுத்தல் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்படவில்லை- கோத்தபாய

பயங்கரவாத அச்சுறுத்தல் முற்று முழுதாக இல்லாது ஒழிக்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பிச் சென்றதாகவும் பெருமளவிலான ஆயுதங்கள் தொடர்ந்தும் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முற்று முழுதாக நீங்கியதாக கருத முடியாது. எனினும் புலிகள் மீள இயங்க மேற்கொள்ளும் முயற்சிகள் முறியடிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரனின் மரணத்துடன் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாக சிலர் பிழையாக கருதுகின்றனர். உண்மையில் யுத்தம் முடிவடைந்தது முதல் பல தடவைகள் புலிகள் மீள இயங்க எடுத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதால் யுத்த வலயங்களுக்கு எவ்வித தடையுமின்றி பயணம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் வடக்கு, கிழக்கில் படையினரைத் தவிர வேறு எவரும் ஆயுதம் ஏந்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-7)

# ஜெனீவா பிரேரணையை ஆதரிக்க கோரி ஆஸி.செனட்டில் தீர்மானம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் குறித்து அவுஸ்திரேலிய செனட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்மொழிந்துள்ள தீர்மானத்தின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறப் போகும் நிலையில் இலங்கை மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இரு தரப்பிலும் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியா தொடர்ந்தும் கூறிவரும் வேளை அவுஸ்திரேலிய செனட்சபையில் இது தொடர்பிலான ஒரு தீர்மானம் நேற்று முன்தினம் நிறைவேறியுள்ளது.

இலங்கையில் போருக்குப் பின்னர் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையாக கவனிக்கத் தவறியது என்றும் எனவே, ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தையாவது அவுஸ்திரேலியா குறைந்தபட்சம் ஆதரிக்க வேண்டும் என்றும் செனட் கோருவதாக அங்குள்ள பசுமைக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லீரியனன் கொண்டு வந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு பல ஆக்கபூர்வமான பிரேரணைகளை முன்வைத்திருந்தாலும் அது போதுமானதாக இல்லை எனவும் அவுஸ்திரேலியா கூறுகிறது. (அ-7)

# ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படாவிட்டால் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் உரிய காலத்திலிருந்து மூன்று மாதங்கள் தாமதமாகியுள்ளன. இந்த ஆசிரிய இடமாற்றங்கள் உடனடியாக செயற்படுத்தப்படாது போகுமாயின் அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஆசிரிய சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மூவாயிரத்திற்கு மேற்பட்ட அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்க அரசு தவறியுள்ளமையினால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் நேற்று வியாழக்கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி புதிய வருடத்திற்காக பாடசாலை தொடங்க முன் ஜனவரி மாதத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நடக்க வேண்டும். பின்னர் இத்திகதி மார்ச் 3 என மாற்றப்பட்டது.

எனினும் இந்த திகதியில் கூட இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. நாட்டிலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது உடனடி தேவையாகும் என இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் பொதுசெயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

இந்நிலைக்கு கல்வி அமைச்சும் மாகாண கல்வி அதிகாரிகளுமே பொறுப்பானவர்கள் என ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# இலங்கை நிலைமைகள் குறித்து சுயாதீனமாக ஆராயப்படும்

## கனடா அறிவிப்பு

இலங்கையின் நிலைமைகள் குறித்து சுயாதீனமாக ஆராயப்படவுள்ளதாக கனடா அறிவித்துள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர்.

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்காணிப்பின் பின்னர் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட தீர்மானங்களை கனடா எடுக்கும் என குறிப்பிடப்படுகிறது. உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதே கனடாவின் நிலைப்பாடு என அந்நாட்டு வெளிவிகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கனடா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (அ-7)

# யாழ்.பல்கலையின் விளையாட்டு அவையின் துடுப்பாட்டப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற 9 ஆவது அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நாளை (சனிக்கிழமை) யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என யாழ்.பல்கலைக்கழக துடுப்பாட்ட அணித் தலைவர் கே.செல்ரன் அறிவித்துள்ளார்.

இவ் ஆரம்ப போட்டியில் யாழ். பல்கலைக் கழகத்தினை எதிர்த்து கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இந்நிகழ்விற்கு முன்னாள் பல்கலைக்கழக துடுப்பாட்ட வீரரும் யாழ். மாவட்டச் செயலக அபிவிருத்தி உதவியாளர் திரு. எஸ்.ஹரிதாஸ் விருந்தினராக கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இச்சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம், கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம், சென்றல் விளையாட்டுக்கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் கலந்து கொண்டு விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

ஆசிய கிண்ண கிரிக்கெட்

# சொந்த மண்ணில் இறுதிவரை போராடியது பங்களாதேஷ்; 2 ஓட்டங்களால் வென்று 2-வது முறை சம்பியனானது பாகிஸ்தான்


micromax asia cup 2012

11 ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் பங்களாதேஷ் அணியை 2 ஓட்டங்களால் வெற்றி கொண்டு ஆசியக் கிண்ணத்தை 2ஆவது முறையாக வெற்றி கொண்டது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்ற ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் நடைபெற்றது.

நடப்பு சம்பியனான இந்தியா மற்றும் இலங்கை அணிகள் வெளியேற்றப்பட்டதையடுத்து நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாகிஸ்தான, பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனையடுத்து பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடியது. பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான முகமது ஹபீஸும் நஸீர் ஜாம்ஷெட்டும் களமிறங்கினர். மொர்தசாவின் சிறப்பான பந்துவீச்சால் ஜாம்ஷெட் 9 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.



அடுத்து வந்த யூனிஸ்கான் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் நஸ்முல் ஹூசைன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவரை அடுத்து பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக், முகமது ஹபீஸுடன் ஜோடி சேர்ந்தார். மிஸ்பா 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த உமர் அக்மல், ஹமாத் ஆஸம் தலா 30 ஓட்டங்களும் சகிட் அப்ரிடி 34 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். சிறப்பாக விளையாடிய முகமது ஹபீஸ் 40 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் களமிறங்கிய விக்கெட் காப்பாளர் சர்ப்ராஸ் அகமட் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்கள் எடுத்து அணியின் எண்ணிக்கையை ஓரளவு உயர்த்தினார்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 236 ஓட்டங்களை எடுத்தது. இதையடுத்து 237 ஓட்டங்கள் எடுத்தால்வெற்றி என்ற இலக்கோடு பங்களாதேஷ் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய தமீம் இக்பால் 60 ஓட்டங்களும் நசிமுடின் 16 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.




அடுத்து களமிறங்கிய ஜகுருல் இஸ்லாம் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய நசிர் ஹூசைன் 28 ஓட்டங்களும் சகிப் அல் ஹசன் 68 ஓட்டங்களும் எடுத்து அணியின் எண்ணிக்கை உயர்த்தினர். பின் களமிறங்கிய அப்துர் ரசாக் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 49.5 ஓவரில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சகா்த் ஹூசைன் ஓடடங்கள் எடுக்கவில்லை. இறுதியில் பங்களாதேஷ் அணி 50ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 234 ஓட்டங்களை எடுத்து 2 ஓட்ட வித்தியாசத்தில் போராடித் தோற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தானின் சகிட் அப்ரிடியும், தொடர் நாயகனாக பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசனும் தெரிவாகினர்.



## இலங்கை அரசு பொறுப்புக் கூறு...

பொறுப்புகூறுதலை ஊக்கப்படுத்துவது தொடர்பான தீர்மான வரைவு 1.2 ஐ அறிமுகம் செய்து ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது அமர்வின் போது ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் எய்லின் சேம்பர்லின் ஆற்றிய உரை பின்வருமாறு;

இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்ற பெரும் அவலங்களை ஏற்படுத்திய யுத்தம் முடிபுக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

இந்த மூன்று வருட காலங்களில் இலங்கை மக்களுக்கு சமாதானமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் அதி உயர்மட்ட அதிகாரம் உள்ளவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு ஒத்த சிந்தனைப் போக்குள்ள நாடுகளுடன் இணைந்தும் தனித்தும் எனது அரசாங்கம் முயன்று வந்தது.

இந்த மூன்று வருட காலத்தின்போது நிலைத்திருக்கக் கூடிய தேசிய நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுவதற்கான தனது சொந்த மார்க்கத்தை வகுத்துக்கொள்ள இலங்கைக்கு போதிய கால அவகாசமும் வாய்ப்பும் காணப்பட்டது.

மிக அண்மையில் கூட இலங்கை அமைத்துக் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையை ஊக்கப்படுத்தினோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை முன்வைக்கும் என நாம் எண்ணியிருந்தோம்.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் வளங்களை சாதாகமாகப் பயன்படுத்துவதற்கு நாம் தனித்தும் ஒரே சிந்தனைப் போக்குள்ள நாடுகளுடன் இணைந்தும் இலங்கையை கூக்குவித்தோம்.

மனித உரிமைகள் பேரவையில் இணைந்து செயற்பட நாம் இலங்கையை ஊக்குவித்தோம். மனிதவுரிமை ஆணைக் குழுவில், யுத்தத்தின்பின் உண்டான நிலைமைகளை வெற்றிகரமாக கையாண்ட பல நாடுகள் அங்கத்தவர்களாக உள்ளன.

இந் நாடுகளின் பல்வகையான அனுபவங்களிலிருந்து இலங்கை நன்மையடைய ஊக்குவித்தோம்.

தலைவர் அவர்களே! மதிப்புமிக்க பிரதி நிதிகளே! தேசிய நல்லிணக்கும் மற்றும் பொறுப்புக்கூறுதல் என்பவற்றை வளர்த்தெடுக்க அர்த்தபூர்வமான ஏற்பாடுகள் இல்லாமல், நிலைபேறான சமாதானத்தை அடைய முடியாது.

தன் சொந்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளை செயற்படுத்துவதில் இலங்கையின் ஊக்கமின்மை மற்றும் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப் படாத, விளக்கமளிக்கும் பொறுப்பு தொடர்பான பிரச்சினையை கையாள அவசியமான மேலதிக ஏற்பாட்டின் தேவை என்பவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த மிதமான சமநிலைப்பட்ட தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கனத்தில் கொண்டு நிறைவேற்றுவது பொருத்தமாக இருக்கும்.

இலங்கை தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்தவும், நிலைபேறான நல்லிணக்க முயற்சிக்கு அடித்தளமாக்க அமையக்கூடிய பொறுப்புகூறும் கடப்பாட்டை நிறைவேற்ற தேவையான முயற்சிகளை மேற்கொள்ளவும் இலங்கையை ஊக்குவிப்பதாக இந்தத் தீர்மானம் உள்ளது.

இதற்கு மேலாக இந்தத் தீர்மானம், மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகருடன் இணைந்து மனித உரிமைகள் தொடர்பில் செயற்படவும் இந்தப் பதவி வழியாக வரக் கூடிய நிபுணத்துவ சேவையால் நம்மையடையவும் இலங்கையை ஊக்குவிக்கும்.

இந்த முன்மொழிவுகள் நியாயபூர்வமானவை. இவை ஆக்க பூர்வமானவை. நிலைமைக்கேற்ப கவனமானதாக பொருத்தமானதாக இந்த முன்மொழிவுகள் அமைந்துள்ளன. மார்ச் 8இல் எமது முறை சாராத அமர்வின் போது எந்தவொரு பிரதிநிதி குழுவும் எழுத்து மூல திருத்தங்களை முன் மொழியவில்லை.

முடிபாக ; இந்தத் தீர்மானம், சமத்துவம், கௌரவம், நீதி, சுயமரியாதை என்பவற்றுடன் கூடிய நிலைபேறான சமவாய்ப்பு வழங்கும் சமாதானத்தை அடைய இலங்கை மக்களுக்கு உதவுவதை நோக்கமாக கொண்டது என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன் என்றார். (எ-11)

## இராணுவத்தை...

கொடுக்க வேண்டும். காணாமல் போனவர்கள், காவலில் உள்ளவர்களை கணக்கெடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டித் தருவது, சுகாதாரம் சீர் செய்வது, கண்ணிவெடி அகற்ற முற்படுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா உதவி செய்யும்.

உயர் பாதுகாப்பு வலயங்களின் எண்ணிக்கையை இலங்கை அரசாங்கம் குறைக்க வேண்டும். இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு சொந்தமான இடங்களை ஒப்படைக்க வேண்டும். தமிழர்கள் பகுதியில் இருந்து இராணுவத்தை திரும்பப் பெற வேண்டும் என்றார் அவர். (எ-11)

## எம்.பிகளின்...

தாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராக அவர்கள் வாசகங்களைக் கொண்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது;.

இவ் ஆர்ப்பாட்டதில் பிரதமர், ஆளுந் தரப்பின் பிரதான அமைப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நாட்டில் சகல இடங்களிலும் அரச ஆதரவாளர்களினால் பல்வேறு கோணங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டபோதும் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வாக்களிப்பு...

வருமாறு,

**தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள்:-**

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பெனின், கமரூன், சிலி, கோஸ்டரிக்கா, செக் குடியரசு, குவாத்தமாலா, ஹங்கேரி, இந்தியா, இத்தாலி, லிபியா, மொறிசியஸ், மெக்சிக்கோ, நைஜீரியா, நோர்வே, பெரு, போலாந்து, மோல்டோவா, ருமேனியா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, உருகுவே.

**இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள்:-**


பங்களாதேஷ், சீனா, கொங்கோ, கியூபா, ஈக்வடோர், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, மைவுரிடானியா, பிலிப்பைன்ஸ், கட்டார், ரஷ்யா, சவூதி அரேபியா, தாய்லாந்து, உகண்டா.

வாக்களிக்காத நாடுகள்:-

அங்கோலா, போர்சுவானா, பேர்கினா பசோ, ஜிபுடி, ஜோர்டான், கிர்கிஸ்தான், மலேசியா, செனகல். (எ-11)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தசாமி



கற்கோவளம் பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், அமரர்களான சுப்பிரமணியம் செல்லம்மாவின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இராசலட்சுமி, இராசரஞ்சிதம், அருட்செல்வன் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், பாராளுமன்ற பணியாளர் சபை, பத்திரமுல்ல) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை), ஸ்ரீரங்கன், அன்பரசி (வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சசிராஜ் (LB Finance), கோபிராஜ், கபில்ராஜ், குணராஜ், விஜிராஜ், யசோராஜ், அனுஷன், டிரோஜினி, நிலோஜினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈதகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்கோவளம், பருத்தித்துறை. (C-6133)

தகவல்: குடும்பத்தினர்
0778736719, 0770797040

# 'தனி ஈழம் ஏற்பட வேண்டும்' இதுவே கலைஞரின் குறிக்கோள்



இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உயிர்தப்பிய தமிழர்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டன. பெண்கள் பாலியல் சித்திரவதை செய்து ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் 24 நாடுகளின் ஆதரவோடு வெற்றிபெற்றது.

இது குறித்து திமுக தலைவர் கருணாநிதி கூறியதாவது,

இலங்கைத் தமிழர்களுக்கு புரிந்த கொடுமைகளுக்கு பரிகாரம் தேட ஐ.நா.வழி வகுக்கும். இந்த தீர்மானத்தால் உலகத்தின் முன் இலங்கை தலை குனிந்து பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

மீண்டும் இலங்கை தமிழர்களுக்கு எந்த கொடுமையும் நடக்காது என நான் நம்புகிறேன்.

இதை எதிர்த்து வாக்களித்த நாடுகளுக்கு மனிதாபிமானத்தின் மீது நம்பிக்கை இல்லை.

தனி ஈழம் ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது குறிக்கோள். ஆனால், போராளிகளுக்குள் ஏற்பட்ட சகோதர யுத்தம் தமிழ் ஈழம் அமைப்பதைக் கெடுத்து விட்டது. இலங்கைக்கு எதிராக வாக்களித்ததற்காக பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் சோனியா காந்திக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கருணாநிதி தெரிவித்தார். (எ-11)

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

அனுபவமும் அர்ப்பணிப்பும் நிறைந்த விசேட தர நிர்வாக சேவையாளரும் சர்வதேச மகளிர் தினம் - 2012 இல் "இலங்கைத் தீவின் பெண்களுக்கான தேசிய மரியாதை" நிழ்வில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால்



கௌரவிக்கப்பட்ட தமிழ் பெண்மணியும் யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான

**திருமதி இமெல்டா சுகுமார்**

அவர்களை உளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி கிழக்கு உ.அ.அதிபர் பணிமனை சமூகம்.

(C-6131)

# ஆதரவாக 15 நாடுகள்...

இலங்கைக்கு சார்பாக பிரேரணையை எதிர்த்து வாக்களித்தமை பெரும் திருப்தி அளிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அந்நாடுகள் மீது பல்வேறு வகையில் செலுத்தப்பட்ட கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் 15 நாடுகள் இலங்கைக்கு வாக்களித்தமை எமக்குப் பெரும் திருப்தி அளிக்கிறது. அந்நாடுகளுக்கு எமது நன்றியையும் ஆழ்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாக்களிப்பில் கலந்து கொள்ளாததன் மூலம் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க மறுத்த 8 நாடுகளுக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

15 நாடுகள் எதிர்த்தமை மற்றும் 8 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றாத நிலையில் இறுதி முடிபானது 47 அங்கத்தவர்களைக் கொண்ட மனித உரிமைகள் பேரவையில் 23 நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை.

24 நாடுகள் அதை ஆதரித்தன.

இவற்றுக்கிடையிலான வித்தியாசம் இந்தளவு குறைவானதாகும்.

இந்த அனுபவத்தில் மிகக் கவலையளிக்கும் விடயம் என்னவென்றால், மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற வாக்களிப்பானது குறித்த விவகாரத்தின் தகுதி அடிப்படையில் அல்லாமல் தீர்மானத்துடனோ அல்லது தீர்மானம் தொடர்பான நாட்டின் சிறந்த நலன்களுடன் சம்பந்தமில்லாத தந்திரோபாயக் கூட்டணிகள் மற்றும்ஏனைய நாடுகளின் உள்ளூர் அரசியல் விவகாரங்களின் அடிப்படையில் இடம்பெற்றதாகும்.

இது மனித உரிமைகள் பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கங்களுக்கு முரணானது.

ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் சக்தி வாய்ந்த நாடுகள் தலையிட முடிபதற்கான ஆபத்தான முன்னுதாரணம் ஏற்படுத்தப்படும் ஆபத்துக் குறித்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த பல நாடுகள் உணர்ந்திருந்தன.

இது எந்தவகையான விதிமுறைகள் அல்லது அளவுகோல்களினால் நிர்வகிக்கப்படாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தன்னிச்சையான செயன்முறையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை எமது கொள்கையானது அனைத்து விடயங்களும் எமது நாட்டு மக்களின் முக்கியமான நலன்களினால் ஆளப்படுவதாக தொடர்ந்தும் இருக்கும்.

இதில் வேறெந்த வகையான பரிசீலனைகளுக்கும் இடமில்லை என்றுள்ளது. (எ-11)

# ஜெனிவாத் தீர்மானத்தால்...

வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் இலங்கை தொடர்பில் வெளியிட்ட விசேட அறிக்கையொன்றை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிரந்தர நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் ஊடாகவே மாத்திரம் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். இதற்கான சமிக்ஞையை அமெரிக்கா சர்வதேச சமூகத்துடன் இணைந்து வழங்கியுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு சமூகம் உதவுவதற்கு தயாராகவுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கை மிகத் தெளிவாக உள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான சிபார்சுகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதுடன் பொறுப்புக்கூறலுக்கு தேவையான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு சரியான இலக்கினை அடைவதற்கு உதவி செய்யவும் அமெரிக்கா தயாராகவுள்ளது. எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை விரைவில் சந்திக்கவுள்ளேன்.

இலங்கை அரசுடன் ஆக்கபூர்வமாக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் உறவினைத் தொடர்ந்து கட்டியெழுப்பவுள்ளோம். அத்துடன் இலங்கை மக்களுடனான எங்களின் பங்கினையும் பலப்படுத்தவுள்ளோம் என்றார். (எ-11)


## வேலையாட்கள் தேவை

AJ Systems i Pvt Ltd வவுனியா கிளைக்கு CCTV, POS (Point of Sale) Systemற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்பு: 0759237546
0759997798
info@aj-sys.lk

(7783)

## Diploma in Singalam

MCS முழு தேர்ச்சி+சான்றிதழ்
Supported By UNDP/JRRP
324, Palaly road, Parameswara junction, Jaffna
SMS your name & course to 772 395 895 & Get Scholarship

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

சனி ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் 24.3.2012

காலம் : 1 - 3 மாதம் பயிற்சிக்கட்டணம் : ரூபா 3000/-

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - காலை 8 - 9
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 10 - 11

பாடசாலை மாணவர்களின் சனி, ஞாயிறு பிரிவு

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி – மாலை 1 – 2
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் – மாலை 3 – 4

அனுமதி கட்டணம் : ரூபா 500/- மாதம் : ரூபா 500/- மட்டும்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முதலில் வருவோருக்கே அனுமதிக்கு முன்னுரிமை)

நாளை மட்டும் 24.03.2012 பயிற்சியில் சேரும் அனைவருக்கும் Complete English Book (Spoken/Grammar) இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் சம்பளத்துடனான வேலைவாய்ப்புகள்

O/L A/L ? Pass / Fail

CIMA-UK 50% off Course fee | Software Engineering | BIT University of Colombo Sem 1,2,4,6 & Project | Multimedia Adobe



SMS your name & course to 772 395 895 & Get Scholarship

USA, UK, பல்கலைக்கழகங்களில் Master Degree

Closing Date 24.03.2012

Government Scholarship.

MCS Supported By UNDP/JRRP

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.

Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Diploma courses..

## மங்கலகரமான திறப்பு விழா

"வடக்கின் வசந்தம்" அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், எமது நிறுவனத்தினரால் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான, இல. 128, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் இன்று 23.03.2012 ஆம் திகதி காலை 07.30 மணியளவில் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படவுள்ளதென்பதை வாகன ஓட்டுநர் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

தவிசாளரும் இயக்குநர்களும்
லிவபூள் நெவிக்கேஷன் (வ/து) நிறுவனம்

(7780)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.